
# சாயி மார்க்கம்

ஜனவரி - ஜுன் 2014





## தேசிய இளைஞர் மாநாட்டு சிறப்பிதழ்

இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்

தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சாயி இளைஞர் மாநாட்டு நிகழ்வுகள்

# சாயி மார்க்கம்
# Sai Markam


மலர்: 21 | ஒரே ஒரு மதம் அது | ஜனவரி - ஜூன்
இதழ்: 52 | அன்பென்னும் மதம் | 2014



**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442



இலங்கையில் தனிப்பிரதி ரூபா 50.00
வருடச் சந்தா ரூபா 200.00 (4 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 01601004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.


## உள்ளே......


ஆசிரியர் தலையங்கம் 02

தேசிய இளைஞர் மாநாடு 2014
முதலாம் நாள் உரைகள் 03

தேசிய இளைஞர் மாநாடு 2014
இரண்டாம் நாள் உரைகள் 14

பக்தி 18

இலட்சிய வாழ்வு 20

யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் பிஜு
ஆற்றிய உரை 25

மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையில் பிஜு
ஆற்றிய உரை 33

சத்திய சாயி பாபாவின் அற்புதங்கள் 38

கல்வியின் நிறைவு ஒழுக்கம் 39

நிறுவனச் செய்திகள் 40





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஆசிரியர் தலையங்கம்

# மாநாடு



மாநாடுகள் உலகளாவிய ரீதியிலும் தேசிய ரீதியிலும், மாகாண அல்லது மாவட்ட ரீதியிலும் நடாத்தலாம். ஒவ்வொரு மாநாட் டிற்கும் மையப்பொருள் தேர்ந்தெடுக்கப்படும். மாநாடுகள் பல வகைப்படும். விஞ்ஞானம், மதம், ஆன்மீகம், மருத்துவம், பொருளாதாரம்ஈ அரசியல், தொழில் வாய்ப்பு, சுற்றாடல் பேணல் ஆகியவையாகும்.

பல விற்பன்னர்கள், உலகத் தலைவர்கள், நிறுவனங்கள் ஒன்றாககூடித் தத்தமது நோக்கை அடைவதற்குரிய வழிவகைகளை ஆராய்வார்கள். பலர் ஒன்றுகூடி தமது ஆழ்ந்த அறிவை, அனுபவத்தை, விளக்கத்தை மாநாட்டில் கூறும் பொழுது எல்லோருக்கும் மேலதிகமான தெளிவான விளக்கங்களும், உந்துதல்களும் கிடைக்கும். தொடக்கத்தில் முரண்பாடுகள் இருந்தாலும் முடிவில் ஒற்றுமையும் ஒருமித்த கருத்தும் ஏற்பட்டு அபிப்பிராய பேதங்கள் களையலாம்.

சத்திய சாயி சேவா நிறுவனங்களும் (இந்தியா, சர்வதேசம்) பிரசாந்தி நிலையத்தில் சுவாமியின் முன்னிலையில் பலமுறை கூடிப் பிரகடனங்கள் வெளியிட்டுள்ளார்கள். இவற்றின் முடிவில் சுவாமியின் அருளுரை முக்கிய வழிகாட்டியாக அமைந்தது. இளைஞர்கள் மாநாடும் உலகளாவிய ரீதியிலும் தேசிய ரீதியிலும் நடந்துள்ளன. தேசிய ரீதியில் 2010 ஆம் ஆண்டு குருநாகலிலும், 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும், இவ்வாண்டு வவுனியாவிலும் நடந்துள்ளத. இதைதிட்டமிட்டு நடத்தியது இளைஞர்களுக்கு ஒரு பெரிய அனுபவம் ஆகியது. பல இடங்களில் இருந்து வந்து ஒன்றாகக்கூடி உணவு அருந்தி, ஒன்றாக தங்கியவை எல்லாம் ஓர் சிறந்த அனுபவமாகும். தங்களின் பேச்சு, கலைத்திறன்கள் ஆகியவற்றையும் வெளிக்கொணர வாய்ப்புக் கிடைத்தது.

இம் மாநாடுகளுக்குப் பிரசாந்தி நிலையத் திலிருந்து சிறப்பு விருந்தினர்கள் பங்காற்றி யுள்ளார்கள் இவர்கள் சுவாமியோடு பல விதத்தில் பணி புரிந்துள்ளார்கள். கூடிக் கதைத்துள்ளார்கள். இவர்கள் சுவாமியிடம் படித்த பாடங்கள் ஏராளமானவை வெளியிடப்படவில்லை. இவர்கள் தங்கள் அனுபவங்களையும், ஆழ்ந்த கருத்துக்களையும் இதய பூர்வமாக சுருக்கமாகக் கூறினால் சுவாமியே இவர்கள் மூலம் எங்களுக்கு உரை நிகழ்த்தியுள்ளார். இதன் முக்கியத்துவம் சொல்லில் அடங் காதது. நாமும் வருங்காலச் சந்ததியினரும் மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பின்பற்று வதற்காக எம்மால் முடிந்தளவு ஆவணப் படுத்தி வைக்க வேண்டும்.

இந் நோக்கில் இவ்வாண்டு நடந்த மாநாட்டில் அளித்த உரைகள் அனைத்தையும் ஓரளவு முழுமையாகவும் உரை நிகழ்த்தப்பட்ட விதத்திலும் தமிழாக்கம் செய்து இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஸமஸ்த லோகா சுகினோ பவந்து

ஜெய் சாயிராம்

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தேசிய சாயி இளைஞர் மாநாடு 2014

அதிகாலை வவுனியா சாயி நிலையத்தில் ஓம்காரம், சுப்ரபாதம், வேதம் ஓதுதல் என்பவற்றின் பின்பு மாநாடு மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

மண்டபத்தை அடைந்ததும் வேதம் ஓதுதல், மற்றும் விருந்தினர்களை அழைத்து வருதல், மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பித்தது.

பிரதம விருந்தினரான வைத்தியக்கலாநிதி. வி.ஜெகநாதன் (மத்திய சபை தலைவர்), அவரின் பாரியார், திரு.தெ.ஈஸ்வரன் ஐயா, சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்த புருஷ்டி சகோதாரர் களையும், ஏனையோர்களையும் தேசிய இளைஞர் இணைப்பாளரான சகோதரன் வி.ரி.எஸ்.சிவோதயன் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

(தேசிய இளைஞர் இணைப்பாளர் அன்பன் சிவோதயன் அவர்களின் அறிக்கையின் தமிழாக்கம்)

மேற்கூறிய மாநாடு வவுனியாவில் மார்ச் மாதம் வவுனியாவில் 14, 15, 16 ஆம் திகதிகளில் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் மாநாட்டின் மையப் பொருள் "கடமை, கட்டுப்பாடு, பக்தி" (இலக்கண வாழ்க்கை வாழுங்கள்) என்பதேயாகும். நாடு முழுவதிலுமிருந்து 329 இளைஞர்கள் யுவதிகள் கலந்து கொண்டிருக்கின்றீர்கள்.

பிரதம விருந்தினரை உரை நிகழ்த்துமாறு அன்புடன் கேட்கப்பட்டது.



டாக்டர்.வி.ஜெகநாதன் அவர்களின் உரை:
(உரை தமிழில் இருந்தாலும் திரையில் சாராம்சம் ஆங்கிலத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.)

சுவாமியிடம் பிரார்த்தித்து, மாநாடு முயற்சி அனைத்தையும் அவரிடம் சமர்ப்பித்து உரையை ஆரம்பித்தார். இம்மாநாட்டின் கருப்பொருள் 3D களாகும். அவையாவன கடமை (Duty) ஒழுக்கக்கட்டுப்பாடு (Didpline), பக்தி (Devotion) ஆகியவையேயாகும். பல மேடைகளில் இளைஞர்கள் வருங்காலத் தலைவர் களென பலர் கூறியதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் சாயி இளைஞர்களோ இன்றைய தலைவர்களாவார். அவர்களே இம்மாநாடு முழுவதையும் திட்டமிட்டு நடத்துகிறார்கள். இம்மாநாடு மூலம் அவர்களின் திறமை மேலும் விருத்தியடையும். மனிதர்களின் இதயத்தில் இடம்பிடித்த தலைவர்களில் சிலர்: மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, ஆபிரகாம் லிங்கன், அன்னை தெரேசா, அப்துல்கலாம் என நாம் வரிசைப்படுத்தலாம். இவர்கள் நல்ல தலைவர்களாக வாழ்ந்து காட்டினார்கள். இவர்கள் தன்னலமின்றி மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார்கள்.

நல்ல தலைவனின் தகமைகள் என்ன?

- எண்ணம், சொல், செயலில் தூய்மையும், ஒருமையுமாகும்.
- அடித்தளமான அன்பிலிருந்து ஏனைய அடிப்படை மனிதமேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, இன்னா செய்யாமைஆகிய பண்புகளாகும். இவை எண்ணம், சொல், செயலில் வெளிப்பட வேண்டும். இதுதான் சுவாமி தந்த எஜுகெயரின் தத்துவமாகும். மனதில் இருந்து எழுவதே எண்ணம், இந்த மனம் அடிப்படை ஐந்து மனித மேம்பாடுகளை வெளிக்கொணர வேண்டும். மனித மேம்பாடுகள் ஆத்மாவிலிருந்தே எழுகின்றன. இவை மனச்சாட்சியின் குரலேயாகும்.

இப்போதைய நிலை என்ன?

தலையில் குழப்பம், கலக்கம் பெற்றோரால் திணிக்கப்பட்ட கோட்பாடுகள், பாரம்பரிய கல்வி முறை, சுற்றாடல் தாக்கம், ஊடகங்கள், பொப் இசை, தொழில்நுட்ப அதீத வளர்ச்சி, மின் ஊடகங்கள், ஆசைகள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் நிலையற்ற உணர்வுகள், வயதுக் கேற்ற உடல், உள மாற்றங்கள், அடி அறி மனதிலுள்ள பதிவுகள் எல்லாம் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இவையெல்லாம் ஆத்மாவின் வெளிப் பாட்டைத் தடைசெய்கின்றன. மனச்சாட்சி உதாசீனம் செய்யப்படுகின்றது. எதிர்மறை சக்தி வலுவடைந்துள்ளது. எப்படிச் சீராக்குவது? பிழையான பாதையிலிருந்து சரியான பாதைக்குப் போக வேண்டும். எங்கிருந்து வந்தோமோ அங்கு போக வேண்டும். அதாவது U Turn முழுமையாக திசை திருப்ப வேண்டும். சீராக்க முடியுமா? இதையடைய சுவாமி எங்களுக்கு ஐந்து Dகளைத் தந்துள்ளார். மனதைத் தூய்மைப் படுத்தும் அழுக்கு நீக்கி. நாம் இம் மாநாட்டில் 3 Dயைப் பற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆராய்வோம். வந்திருக்கும் சிறப்புப் பேச்சாளர் ஆழமாக எங்களுக்குச் சொல்ல இருக்கிறார்.

ஜெய் சாயிராம்

அடுத்த பேச்சாளர் திரு.தெ.ஈஸ்வரன் அவர்கள். இவர் சத்திய சாயி மத்திய அறக்கட்டளைத் தலைவரும் முன்னாள் வணிக சம்மேளனத் தலைவரும் தேயிலை ஏற்றுமதிக் கம்பனியின் உரிமையாளரும் ஆவார். அவருக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு "இலட்சிய வாழ்வு"



ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது.. எனும் பாடலுடன் தொடங்கினார். சத்திய சாயி பாபாவின் பாதாரவிந்தங்களுக்குச் சமர்ப்பணம். சுவாமி நீங்கள் வழி நடத்த வேண்டும். அனைவருக்கும் சாயிராம். இந்த மாநாட்டு முடிவில் இளைஞர்கள் வெளியேறும் போது ஒளிமயமான எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு வெளியேற வேண்டும்.

ஷீரடி சாயி பாபா மகா சமாதி அடையமுன்பு தனது சமாதியின் பின்பும், சமாதியிலுள்ள எலும்பும் பக்தர்களுடன் பேசும், அவர்களைப் பாதுகாக்கும், அவர்களின் துயரைத் துடைக்கும் என்று பிரகடனம் செய்தார். இப் பிரகடனம் அடுத்த அவதாரமான பகவான் சத்திய சாயி பாபாவுக்கும் பொருந்தும். சுவாமி விரும்பும் வகையில் நாம் செயற்பட வேண்டும். வாழ வேண்டும்.

ஒரு கதை: ஒருவனுக்குப் பணம் தேவைப்பட்டது. அவன் லாட்டரி சீட்டு விழவேண்டு மென்று இறைவனைப் பிரார்த்தித்தான். கொஞ்சக் காலம் போக அடுத்த வீட்டுக்காரனுக்கு சீட்டு விழுந்தது. இவன்தான் பிரார்த்தித்தும் கிடைக்க வில்லையென்று ஏமாற்றம் அடைந்தான். இருந்தாலும் தொடர்ந்து பிரார்த்தித்தான். கொஞ்ச நாளில் இன்னொரு அயல் வீட்டவனுக்குச் சீட்டு விழுந்தது. இவனுக்குப் பொறுக்க முடியவில்லை. இறைவனைக் கோபித்து " நான் இவ்வளவு நாள் பிரார்த்தனை செய்தேன். பிரார்த்தனை செய்யாத வர்களுக்கு சீட்டு விழுந்துள்ளது. ஏன் என்னைக் கவனிக்கவில்லை?" என்று இறைவனை நொந்து கேட்டான். இதற்கு இறைவன் "உனக்குச் சீட்டு விழுவதற்கு நீ சீட்டை வாங்கியிருக்க வேண்டுமல்லவா? சீட்டு வாங்காமல் எப்படிச் சீட்டு விழும் முதலில் சீட்டை வாங்கு"என்று அறிவுரை சொன்னார். முதல் முயற்சி பின்பு இறையருள், இவற்றுடன் வெற்றி கிடைக்கும்.

செடிக்கு நீர் வேண்டும்.
சிங்கத்திற்கு மாமிசம் வேண்டும்.

ஆனால் மனிதனுக்கோ கடவுள் "தெரிவு"என்ற பொக்கிஷத்தைக் கொடுத்துள்ளார். இதை எப்போதும் உபயோகிக்க வேண்டும். உதாரணம்: இரண்டு செம்புப் பாத்திரங்கள் உள்ளன. ஒன்று களிம்பினால் மூடப்பட்டுள்ளது. மற்றையது பளிச்சென்று பிரகாசமாயிருக்கிறது. களிம்பு பிடித்த செம்பாயிருக்க விருப்பமா? அல்லது பிரசாகமான செம்பாயிருக்க விருப்பமா? தெரிவு எங்கள் கையில் உள்ளது. களிம்பு பிடித்த செம்பை புளிபோட்டு விளக்கினால் அதுவும் பிரகாசிக்கும். களிம்பை அகற்றிப் பிரசாசிக்க எங்களிடம் ஆற்றல் உள்ளது. தெரிவும் எங்கள் கையில் உள்ளது.

**பாரதியாரின் பாடல்:**
தேடிச் சோறு உண்டு
பழங்கதைகள் சொல்லி.... காலத்தை
வீணாக்கப் போகிறாயா?

**திருநாவுக்கரசு நாயனாரும்:**
பாலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோளில்லாது கெட்டேன்" என்று புலம்பினார்.

கடவுள் தந்த தெரிவைக் கையில் வைத்துக் கொண்டு குறிக்கோளுடன் வாழ வேண்டும். இலட்சியம் வேண்டும். சாதரணமான மனிதனாக வாழப் போகிறாயா? அல்லது உதாரண புருஷனாக சிறந்த மனிதனாக வாழப்போகிறாயா? தெரிவு உன் கையில் உள்ளது.

**திருவள்ளுவர் கூறினார்:**
:ஒழுக்கம் விழுப்பம் தரலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" (131)

ஒருவனுக்கு மேன்மையுண்டாக்குவது நல்ல நடத்தை தான். அதனால் நல்ல நடத்தையை "ஒழுக்கத்தை" உயிரைவிடச் சிறந்ததாகப் பாதுகாக்க வேண்டும். உயிர் போனால் வராது. இதிலும் பார்க்க மேலானது. ஒழுக்கம். ஒழுக்கமே புகழ், பெருமை,உயர்வு எல்லாம் தரும்.

இலட்சிய வாழ்க்கை வாழ எதையும் சாதிக்க நான்கு குணங்களைத் தவிர்க்க வேண்டுமென்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.
"நெடு நீர் மறவி மடி துயிலுண்டுவ்
கெடுநீரார் காமக் கலன்" (605)

நல்ல வாழ்க்கை நடத்த விரும்புகிறவர்கள் விலக்க வேண்டிய குற்றங்களாவன:

சோம்பல், காரியம் செய்வதில் தாமதம், கடமைகளை மறந்திருத்தல், மிகுந்த தூக்கம் ஆகியவையேயாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முயற்சி திருவினையாக்கும் என்பதைத் திருவள்ளுவர் பின்வரும் குறளில் தந்துள்ளார்.

"முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்" (616)

விடாமுயற்சியுடன் காரியம் செய்ய வேண்டும். இல்லாவிடில் அடுத்தடுத்து முயற்சி செய்கிறவர் களுக்குச் செல்வம் அதிகப்படும். முயற்சி இல்லாதவர்களுக்குள்ள செல்வம் குறைந்து வறுமையும் வந்து விடும்.

உதாரணம்: இரு கடைகள் இருந்தன. இரண்டிலும் சாமான்கள் ஒரே மாதிரியும், விலைகளும் ஒரே அளவாகத்தானிருந்தன. ஒரு கடையில் விற்பனை அதிகம். மற்றைய கடையில் விற்பனை குறைவு. வியாபாரம் கூடிய கடையில் முயற்சி, மனித விழுமியங்கள் கடைப்பிடிக்கப்பட்டன.

இறை வழியில் செல்பவர் சிலர் செல்லாதவர் பலர் என்பதை பின்வரும் குறளில் படிக்கலாம்.


"இவர் பலராகிய காரண நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்" (270)

சரியான முறையில் தவம் செய்கிறவர்கள் சிலரே. அப்படிச் செய்யாத துறவிகளே பலர் அதாவது தன்னுயிர் பெரிது என்ற ஆசையும், தான் பெரியவன் என்ற அகங்காரமும் முற்றும் அற்றுப் போனவர் சிலரே இவ்விரண்டாலுமே இறைவனது அருளைப் பெறலாம்.

அடுத்து மேன்மையானது ஈகை, தர்மம் செய்வதற்குப் பொருள் வளம் தேவையில்லை. செய்யும் மனமே வேண்டும். விளம்பரம் இல்லாது அமைதியாகச் செய்ய வேண்டும். இரு கதைகள்:

இரு பையன்களின் சம்பாஷனை. ஒருவன் என்னிடம் இரு வீடுகள் இருந்தால் ஒன்றை உனக்குத் தருவேன். இரு வண்டிகள் இருந்தால் ஒன்றை உனக்குத் தருவேன்." ஆனால் உன்னிடம் இரு பென்சில்கள் உண்டு. எனக்கு ஒன்றைத் தருவாயா?"ஆகா மாட்டேன் என்றான். இல்லாததைக் கொடுக்க விருப்பம் என்று உரக்கச் சொன்னவன். இருப்பதைக் கொடுக்க விருப்பம் இல்லை இது பாசாங்கு. சிலர் விளம்பரத் திற்காகத் தான தர்மம் செய்வார்கள். இதுவும் சரியல்ல.

மற்றைய நிகழ்வு. மில்லர் என்ற ஒரு பத்திரிகை ஆசிரியர் வேலை செய்யும் கந்தோரில் ஒரு வறுமையான சிறுவன் காலணி இல்லாது வந்து போவதைக் கவனித்து ஒரு சோடி செருப்பு வாங்கிக் கொடுத்தார். சிறுவனும் மகிழ்ச்சியுடன் அணிந்து வந்தான். ஒருநாள் செருப்பு இல்லாமல் வந்ததைக் கவனித்த ஆசிரியர் ஏன் செருப்புப் போடவில்லை என்று கடிந்து கேட்டார். சிறுவன் தான் புகையிரதத்தில் ஏறும் பொழுது ஒரு காலணி கழன்று விட்டதால் மற்றதால் பலன் ஏதும் இல்லை என்று நினைத்து காலில் இருந்த மற்றையதையும் கழற்றி முன்னைய செருப்பு இருந்த இடத்திற்கு எறிந்தான். இப்போது யாராவது இரண்டையும் போட்டுக் கொள்ளலாம் தானே. ஒன்றால் ஒருவரும் பயனடைய முடியாது தானே. என்று சொன்னான். பத்திரிகை ஆசிரியர் அவனது ஈகைத் தன்மையை மெச்சி கட்டியணைத்து இன்னொரு சோடி காலணி வாங்கிக் கொடுத்தார்.




ஈகைக்கு கர்ணனை மிஞ்சியவர்கள் இல்லை. எவ்வளவு அம்புகள் எய்தாலும், கர்ணன் மடிகிறான் இல்லையே என்று அர்ஜுனன் கண்ண பிரானிடம் உதவி கேட்கிறான். கர்ணனைத் தர்ம தேவதை பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. கிருஸ்ண பரமாத்மா பிராமண வடிவம் கொண்டு கர்ணனிடம் போய் தர்மம் வேண்டுகிறார். எதைத் தரலாம் என்று கேட்க அவனது முழுப் புண்ணியத்தையும் தருமாறு கேட்க, கர்ணன் தனது இரத்தத்துடன் தனது புண்ணியங்கள் அனைத்தையும் தாரை வார்த்துக் கொடுத்தான். இதனால் வரும் புண்ணியத்தையும் சேர்த்துக் கொடுத்தான். இந்நிகழ்வின் போது தான் இறைவனின் கைகள் கீழிருக்க மனிதனின் கைகள் மேலேயிருந்தன. ஈகையின் பெருமைக்கு ஈடில்லை. எப்பொழுதும் எங்கும் ஈகை செய்ய வேண்டும். இல்லை என்று சொல்லாத மனம் வேண்டும். இதைத்தான் பகவான் சேவை செய்யும் கைகளே!, வணங்கும் கைகளையோ, இதழ்களையோ விட மேலானது என்று சொல்லியுள்ளார்.

"மானிட சேவை மாதவன் சேவை"

"இராம சேவை கிராம சேவை"

"எப்பொழுதும் உதவி செய், ஒருபோதும் தீங்கு செய்யாதே"

என்று பகவானும் வலியுறுத்தியுள்ளார். இயேசு பிரானும் இதையேவலியுறுத்தியுள்ளார்.

"நான் தொண்டு செய்யவே வந்துள்ளேன்
தொண்டு பெற வரவில்லை"

"பணி புரிய, ஆறுதல் அளிக்க, பசித்தவனுக்கு உணவு கொடுக்க, குளிரில் நடுங்கியவனுக்கு கம்பளி கொடுக்க, உயர்த்தும் கைகளே எனக்காக உயர்த்தும் கைகள்" என்றும் கூறியுள்ளார்.

ஒருநல்ல செயல் எவ்வாறு இன்றும் பல நல்ல செயல்களைச் சங்கிலித் தொடர் போலாக்குகிறது. என்று ஒரு குறு வீடியோ படமும் காண்பித்தார்.

"மனம் தான் உடல்களை வீழ்த்தி விடும்
அது தான் உங்களை உயர்த்தியும் விடும்"

ஜெய் சாயிராம்

தேசிய இளைஞர் மாநாட்டின் தொடர்ச்சி அடுத்த பேச்சாளராக சிறப்பு விருந்தினர் பிஜு புருஷ்டி (Bishu Prusty) அவர்கள் அறிமுகம் செய்யப்பட்டு அழைக்கப் பட்டார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்: இவர் 11 ஆம் ஆண்டிற்காக சுவாமியின் பாடசாலையில் சேர்ந்து, சுவாமியின் பல்கலைக் கழகத்தில் பீ.கொம் பட்டம் பெற்று பின்பு அங்கேயே எம்.பீ.ஏ பட்டமும் பெற்றார். பின்பு வைத்தியசாலை தகவல் முகாமைத்துவக் கணணி முறையில் (Hospital information management system) விசேட பயிற்சி பெற்று பங்களூரிலுள்ள அதி விசேட வைத்தியசாலையில் கணணிப் பிரிவில் வேலை செய்தார். அங்கு வேலை செய்யும் பொழுது நோய் வாய்ப்பட்டு 2 வருடங்கள் ஆறதலாக இருந்து சாயி வானொலியில் (ரேடியோ சாய்) பணி செய்யுமாறு சுவாமியால் பணிக்கப்பட்டார். அங்கே கடந்த 10 வருடங்களாகப் பணியாற்றுகிறார். அந்த வானொலி யில் பல நேர் காணல்களை நடாத்தியுள்ளார். திறமையான பாடகர்)

இவ் அறிமுகத்திற்குப் பின் சகோதரர் புருஷ்டி அவர்கள் உரையாற்றத் தொடங்கினார்.



அவர் காயத்ரீ மந்திரத்தை மெதுவாக உபாசித்து, ஓர் ஆங்கிலப் பாட்டைப் பாடினார். (தமிழாக்கம்)

ஓ! தெய்வீகத் தாயே? தூய்மையான உன் அன்பினால் எனது இதயத்திலிருந்து வாயால், அன்பு நிறைந்த, பவித்திரமான சொற்களாக வெளிவரட்டும்.

எனது கலன்களெல்லாம் இதனால் நிரப்பப்பட்டு, எனது செயல்கள் அனைத்தும் மனித குலத்திற்கு நன்மை பயக்கும்படி வெளியிடப்படட்டும்.

இதுதான் காயத்ரீ மந்திரத்தின் உண்மையான அர்த்தம். எல்லா மந்திரங்களுக்கும் தாயான மந்திரம். இதை நாம் பல நிலைகளில் விளங்கிக் கொள்ள வேண்டும். பூர், புவ, ஸுவ: மூன்று உலகங்களையல்ல, மூன்று நிலைகளைக் குறிக்கின்றன.

ஒரு பிரபல்யமான பாடகருக்கு நேர்காணல் கிடைத்தது. அங்கே பாடகர் சுவாமியுடன் சம்பாஷிக்கும் பொழுது கால்களை வருடும் பாத சேவை கிடைத்தது. அவர் வருடிக் கொண்டிருக்கும் பொழுது,

சுவாமி: நீ காயத்ரீ மந்திரம் ஜெபிக்கிற னீயா?

பக்தன்: ஆம் என்று சொல்லி மந்திரத்தை ஜெபித்தார்.

சுவாமி: அப்படியல்ல. இப்படித்தான் ஜெபிக்க வேண்டுமென்று சொல்லி ஜெபித்தார். (பக்தர் சுவாமியின் காலை வருடியபடியே இருந்தார்.)

முதலாவது வரி சொன்னதும், பாதங்கள் மெல்ல மெல்ல வெப்பமாக வருவதை உணர்ந்தார். இரண்டாவது வரி சொல்லும் போது பாதங்களின் வெப்பநிலை குறையத் தொடங்கி, மூன்றாவது சாந்தியுடன் சாதாரண வெப்பநிலைக்கு வந்தது. இம் மந்திரத்தை ஜெபிப்பதனால் எங்கள் அன்பு நிலை, பிரபஞ்சத்தின் விழிப்பு நிலை மேலோங்கும் என்பதை மேல் கூறிய அனுபவம் காட்டுகின்றது.

ரிஷிகள் பிரபஞ்ச விழிப்புணர்வு மூலம் பிரபஞ்சத்துடன் தொடர்பை ஏற்படுத்தினார்கள். நாமும் மனித உருவம் எடுத்த அவதாரத்தின் மூலம் பிரபஞ்சத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

நான் உங்கள் முன்னிலையில் நிற்கும் வாய்ப்பைத் தந்ததற்காக பகவானுக்கு மிகவும் நன்றியுடையனாயிருக்கிறேன். இது பகவானால் எனக்குத் தந்த அருமையான ஆசீர்வாதம். இரண்டு மாதத்திற்கு முன்பு ரமணமகரிஷி ஆச்சிரமத்திலிருந் தேன். அங்கு ஒரு சாதகருடன் அளவளாவும் பொழுது, என்னில் ஒரு எண்ணம் உதித்தது. "நான் சுவாமியின் வேலையில் என்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்"என்பதே அந்த எண்ணம். இதே நேரத்தில் சர்வதேச தொலைபேசி அழைப்பு வந்தது. அது சர்வதேசத் தலைவர் டாக்டர்.ரெட்டியிடமிருந்து வந்தது. அவர் என்னை ஸ்ரீலங்காவிற்குப் போய் மாநாட்டில் பங்கேற்க முடியுமா? எனக் கேட்டார். நான் உடனே ஒத்துக் கொண்டேன். எண்ணம் எழுந்ததும் அழைப்பும் வந்தது. இது பகவானின் ஆசீர்வாதம் தான். நான் முன்னர் ஒரு போதும் இந்தியாவை விட்டு வெளியூர் செல்லவில்லை. நான் ஸ்ரீலங்கா சாயி சேவா நிறுவனத் தலைவருக்கும் சகோதரன் மனோவுக்கும் நன்றி கூறுகிறேன். இதயத்திலிருந்து வெளிவரும் எதுவும் இதயத்தினால் விளங்கிக் கொள்ள முடியும். திரு.தெ.ஈஸ்வரன் சிறு பையன் காலணியை கழற்றி வீசி இன்னொருவருக்கு உதவியாக்கியதை அவர் சொன்னதும் பாஷை தெரியா விட்டாலும் விளங்கிக் கொண்டேன்.

இந்த மாநாடு சிந்தாமணிப் பிள்ளையார் மண்டபத்தில் நடப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கணேசப் பெருமான் சகல தடைகளையும் தீர்ப்பார். எனக்கு இந்த நிகழ்வு மறக்க முடியாததொன்றாகும். ஸ்ரீலங்கா என்பதைக் கேட்டவுடன் நாம் (இந்தியர்கள்) இராமாயணத்தையே சிந்திப்போம். அதிலிருந்து ஒரு நிகழ்வு இலங்கையின் வனப்பையும், செழிப்பையும் கண்ட இலக்குமணன் இராமபிரானிடம் "நாம் ஏன் அயோத்திக்குப் போக வேண்டும் நாம் இந்த அழகிய நாட்டை அரசாட்சி செய்து கொண்டு இருக்கலாமே" என்று விண்ணப்பித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு இராமபிரான் “இலக்குமணா! பெற்ற தாயும், தாய் நாடும் சுவர்க்கத்தைவிட மிகவும் மேலானவை. எனது தாய் நாட்டிற்காக சுவர்க்கத்தையும் விட்டு விடுவேன். அழகான பெண்ணைக் கண்டதும் உனது தாயை மறந்து அவளைத் தாயாக ஏற்றுக் கொள்வாயா? பெற்றதாய் எப்போதுமே தாய் தான்”என்று பதிலளித்தார். (தாயின் பெருமையைப் பற்றிய தமிழ்ப் பாட்டொன்று பாடினார்)

“உயிரும் நீயே, உடலும் நீயே
உறவும் நீயே, தாயே!
உயிரும் நீயே உடலும் நீயே...............”

இப்பாட்டை மாணவர்கள் சுவாமிக்கு முன் பாடினால் சுவாமி மிகவும் ஆனந்தத்திலிருப்பார். சுவாமி எங்களுடன் உரையாடும் போதெல்லாம் “பெற்றோரை மதிக்க வேண்டும், அவர்களுக்கு நீங்கள் பணி செய்ய வேண்டும். அவர்கள் தந்த உடலில், இரத்தத்தில், உணவில், செல்வத்தில் வாழ்கின்றீர்கள். தாய்க்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.” என்று வலியுறுத் துவார்.

சுவாமியின் அன்பைப் பகிர்ந்ததில் **சாயிகீதா** என்ற செல்லப் பிராணிக்கு நிகரில்லை. அந்த யானை மே மாதம் 2007 ஆம் ஆண்டு உடலை நீத்தது. அந்த ஆண்டு சுவாமி கோடைக்கானலிலிருந்து குறிப்பிட்ட நாளுக்கு முந்தியே வந்து விட்டார். அந்த யானையை தானே முன்னின்று அடக்கம் செய்தார். ஜூன் மாதம் எங்களின் கேட்போர் கூடத்திற்கு வந்து தனக்கும் அந்த யானைக்குமிடையே இருந்த அன்பை ஒருவராலும் விளங்கிக் கொள்ள முடியாதென்று சொன்னார். சாயி கீதாவைப்பற்றி சொல்லும் பொழுதெல்லாம் சுவாமியின் கண்கள் கலங்கும். ஏனென்றால் அதுதான் சுவாமியின் **வத்சல்ய** பலத்தின் வெளிப்பாடாகும். இறையன்பு மாத்திரமே தாயன்புக்கு மேலானது. சாயிகீதாவிடம் இருந்து கற்ற பாடங்கள் அநேகம். அவற்றைப் பின்பு சொல்வேன். (தாயன்பைப் பற்றிய பாடலை திரும்ப பாடினார்)

இன்னொரு தாயைப் பற்றிய நிகழ்வு: இவர் வடஇந்தியாவைச் சேர்ந்தவர். அவர் மகனை இழந்து மிகவும் சோகத்துடன் கண்ணீர் வடிய தரிசனத் திலிருந்தார். சுவாமி நேர்காணலுக்கு அழைத்தார். அங்கே அழவேண்டாம். இன்னொரு மகன் பிறப்பாரென்று சொல்லியும் அழுகை நிற்கவில்லை. நேர்காணல் முடிந்து வெளியே வரும் பொழுது, கதவடியில், சுவாமி விபூதி திருஷ்டித்து அந்த ஆன்மாவையே உனக்குத் தருகிறேன் என்று கூறி அனுப்பினார். அவனுக்கு சாயி கிருஷ்ணா என்று பெயர் வைத்தார்கள். சாயி பாடசாலையில் படித்து சாயி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். அவர் சங்கீதத்திலும் திறன் கொண்டி ருந்தார். **சுவாமி எந்தளவுக்குப் போய் இந்தத் தாயின் துயரைத் தீர்த்தார்.** சுவாமி சொல்வார். உங்களின் ஒரு தாயின் அன்பை விளங்க முடியாதனீங்கள் எப்படி கோடி மடங்கான தெய்வீகத் தாயன்பை விளங்க முடியும்!.

இத்துடன் எனது உரையை தற்பொழுது தேநீர் இடைவெளிக்காக நிறுத்துகிறேன். எனது உரையை வேறு விதமாகச் சொல்ல வேண்டும் என்றால் தயங்காது என்னிடம் சொல்லவும்.

உரையின் தொடர்ச்சி:

“உயிரும் நீயே உடலும் நீயே
உளம் நீயே தாயே!
தன்னுடலில் சுமந்து உயிரைப் பகிர்ந்தாய்
சொர்க்கம் என்பதும் நீயே!

என்ற பாடலுடன் தொடங்கினார். மகாராஷ்டிரா மாநிலத்தில் புண்டரீகன் என்ற பக்தன் இருந்தான். அவன் பெற்றோரை மதித்து அவர்களுக்கே சேவை செய்தான். சில காலத்திற்குப் பின்பு அவனது மனப்பாங்கு மாறியது. பெற்றோரை உதாசீனம் செய்து துன்புறுத்தவும் தொடங்கினான். இதைத் தாங்கமுடியாது, பெற்றோர் வீட்டை விட்டு காசிக்குப் போகத் தீர்மானித்தார்கள். இதை அறிந்த புண்டரீகன் தானும் அவர்களுடன் புறப்படத் தீர்மானி த்தான். பெற்றோர் காசிக்குப் போய் இறந்தாலும், அல்லது போகும் வழியில் இறந்தாலும் சொர்க்கமே என்ற முடிவுக்கு வந்தார்கள். எல்லோரும் புறப்பட்டு, வழியில் வழியில் ஒரு ஆச்சிரமத்தில் தங்கினார்கள். அங்கேயும் புண்டரிகன் தனது பெற்றோரைக் கவனிக்கவில்லை. அங்கு ஒரு நாள் புண்டரீகனுக்கு ஒரு காட்சி மூன்று தேவதைகள் மிகவும் அழகான வர்கள். ஆச்சிரமத்திற்கு வந்து பூசை அறைக்குப் போனார்கள். எல்லாம் வெள்ளை ஜோதியாக இருந்தாலும் உடுத்திருந்த உடை மிகவும் அழுக்காயிருந்தது. போனவர்கள் திரும்பி வரும் பொழுது, அழுக்கெல்லாம் நீங்கி மிகவும் பிரகாசமாக இருந்தார்கள். வந்தமாதிரியே மறைந்து போனார்கள். இரண்டாம் நாளும் இதே போல நிகழ்வு நடந்தது. மூன்றாம் நாளும் இவர்கள் வந்தார்கள். புண்டரீகனுக்கு இவர்களைப் பற்றி அறிய ஆவல் எழுந்தது. அவர்களிடம் யார் நீங்கள் என விசாரித்தான். தாங்கள் தான் இந்தியாவின் புனித நதிகளான கங்கா, யமுனா, கோதாவரி என்று சொன்னார்கள். மனிதர்கள் தங்கள் பாவங்களை அழுக்குகளை நதிக்குள் போட்டுவிடுகிறார்கள். நாங்கள் அவற்றை அகற்றவே இங்கு வந்தோம் என்று சொல்லி எதுவாகிலும் நீ செய்யும் பாவம் மிகப் பெரியது உனது பெற்றோரைக் கவனிப்பதில்லை என்று சொல்லி மறைந்தார்கள். அன்று தொடக்கம் புண்டரிகன் பெற்றோரிடம் அன்பு கொண்டு சகல தேவைகளையும் கவனித்தான். பெற்றோர் சேவைக்கே புண்டரிகன் முன்னுரிமை கொடுத்து செயற்பட்டதை அறிந்த பகவான் விஷ்ணு புண்டரிகனுக்கு தரிசனம் கொடுக்க அவர்களின் இருப்பிடத்திற்கு வந்தார். புண்டரிகன் பகவான் வந்ததும் தெரிந்து பெற்றோருக்குப் பணி புரிவதிலேயே ஈடுபட்டான். பகவான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"புண்டரீகா உனக்குத் தரிசனம் கொடுக்க வந்துள்ளேன்" என்று கூறினார். அதற்கு புண்டரீகன் "எனது வேலையை முடித்து விட்டு வருகிறேன்" பொறுக் குமாறு வேண்டி ஒரு செங்கல்லை வெளியே எறிந்து அதில் இருந்து கொள்ளுமாறு சொல்லித் தனது வேலையைத் தொடர்ந்தான். வேலை முடிந்ததும் புண்டரீகன் வந்து பகவானை வணங்கி, நிற்க வைத்ததற்காக மன்னிப்புக் கேட்டான். பகவான் அவனின் செயலை மெச்சி. என்ன வரமென்றாலும் கேள் என்றார். புண்டரீகன் "சுவாமி எனக்குத் தரிசனம் தந்து அருளியது போல் ஏனையோருக்கும் தங்களின் தரிசனமும் அருளும் கிடைக்க வேண்டும்"என்று வேண்டினான். இதன்படி செங்கல்லில் நின்ற ஆண்டவனுக்கு மராட்டி மொழியில் வித்தலா என்ற பெயர் வந்தது. விட்டலா என்று பாடித் தொழுது அருள் கிடைக்கப் பெறுகின்றார்கள். இந் நிகழ்வையே

"போலோ போலோ விட்டலா..... என்ற பஜனைப் பாடல் சித்தரிக்கிறது. எல்லா நாமங்களுக்கும் சக்தி உண்டு. இந்நிகழ்விலிருந்து தாய் தந்தையரை அன்புடன் பாதுகாத்துச் சேவை செய்ய வேண்டும். என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

தாயின் மனதைப் புண்படுத்தியவன் ஒரு போதும் மகிழ்ச்சியை அனுபவித்ததில்லை. தாயைப் பேணியவன் மகிழ்ச்சியாக வாழாமலும் இல்லை. (இதனடிப்படையில் பின்வரும் வரிகளில் தொடங்கும் பாட்டைப் பாடினார்)

"விண்ணைப் படைத்தாய்
மண்ணைப் படைத்தாய்
காற்றும் கடலும் ஒளியும் படைத்தாய்
தாய் தவித்தால் நிம்மதியில்லை
உயிரும் நீயே உடலும் நீயே...........

ஈஸ்வரம்மா என்ற பெயரைச் சொன்னதும் சுவாமியின் கண்கள் கலங்குவதைப் பலமுறை கண்டிருக்கிறேன். 2001 ஆம் ஆண்டு மே 6 ஆம் திகதி நிகழ்த்திய அருளுரையின் போது, ஈஸ்வரம்மா என்னால் தெரிவு செய்யப்பட்ட அன்னை என்று கூறினார். தாயாரும் சுவாமியாயிருந்த தன் மகனில் மிகுந்த கவனம். 1940 - 1950 ஆம் ஆண்டுகளில் போக்குவரவு வசதி குறைந்த புட்டபர்த்திக்கு சிற்றரசர்கள், பெரிய தனவந்தர்கள் வந்து போவார்கள். அவர்கள் சுவாமியைப் புட்டபர்த்தியிலிருந்து புறப்பட்டு வசதிகள் நிறைந்த நகரங்களில் வந்து பணியைத் தொடருமாறு வேண்டுவார்கள். இதைப் பற்றிக் கேள்விப்பட்ட ஈஸ்வரம்மா சுவாமியின் எண்ணத்தைச் சொல்லும்படி வேண்டினார். சுவாமி தான் ஒரு போதும் புட்டபர்த்தியை விட்டுப் போக மாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்தார்.

மேலும் தான் எப்போதும் தெலுங்கு மொழியிலேயே பகிரங்க உரைகளை



நிகழ்த்துவேன் என்றும் வாக்குறுதி கொடுத்தார். எத்தனையோ தடவைகள் மொழிபெயர்ப்பாளர்கள் பிழை விட்டபொழுது, ஆங்கிலத்தில் திருத்திச் சொல்லியுள்ளார். வாக்குறுதியைக் காப்பாற்றினார். அக் காலத்தில், சுவாமியின் பிறந்த தின விழாவின் தொடக்கத்தில் வயது முதிர்ந்த கணவன் மனைவி ஏழு சோடிகள் தலைக்கு எண்ணெய் சாத்துவார்கள். இதில் முதலாவது இடம் பெற்றோருக்கே கொடுக்கப் படும். அதன் பிறகுதான் சுவாதமி குளித்து விசேட உடையணிந்து விழா நிகழ்வுகள் இடம்பெறும். எல்லா விழாக்களிலும் தாயாரைக் கிட்ட வைத்துக் கொள்வார். தகப்பனார் அமரத்துவம் அடைந்த பின்பு ஒரு விழாவுக்கு அன்னையர் தான் சுமங்கலியில்லை என்றதால் வராமல் பின் நின்றார். சுவாமி தேடிப் பிடித்து அவரையே முதலில் எண்ணெய் தேய்க்க வைத்தார். அன்னை அமரத்துவம் அடைந்த பின்பும். சூட்சும உடம்பில் சுவாமியைத் தரிசித்து புத்திமதி புகட்டுவார் என்பதை சுவாமியே தனது அருளுரையில் (1999) கூறியுள்ளார். ஒரு முறை அன்னைக்கு முழங்கையில் நோ ஏற்பட்டது. சுவாமி அன்றிரவு அடிக்கடி போய்ப் பார்த்து, விபூதி கொடுத்தார். தான் இவற்றையெல்லாம் செய்து சொல்லிக் காட்டுவது ஏனென்றால் எனக்குத் தாய்தான் முக்கியம் என்று கூறியுள்ளார். சுவாமி 1968 இல் ஆபிரிக்காவிலுள்ள உகண்டா என்ற நாட்டிற்கு விஜயம் செய்தார். அதைவிட வேறு எங்கும் இந்தியாவிற்கு வெளியே செல்லவில்லை. பயணத்திற்கு ஆயத்தமானதும் அன்னையர் மிகவும் பயந்து, அங்கேயுள்ள விலங்குகளால் சுவாமிக்கு ஆபத்து நேரும் என்று சுவாமியிடமும், பேராசிரியர் கஸ்தூரி யிடமும் தடுக்கும்படியும் கேட்டார். பேராசிரியர் கஸ்தூரி சுவாமிக்கு எப்படி ஆபத்து நேரிடும் என்று சொல்ல "விலங்குகளுக்கு இவர் சுவாமி என்று தெரியாதே" என்று மறு உரை சொன்னார்.

எங்களுக்குப் பல கடமைகள் உண்டு. கடமைகளைத் திறமையாகச் செய்ய வேண்டும்.

இன்னொரு நிகழ்வு:

1968 இல் ஒரிசா மாநிலத்தில் கடும்புயல் வீசியது. இதனால் பெரு அழிவு ஏற்பட்டது. அழிவு நடந்த சில இடங் களுக்குப் போகவும் முடியாது. சாயி தொண்டர்கள் நிவாரணப் பொருட்களுடன் சென்றார்கள். இவர்களைக் கண்ட கிராமிய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் ஒழுங்கில்லாமல் ஓடித்திரிந்து நிவாரணப் பொருட்களை எடுக்க முற்பட்டார்கள். சேவாதாள்கள் செய்வதறியாது திகைத்தனர். அப்பொழுது ஒரு சிறுமி முன் வந்து மக்களை அமைதிப் படுத்தி ஒழுங்காக நிவாரணப் பொருட்களை விநியோகிக்க உதவினார். பொருட்கள் கொடுத்து முடிந்ததும் சேவாதாள்கள் ஓரிடத்தில் அமர்ந்து உணவு உண்ண ஆயத்த மானார்கள் அப்பொழுதுதான் சிறுமியின் எண்ணம் வந்தது. அவளை உணவு உண்ண வரும்படி கேட்டார்கள். சிறுமி தனது குரு "மற்றவர்களுக்குக் கடமை செய்வதே எமது முதலாய கடமை. குரு எமது தேவைகளைப் பூர்த்தி செய்வார்"என்று கூறினாள். இதை தான் பாலவிகாஸ் குருவிடமிருந்து படித்த தாகவும், சுவாமி சத்திய சாயி பாபாதான் சத்குரு என்றும் சொன்னாள். பாபாவைப் பார்த்தீர்களா? என்று கேட்டதற்கு, படத்தைத் தான் பார்த்திருக்கிறேன் என்று சொன்னாள். சேவாதாள்கள் நல்ல பாடமும் கற்று புதிய அனுபவத்தையும் பெற்றுச் சென்றார்கள்.



இன்னொரு பக்தனின் அனுபவம் (இராமமூர்த்தி) 1960 - 1970 இல் இந்த பக்தன் சுவாமியின் பல பணிகளில் ஈடுபட்டார். பகவானுடன் அருகாமையிலிருந்தார். கடமையிலீடுபடும் பொழுது மற்றவர்களைக் கடிந்து கொள்வார். வயோதிபமும் வியாதியும் ஒன்று சேர படுக்கையிற் கிடந்தார். நான் எவ்வளவோ பணிகளை சுவாமிக்காகச் செய்தேன், ஏன் இப்படித் தனக்கு வந்ததென ஆதங்கம் கொண்டார். ஒருநாள் பகவானே நேரடியாக அவரின் அறைக்குச் சென்றார். பக்தன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி னார். சுவாமி "நீ செய்த கடமையின் பொருட்டு நானே உன்னை வந்து பார்த்து ஆசீர்வாதம் தருகிறேன். நீ கடமையைச் செய்யும் பொழுது ஆட்களுடன் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்ததால், படுக்கையில் கிடந்து அனுபவிக்க வேண்டியுள்ளது."என்று விளக்கம் கூறினார்.

அடுத்ததாக புட்டபர்த்தியில் நடமாடும் வைத்தி யசாலையை நெறிப்படுத்தும் டாக்டர். நரசிம்மனின் தொண்டைப் பார்ப்போம். பிரசாந்தி நிலையத்தில் குல்வந்த் மண்டபத்தில் ஓரமாக ஒரு பெரிய வாகனம் நிறுத்தப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதில் சகல கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவருடன் ஒருமுறை நான் நேர்காணல் நடத்தினேன். இந்த எண்ணம் எப்படி உங்களுக்குத் தோன்றியது என்று கேட்டேன்.



கிராம சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. நானும் சில சிநேகிதரும் முதலில் வெய்யில் காலத்தில் குடிநீர் மக்களுக்குக் கொடுத்தோம். பின்பு நாராயண சேவை செய்தோம். இதற்கு முதலில் அழைப்பிதழ் தயாரித்து தகுதியானவர்களை ஒரு இடத்திற்கு வருமாறு அழைத்தோம். அங்கே அவர்களுக்கு வயிராற உணவு கொடுத்தோம். இப்போது இத்துடன் இந்த நடமாடும் வைத்திய சேவையையும் இணைத்துள்ளோம். தான் ஒரு கிழமையில் 5 நாட்கள் கடுமையாக வேலை செய்து, மீதி இரண்டு நாட்கள் லீவு எடுத்து இச் சேவையைச் செய்கிறேன்.

தாங்கள் பார்க்கும் நோயாளிக்கு என்ன சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர்களின் வியாதி சுகமடைந்ததாவென இரண்டு மாதமும் தொடர்ந்து கண்காணிப்போம். அநேகமாக சுவாமியின் வைத்தியசாலைகளுக்கே சிகிச்சைக்காக அனுப்புவோம். நாராயண சேவை செய்யத் தொடங்கிய காலத்தில் வறுமையான பிள்ளைகளைச் சேர்த்து சிறு நாடகம் பழக்கி சுவாமிக்கு முன் செய்ய ஏற்பாடு செய்தேன். சுவாமி அவர்களை ஆசீர்வதித்தார். நாடகம் நடத்த முடியவில்லை. அப்போது சுவாமி சொன்னார். "கிராம சேவை இராம சேவை"என்று சொன்னது ஆழமாகப் பதிந்தது என்று சொன்னார். இப்போதும் இதில் பல வைத்தியர்கள், பல தொழில்நுட்பவியலாளர்கள், தாதிமார்கள், தொண்டர்கள், சேர்ந்துள்ளார்கள். டாக்டர். நரசிம்மன் பணிப்பாளராக இயங்குகின்றார். (interview link: http://media.radiosai.org/journals/vol_12/01MAR14/Dr-Narasimhan-CNBC-TV-18-Healthcare-Award.htm)

ஒரு மெய்வல்லுனர் நிகழ்வு கில்வியூ ஸ்ரேடியத்தில் நடந்தது. இடையில் சுவாமி எழுந்து வெளியில் காரில் போனார். டாக்டர்.நரசிம்மனும் ஆச்சிரமத்திற்குப் போனார். உள்ளே மண்டபத்தில் சுவாமி மாத்திரமே தென்பட்டார். உடனே அவர் உள்ளே போய் சுவாமியிடம் "சுவாமி தயவு செய்து நாங்கள் போகும் கிராமத்திற்கு வரவேண்டும்"என்று வேண்டினார். சுவாமி " நான் எப்போதும் அங்கே இருக்கிறேன்"என்று பதிலளித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுவாமி எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறார்"

இதுவரை கற்றுக் கொண்ட பாடங்களாவன:

1. ஒரிசாவில் சிறுமியின் நடத்தை. அங்கே "கடமையை அன்புடன் செய்வது விரும்பத்தக்கது"என்ற பாடம்
2. பக்தன் இராமமூர்த்தியின் செயற்பாடு. கடமை செய்யப்பட்டது. அது "அன்பில்லாக் கடமை விரும்பத் தகாதது"என்ற பாடம்.
3. டாக்டர்.நரசிம்மன்- அவர் "கடமையில்லா அன்பின் நிமித்தம் கிராம சேவையில் ஈடுபட்டார். பகவான் அவருடனேயே இருப்பதாகச் சொன்னார். கடமையில்லா அன்பு தெய்வீகமானது"என்ற பாடம். இவரின் சேவையைப் பாராட்டி தொலைக்காட்சி நிறுவனமொன்று விருதும் வழங்கியது. தன்னலமில்லாது சேவை செய்தால் புகழ், அந்தஸ்து எல்லாம் தாமாகவே வந்து சேரும்.

எமக்கு பல தடவைகள் பலவிதமான பொறுப்புக்கள் தரப்படும். அவற்றை நாம் விருப்பத்துடனும் அன்புடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக இன்னொரு நிகழ்வைக் கூறுகிறேன்.

ஒரு இளம் வைத்தியப் பெண் மும்பாயில் தனது பட்டப் பின் படிப்பில் ஈடுபட்டிருந்தார். தேர்தல் காலம் அவரையும் தேர்தல் கடமையில் அரசாங்கம் ஈடுபடுத்தியது. அவருக்குக் கொடுக்கப்பட்ட இடம் சேரிப்புறம். மிகவும் பின் தங்கிய இடம். இவர் வேண்டுமென்றால் இக்கடமையிலிருந்து விடுபட்டிருக்கலாம். அவரின் சக ஊழியர்கள், போக வேண்டிய அவசியமில்லையென்று புத்திமதி சொன்னார்கள். அவரோ போய்ச் செய்ய வேண்டுமென்று ஆர்வம் கொண்டார். தேர்தல் தினத்தன்று அங்கு வாக்குப் போடவரும் பெண்களின் விரலில் மை பூசும் வேலையே அவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் இதை மிகவும் ஆர்வத்துடன் செய்தார்.

பெண்களின் கைகளை உற்றுக் கவனித்த பொழுது நகங்கள் நிறமின்றி வெள்ளையாக இருந்ததை அவதானித்தார். கடமை முடித்து தனது ஆராய்ச்சியில் மேற்பார்வையாளராக இருந்தவருடன் இதைக் கூறினார். அவர்கள் அந்தச் சேரியிலுள்ள தாய்மார்கள் அனைவரையும் சோதித்து இரத்தச் சோகை இருப்பதைக் கண்டறிந்தார்கள். அவர்களுக்கு சுகாதார வழிமுறைகள் கற்றுக் கொடுத்து தேவையான மருந்துகளும் வழங்கினார்கள். மூன்று மாதத்தில் அவர்களின் ஆரோக்கியம் மேன்மையடைந்தது. இதையே அவர் தனது ஆய்வாகச் சமர்ப்பித்துப் பட்டமும் பெற்றார். கிடைத்த பொறுப்பை ஆர்வத்துடனும் அன்புடனும் செயற்படுத்தியதால் பட்டமும் கிடைத்தது. மக்களும் பயனடைந்தார்கள்.

எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைக்கு மேலாகச் செய்வது தான் சேவை. இதனால் நேர்மறைச் சக்தி பெருகும். இது நிறுவனத்தில் உள்ள அனைவருக்கும் பரவும். எமது வாழ்வில் ஏற்றுக் கொள்ளலும், எதிர்பார்ப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எமக்குக் கிடைத்த பொறுப்பு, நிகழ்வை ஏற்றுக் கொண்டால் அமைதி நிலவும். அது இறைவனின் வேலையாகும். வேலையும் பிரார்த்தனையாக மாறும். எல்லாம் நன்மைக்கே என்ற மனப்பாங்கு வளர வேண்டும். இங்கே செயற்திறனும் மேலோங்கும்.

எதிர்பார்ப்புடன் செயற்பட்டால் துன்பம், விரக்தி ஏற்படலாம். சமநிலை குழம்பி விடும்.

உதாரணமாக இப்போது நடந்து கொண்டிருக்கும் மாநாடு ஏதோ ஒரு காரணத்தால் தள்ளிப் போடப்பட்டாலோ இரத்துச் செய்யப் பட்டாலோ நான் ஏற்றுக் கொள்வேன்.எல்லாம் அவன் செயல். எப்பொழுதும் ஆனந்தமாக இருக்க வேண்டும். (பின்வரும் பாடலைப் பாடி உரையை முடித்தார்.)

"எம்மீது அன்பு பொழிய ஒருவர் மேலே இருக்கிறார்
மேலே ஒருவர் என் கையைப் பிடித்துக் கொள்வார்
மேலே ஒருவர் என்னைப் பார்த்துக் கொள்வார்
மேலே ஒருவர் எப்போதும் என்னுடனேயே இருப்பார்"

சாயிராம்

கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து..........

திரு.தெ.ஈஸ்வரன் ஐயா அவர்கள் வேலை வாய்ப்பை பற்றி நிகழ்த்திய உரை:

சாயிராம்!

தற்போதய இளைஞர்கள் O/L A/L படிப்புடன் குமஸ்தா வேலையே விரும்புகிறார்கள். அவர்கள் தொழிற்சாலை வேலைகளை விரும்புவதில்லை. இதற்கு வேலையைப் பற்றிய பிழையான மனப்பாங்கே காரணம்: (தாழ்வு மனப்பாங்கு) ஒரு CIMA 2 பாகம் சித்தியடைந்தவர் அலுவலகத்தில் 25000 - 30000 ரூபாய் சம்பளத்தை பெறுவார். தொழிற்சாலையில் படிப்பறிவு குறைந்த சாதாரண தொழிலாளி (இயந்திரங்களுடன் தொடர்பான வேலை) முதல் 2 வருடத்தில் 25000 ரூபாவையும் 4 வருடங்களில் 30000 ரூபாவையும் 7 வருடங்களில் 40000 ரூபாவையும் மாதத்தில் சம்பளமாகப் பெறுகிறார்.

இளைஞர்கள் தொழிற்சாலை வேலைகளுக்கு துணிந்து முன் வர வேண்டும். கணணிகள் அலுவலகங்களில் பெருகியதும் குமஸ்தா வேலைகள் குறைவடைந்து விட்டன.

இதை மேலும் விளங்கப்படுத்த எனது கம்பனியில் எடுத்த குறுவீடியோ படத்தை பாருங்கள். இது விளம்பரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்காக காட்டவில்லை.

இப்படம் காட்டப்பட்ட பொழுது பின்வரும் பாடல் பின்னணியில் கேட்டது.. செய்யும் தொழிலே தெய்வம்... , பாடம் படிக்காத மேதைகள்........

இக்காலத்தில் இயந்திர இயக்குனர்களுக்கு அதிக கிராக்கியுண்டு. இவர்களுக்கு எப்பவும் வேலையுண்டு. இலங்கையில் 380 தொழிற்சாலை களில் இயந்திர இயக்குனர்களுக்கு வேலை வாய்ப்புண்டு. மேற்படிப்பு படிக்கவில்லையென ஏங்க வேண்டாம்.

தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் பொழுது சிக்கல்கள் எழலாம். இவற்றைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். படைப்பி லேயே ஒன்றையொன்று கொன்று சாப்பிடுவதை நாம் அறிய வேண்டும்.

துணிந்து வாழுங்கள்
வாழ்வை வளமாக வாழுங்கள்

வேலையில்லாதவர்கள் வேலை தேடும் ஏஜென்சிகளில் பெயர்களை பதிய வேண்டும். என்னிடமும் பெரிய பெரிய கம்பனிகளின் விலாசங் களை பெற்றுக் கொள்ளலாம்.

ஜெய்சாயிராம்.

**திரு புருஷ்டி தனது உரையை நிகழ்த்த தொடங்கினார்.**

நாங்கள் இந்த மேடையில் நாடகம் பார்த்தோம். நீங்கள் அத்துடன் கிராமசேவையும் செய்கிறீர்கள். மிகவும் ஆனந்தம்.

கேள்வி பதிலுக்கான நேரமாகையால் கேள்விகளை கேட்கும்படி கேட்டார். எந்த விடயத்திலும் கேட்கலாம் என்றார்.

கேள்வி:
வேலையும் ஒரு கடமை. எனக்கு என்னுடைய வேலையில் விருப்பமில்லை. அப்படியாயின் வேலை செய்வதற்கு எவ்வாறு உந்துதல்களைப் பெறலாம்?

பதில்:
நாங்கள் எங்களுக்கு விருப்பமான வேலையைச் செய்வதிலிருந்து, நாம் செய்ய வேண்டிய வேலையில் விருப்பம் கொள்வது தான் ஆன்மீக முன்னேற்றம்.

உதாரணமாக உன்னத நடிகன் ரஜனிகாந் முதலில் பஸ் நடத்துனராக வேலை பார்த்தார். அவர் தனது வேலையை மிகவும் ஆர்வத்துடன் செய்தார். பஸ் பயணிக ளுக்கு தனது வித்தைகளைச் செய்து காட்டி சிரிக்க வைத்தார். ஒருநாள் ஒரு சினிமா டைரக்டர் இவர் வேலை செய்யும் பஸ்ஸில் பயணித்தார். ரஜனி காந்தின் ஊக்கத்தையும் திறனையும் கண்டு அவரைப் படப் பிடிப்பிற்கு அழைத்தார். அதிலிருந்து நட்சத்திர நடிகராக எழுந்தார்.

நான் முன்னர் கூறிய போல் அந்த வைத்தியப் பெண்மணி தனக்குக் கிடைத்த தேர்தல் கடமையை ஆர்வத்துடன் செய்து அந்தச் சேரி மக்களின் இரத்தச் சோகையைக் குணப்படுத்தினார். சாயி இளைஞர் களின் வேலைத் திறனைப் பற்றி மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பு இருக்கிறது. எமக்குத் தரப்பட்ட அல்லது கிடைத்த வேலையை ஏற்றுக் கொண்டு மிகவும் ஆர்வத்துடன் வேலை செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது எப்படியும் மேன்மையான கைம்மாறுகள் கிடைக்கும்.

இன்னொரு உதாரணம் சொல்வேன்: இது வெனிசுலா என்ற தென் அமெரிக்க நாட்டில் நடந்தது. றொட் நிக்கஸ் என்பவர் முதலில் செய்திப் பத்திரிகை விற்பனையாளராக செயற்பட்டார். இவரின் ஆர்வத்தையும் உத்வேகத்தையும் கவனித்த அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்று வேலைக்கு அமர்த்தியது. அங்கும் திறமையாக வேலையைச் செய்தார். ஒரு சமயம் அந் நிறுவனத்தின் கூட்டத்திற்கு அந்நாட்டு நிதி மந்திரியும் வந்திருந்தார். நிதி மந்திரி இவரின் செயற்திறனை அவதானித்துத் தன்னுடைய பிரத்தி யேகச் செயலாளராக வேலைக்கு அமர்த்தினார். அந் நிதி மந்திரி பின்பு அந்நாட்டின் பிரதம மந்திரியானார். இவரும் அவரின் செயலாளராக பணியாற்றினார். சாதாரண விற்பனையாளன், தனது ஆர்வத்தாலும் திறனாலும் பிரதம மந்திரியின் செயலாளராக உயர்ந்துள்ளார். எப்போதும் யாருக்கும் சேவை செய்வதற்கு இந்தச் செயலாளர் பின்நிற்கவில்லை.

கேள்வி:
கடமையிலிருக்கும் போது மனம் அலைவதை எப்படித் தடுக்கலாம்?

பதில்:
இதற்கு பதில் கட்டுப்பாடு தான். கடின உழைப்புடன் கட்டுப்பட வேண்டும். இத்துடன் மன உறுதியும் வேண்டும். கடின உழைப்பு பயனுள்ளதாக இருக்க வேண்டும். இதைப்பற்றி நாளை சொல்வேன்.

கேள்வி:
கடமையை அன்புடன் செய்தேனா? இல்லையா என்று எப்படிப் பரிசீலிக்கலாம்?

பதில்:
இதைப் பற்றியும் நாளைக்கு ஆராய்வோம்

கேள்வி:
சோம்பல்.. வேலையைச் செய்து முடிக்க விடுவதில்லை. எப்படி இதை எதிர் கொள்வது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பதில்:
ஒழுங்குக் கட்டுப்பாடு, மனவுறுதி மூலமே நாம் தமஸ் குணத்திலிருந்து, ரஜஸ் குணத்திற்கு மாறி இறுதியில் சத்வீகக் குணத்திற்கு முன்னேறலாம்.

கேள்வி:
தற்போது இளைஞர்கள் சாயி நிலையத்தை விட்டு வேறு ஸ்தலங்களுக்குப் போகிறார்கள். இதனால் வரவு குறைகிறது. எவ்வாறு எதிர் கொள்வது? (இது பகவானின் மகா சமாதிக்கு பின்பா அல்லது முன்பே குறையத் தொடங்கியதா? எனக் கேட்டதற்கு முன்பே குறையத் தொடங்கியது என்று கேட்டவர் கூறினார்)

பதில்:
சமித்தியின் செயற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டும். பக்தர்களைக் கவரும் விதத்தில் நாம் போதியளவு செயற்படுகிறோமா? அவர்கள் வருவது மன நிம்மதிக்காக ஆகவே பஜனை நல்ல தரமாக இருத்தல் வேண்டும். சுவாமி அடிக்கடி தரத்தைக் கவனிக்கும்படியும் எண்ணிக்கை முக்கியமல்ல எனவும் கூறியுள்ளார். அங்கத்தவர்கள் சுவாமி கூறியபடி வாழ்கிறார்களா? ஒரு சிலர் முழு ஆர்ப்பணிப்புடன் செயற்பட்டால் ஏனையோர் உந்தப்பட்டு கவரப்படுவார்கள். எமது கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும். எண்ணிக்கை சுவாமியின் கையிலேதான் உள்ளது.

சாயி இளைஞர்கள் ஏனைய இளைஞர்களிலும் பார்க்க மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இதுதான் சுவாமியை மகிழ்விக்கும். நாம் இதயத்தைத் தூய்மையாக்கி திறந்து வைத்திருந்தால் சுவாமி மிகுதி எல்லா வற்றையும் செய்வார்.
சமித்தி நிகழ்ச்சிகள் கவர்ச்சியாக இருக்க வேண்டும். அங்கத்தவர்களின் நடத்தை உன்னதமாக இருக்க வேண்டும். சமித்தியின் விதிமுறைகள் சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். இவற்றை மாற்ற முடியாது.
ஒரு சிறிய உதாரணம்:
சர்வதேச நிகழ்வு பிரசாந்தி நிலையத்தில் நடத்த ஏற்பாடாகி இருந்தது. ஒரு வெளிநாட்டு பக்தனைக் கூப்பிட்டு இந்நிகழ்வுக்கு பொறுப்பாக இருக்கச் சொன்னார். அவருக்கோ இசை அறிவு இல்லை. ஆனாலும் சுவாமி சொன்னதற்கிணங்க உடனே ஏற்றுச் செய்தார். நாம் ஆயத்தமென்றால் சுவாமி மிகுதியைச் செய்து முடிப்பார்.




கடமை சரியாகச் செய்யப்பட்டதோவென மனச்சாட்சி கூறும் மனத்திருப்தி ஏற்படும். செயலில் திறனும், தரமும் நன்றாக இருக்கும்.

கேள்வி:
பெற்றோர்கள் அசைவ உணவு உண்ணும்படி வற்புறுத்தினால் எப்படி எதிர் கொள்ளலாம்?

பதில்:
ஆன்மீகப் பாதையில் இறங்கினால், கடவுளை நெருங்கும் வழியைக் கைவிடக் கூடாது. இச் சவாலை அன்புடனும் நல்ல நடத்தை மூலமும் எதிர் கொள்ள வேண்டும். பெற்றோருக்கு விளங்கப்படுத்த வேண்டும். அசைவ உணவு சாப்பிடாததால் எனது ஆரோக்கியத்திலோ, வலிமையிலோ ஒரு குறைவுமில்லை. அசைவ உணவு சாப்பிட்டால் மிருகக் குணமே மேலோங்கும் என்று விளங்கப் படுத்த வேண்டும். எனக்கு சைவ உணவு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நான் மகிழ்ச்சியாக இருப்பது உங்களுக்கு விருப்பம் தானே என்று சொல்ல வேண்டும். நான் எனது கடமைகளைச் சரிவரச் செய்கிறேன். ஒரு குறைவும் விடுவதில்லை. என விளக்க வேண்டும். நீங்கள் காட்டும் அன்பு. உங்களின் நடத்தை அவர்களை மாற்றி விடும். சைவ உணவு உண்பவர்கள் பலர் மேதைகளாகவும், விளையாட்டில் வீரர்களாகவும் இருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

கேள்வி:
சாயி நிலையத்தில் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம். வெளியே சென்றதும் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது? (முக்கியமாக வேலையின் நிமித்தம் வேறு ஊருக்குச் செல்ல வேண்டி வரும், சாயியை நம்பாதவரை விவாகம் செய்ய வேண்டி வரும்.)

பதில்:
பகவானை இதயத்தில் இருத்தி விட்டால் ஒருவராலும் அசைக்க முடியாது. அவரைவிடாது இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அன்பான உன்னதமான நடத்தையுடன் இறைவனின் அருளும் சேர்ந்தால் எவரும் மாறிவிடுவார்கள். எத்தனையோ குடும்பத்தவர்கள் மாறியுள்ளார்கள். பக்தி உடுப்பு மாற்றுவது போல நேரத்திற்கு நேரம் மாற்றப்படக் கூடாது.

கேள்வி:
நாங்கள் எவ்வளவோ தயாராகப் படித்து பரீட்சைக்குப் போனாலும், அங்கே மண்டபத்தில் பரீட்சையை திறமையாகச் செய்ய முடிவதில்லை. இதை எப்படி எதிர் கொள்ளலாம்? படித்தது ஞாபகத்திற்கு வருவதில்லை?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பதில்:
காயத்ரீ மந்திரம் ஜெபிக்க வேண்டும். இது கடவுளால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சக்தி வாய்ந்த மந்திரம். மன ஒருமுகப் படுத்தலை அதிகரிக்கும். பதட்டம் அடையக் கூடாது. கடைசி நிமிடம் வரை படிக்கக் கூடாது. பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய முன், ஒரு அமைதியான இடத்தில் சுவாமியைப் பிரார்த்தித்து காயத்ரீ மந்திரத்தை உச்சரிக்கவும். இதில் சந்தேகம் கொள்ள வேண்டாம். தன்னம்பிக்கையுடன் எதிர் கொள்ளல் வேண்டும். திறமையாகக் கற்ற பின்பு பலனைக் கடவுளிடத்தில் விடவும். இலேசான கேள்விகளுக்கு முதலில் மறுமொழி எழுத வேண்டும். நேரத்தைக் கவனிக்க வேண்டும்.


கேள்வி:
சமித்தியில் சேவை செய்யும் நேரத்தைப் பெற்றோர்கள் அங்கீகரிக்கிறார்கள் இல்லை. நாங்கள் அதிக நேரம் சமித்தியில் நிற்பதாக குற்றம் சாட்டுகிறார்கள்?

பதில்:
கோபப்படக் கூடாது. அமைதியாக அன்புடன் எதிர்கொள்ள வேண்டும். வீட்டுப் பொறுப்புக்களையும், கடமைகளையும் திறமையாகச் செய்ய வேண்டும். குடும்ப சேவைக்குப் பின்புதான் சமித்திச் சேவை. பெற்றோரை மதித்து கனம்பண்ணி வணங்க வேண்டும். சமித்தியில் நேரத்தை வீணாக்கக் கூடாது. இது தெரிந்தால் பெற்றோர்களும் திருப்தியடை வார்கள்.

கேள்வி:
வேலை செய்யும் இடத்தில் கீழ் மட்டத்தவர்கள் பிழை விட்டால் கோபம் கொண்டு பேசினால் சாயி பகவான் இப்படித்தான் பேசச் சொன்னாரா என்று கேட்கிறார்கள். இதை எப்படி எதிர் கொள்வது?

பதில்:
கோபத்தை அடக்குவது கஷ்டம். உடனே வாய் திறந்து சொற்களால் வெளிப்படுத்தப் படாது. செயல்களிலும் இறங்க வேண்டாம். அந்த இடத்தை விட்டுப் போய் அமைதியாக நாமஸ்மரணம் செய்ய வேண்டும். முகக் கண்ணாடியில் கோபம் இருக்கும் பொழுது பார்த்தால் எவ்வளவு அவலட்சணமாக இருக்கும். உணர்ச்சி வசப்பட்டு செயலில் இறங்காமல் பதுமையாக அன்பாகச் சொல்லி திருத்தலாம். இந்த அனுபவத்தை வாழ் நாள் முழுவதும் மறக்க மாட்டார்கள். கோபம் பிரச்சனையைத் தீர்க்காது. வெறுப்புணர்வையே ஏற்படுத்தும். நிலமை மோசமாகிப் போனால் பாசாங்குக் கோபம் கொள்ளலாம். பகிரங்கமாகப் புகழ்ந்து பிரத்தியேக மாகக் கண்டிக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்
கேள்வி பதில் நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 15.03.2014 அன்று சிறப்பு விருந்தினர் சகோதரர் புருஷ்டி அவர்கள் ஆற்றிய உரை



(காயத்ரீ மந்திரம் ஜெபித்து சுவாமியின் பாதத்தில் ரோஜா மலர் வைத்து வணங்கினார்.)

ரோஜா பூவை பாதத்தில் வைக்கும் போது சுவாமியின் வாக்கியம் நினைவில் வந்தது. "ரோஜா மலரைப் போல நறுமணமான அன்பை மௌனமாகப் பரப்ப வேண்டும்"

நாமும் அதைப் போல் அழகாக இருந்து எம்மை அணுகுபவர்களுக்கு ஆனளந்தத்தை அளிக்க வேண்டும். எம்மைப்பற்றி ஏனையோர் நாம் எவ்வாறு அவர்களை மகிழ்வித்தோம் என்பதையே ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். மற்றையோரிடம் அன்பாக இருந்தால் எம்மிலிருந்து நறுமணம் வீசும். அது இனிமையானதாகவும் இருக்கும். நாம் எம்மை ஆண்டவனின் பாத்தில் அர்ப்பணித்தால் நறுமணம் பாதத்திலிருந்து எங்கும் வீசும்.

இன்னொரு பாடமும் கற்றுக் கொள்ளலாம். றோசா மலருடன் முட்களும் உள்ளன. வாழ்க்கையிலும் இன்னல்கள் கஷ்டங்கள் வரத்தான் செய்யும். வாழ்வுக்கு இவையே உயிர்ப்பைக் கொடுக்கின்றன. வாழ்க்கை விறுவிறுப்பாக இருக்க வேண்டும். சுவாமி 86 வருடங்களாக எமது தோட்டக் காரனாக இருந்து எம்மை அழகான றோசா மலராக ஆக்கினார். இம் மாநாட்டின் இரண்டாவது நாள் பங்கு பற்ற வைத்த பகவானுக்கு என் பணிவான காணிக்கைகளை செலுத்துகிறேன்.

இன்றைய விடயம் - கட்டுப்பாடு என்பதைப் பற்றியதாகும். யாராவது கட்டுப்பாடு, ஒழுங்கு விதி முறைகளைப் பற்றிப் பேச முன் வந்தால் அவரை விட்டு விலக வேண்டும் போலிருக்கும். இவற்றின் முக்கியத்துவத்திற்கு ஒரு உதாரணம்:

நாம் எல்லோரும் மைதானத்திலே கிரிக்கட் போட்டி பார்ப்பதாகக் கற்பனை செய்வோம். இப் போட்டி இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நடைபெறுகிறது. இந்திய துடுப்பாட்ட வீரனான டெண்டுல்கார் களத்தில் இறங்கியுள்ளார். அவரின் ஆட்டத்தைப் பார்க்க எல்லோரும் ஆவலுடன் இருந்தார்கள். இலங்கை பந்து வீச்சாளன் மலிங்க முதற் பந்திலேயே விக்கட்டை வீழ்த்தினார். பார்க்க வந்த சனமெல்லாம் கூச்சலிட்டு டெண்டுல்காரரை துடுப்பாட விடவேண்டும் என்று குழப்பம் செய்தால், நடுவர் ஏற்றுக் கொள்வாரா? இதே மாதிரி இலங்கை வீரன் குமார் சங்கக்கார துடுப்பாட்டத்தின் போது முதற்பந்தை மிகவும் உயர்த்தி கயிற்றுக்கு அப்பால் ஆறு ஓட்டங்கள் வருவதற்கேற் போல் அடித்தார். ஆனால் விளிம்பில் களத் தடுப்பாளர் பந்தைப் பிடித்து விட்டார். பார்வையாளர்கள் சங்கக்காரவை தொடர்ந்து துடுப்பாட விடவேண்டுமென்று கூச்சலிட்டால் நடுவர் தனது முடிவை மாற்றுவாரா? இல்லை.

கிரிக்கட் விளையாட்டுக்கென்று விதிகள் உள்ளன. அவற்றைப் பின்பற்ற வேண்டும். இல்லாவிடில் எல்லாம் குழப்பத்தில் முடிந்து, விளையாட்டின் மகிழ்ச்சியையும் கெடுத்து விடும். இதே போல வாழ்விலும் நாம் சில ஒழுங்குகள் விதிமுறைகளை கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும். இவை தான் வாழ்வையும், விளையாட்டுக் களையும் மகிழ்ச்சியாக ஆக்குகின்றன.

1997 ஆம் ஆண்டு இந்தியாவும் ஏனைய நாடுகளும் என்ற இரு குழுக்களுக்கிடையிலான ஒற்றுமைக் கிண்ணத்திற்கான போட்டி புட்டபர்த்தியில்




நடைபெற்றது. அன்று மைதானம் நாலு பக்கத்திலும் பின்வரும் வசனம் வாழ்க்கை ஒரு விளையாட்டு அதை சிறப்பாக விளையாடு (life is a game play it.) என்று எழுதித் தூக்கப்பட்டிருந்தது. விதிகளை வரவேற்க வேண்டும்.

கரஞ்சியா என்ற பத்திரிகை ஆசிரியர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டதை வைத்து அவதூறாக தனது பத்திரிகையில் கட்டுரை வெளியிட் டார். அவரின் நண்பன் ஒருவன் இது பத்திரிகைத் தர்மம் அல்ல. சுவாமியைக் கண்டு தரிசித்து ஆராய்ந்து எழுத வேண்டு மென்று கூறினான். 1976 இல் கரஞ்சியா புட்டபர்த்திக்கு வந்தார். இங்கே நடப்பவை எல்லாவற்றையும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவதானித்துக் கவரப்பட்டார். சுவாமி நேர் காணலுக்குக் கூப்பிட்டார். அச் சந்தர்ப்பத்தில் கரஞ்சியா பல கேள்விகளை கேட்டுப் பதில்களையும் பெற்றார். பின்பு அவர் "கடவுள் இந்தியாவில் வாழ்கின்றார்"என்ற நூலையே வெளியிட்டார். அந் நூலில் கேள்விகள் பதில்கள் எல்லாம் வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்ட கேள்வி பதில்களில் ஒன்று:

கேள்வி:

மக்கள் துன்பப்படும் பொழுது கடவுள் ஏன் உதவவில்லை? பல அழிவுகள் ஏற்படுகின்றன கடவுள் ஏன் தடுக்க முடியாது?


பதில்:

இந் நிகழ்வுகளை உடனுக்குடன் தடுத்தால் படைப்பின் "காரண காரியம்"என்ற முக்கிய விதியை மீறுவதாக அமையும். கடவுள் அனர்த்தங்களைக் கொடுப்ப தில்லை. படைப்புடன் மனிதன் எவ்வாறு தொடர்பு கொள்கிறான் என்பதே அனர்த்தங்களுக்குக் காரணம். படைப்பை அவமதித்தால் படைப்பு (இயற்கை) எதிர்த்துச் செயற்படும். நான் மனிதனைத் திருத்தவே வந்துள்ளேன். சில வேளைகளில் நிவாரணமும் அளிப்பேன். எல்லாம் விதிகளின் படியே செயற்படுகின்றன. பிரபஞ்சத்திற்கென்றே ஒரு அசைவு இருக்கின்றது.இதை மாற்றினால் பிரபஞ்சத்தை நீடிக்க வைக்க முடியாது.

எனது அனுபவம் ஒன்று:

நான் சுவாமியின் பாடசாலையில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்தேன். ஒரு வருடத்திற்குப் பிறகு விடுதலை நாட்கள். வீட்டிற்குப் போனேன். பாடசாலை விடுதியில் தொலைக்காட்சி பார்க்கவே முடியாது. ஒரு வருடம் பார்க்காததால், பார்க்க வேண்டும் என்று ஆசை எழுந்தது. பெற்றோர்கள் இல்லாத நேரத்தில் களவாக பார்த்தேன். ஒரு கிழமைக்குப் பிறகு நான் செய்வது தவறு என்று மனச்சாட்சி உறுத்தத் தொடங்கியது. எங்கள் எல்லோருக்கும் எது நல்லது எது கெட்டது எனத்தெரியும். தொலைக்காட்சி பார்ப்பதை நிறுத்தி, அயலிலுள்ள பிள்ளைகளைக் கூப்பிட்டு பாலவிகாஸ் வகுப்புக்கள் நடத்தினேன். இது எல்லா மாணவர்களுக்கும் வழக்கமாகச் செய்யும் செயல், விடுதலை முடித்து திரும்பும் நேரம் வந்ததும், பிள்ளைகளிடம் கடிதம் எழுதித் தரச் சொன்னேன். பகவான் எடுத்து வாசிப்பார் என்றும் சொன்னேன்.

முதல் நாள் தரிசனத்தின் போது கடிதங்களை எடுக்கவில்லை. இரண்டாம் நாள் என்னைக் கடந்து போய்விட்டு திரும்பி வந்து புன்னகையுடன் கடிதங்களை ஏற்றுக் கொண்டார். என்னுடன் மிகவும் அன்பாகக்கதைத்தார். சுவாமி எப்போதும் எங்களிலுள்ள குறைகளைக் காண்பதில்லை, எங்களிலுள்ள நல்லதையே காண்பார். நாங்கள் தவறானதை செய்தால் எங்களை திருத்தவே முயற்சிப்பார். சுவாமி நான் களவாக தொலைக்காட்சி பார்த்ததை பற்றி ஒன்றும் சொல்லவில்லை.




சுவாமியின் மாணவரான இராமகிருஸ்ண ருக்கு நடந்ததைப் பார்ப்போம். இவர் ஹைதரபாத்தை சேர்ந்தவர். இவரின் தகப்பனார் சினிமாத் தொழில் முதலாளி. இவன் இலவசமாக எத்தனை படங்களும் பார்ப்பான். பையனுக்கு படம் பார்ப்பதென்றால் மிகவும் பிரியம். இவன் விடுதலைக் காலத்தில் வீட்டிற்குப் போகும் பொழுது சுவாமி வீட்டில் போய் படம் பார்க்கக்கூடாதென்று சொல்லி அனுப்பினார். இவன் வீட்டிற்குப் போனதும் படம் பார்க்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது. ஒரு நாள் படத்திற்குப் போயிருந்தான். அரைவாசி நேரத்தில் சுவாமி சொன்னது உறுத்தியது. உடனே தனது பொக்கட்டில் இருந்த சுவாமியின் படத்தை மறுபக்கம் திருப்பி வைத்து விட்டு படம் பார்த்தார். விடுதலை முடிந்து பிரசாந்தி நிலையத்தில் தரிசனத்திற்கு இருந்தான். சுவாமி பையனைப் பார்த்தார், ஒன்றும் சொல்லவில்லை. சுவாமி தான் செய்த பிழையைக் கவனிக்கவில்லையென ஆறுதலடைந்தான். ஒரு கிழமைக்குப் பின்பு தரிசனத்தில் இவனுக்கு அருகிலிருந்த மாணவனிடம் இருந்து கடிதம் வாங்கும் போது, குனிந்து காதுக்குள் "ஏன் எனக்கு அரைவாசிப் படம் மட்டும் பார்க்க விட்டாய்"என்று கேட்டார். சுவாமி இவ்வாறுதான் எங்களுக்குக் கட்டுப்பாட்டைப் பற்றி அறிவுறுத்துவார். அதன் பின்பு படம் பார்த்ததில்லை. படிப்பு முடிந்து திருமணமாகிய பின் ஒரு நாள் படம் பார்க்கும் ஆசை எழுந்தது. மனைவியுடன் காரில் புறப்பட்டார். இடைவழியில் கார் நின்று விட்டது. திருப்பி ஓடவைக்க முடியவில்லை. நேரமும் போய் விட்டது. அன்று படம் பார்க்க முடியவில்லை. இன்னொரு நாள் படம் பார்க்கப் போயிருந்த பொழுது, படம் தொடங்க முந்தி மின்சாரம் தடைப்பட்டு பார்க்க முடியாமல் போய் விட்டது. வீட்டிற்குப் போய் கையடக்கத் தொலைபேசியில் பார்க்க முனைந்த போது தொலைபேசியும் நின்று விட்டது. சுவாமி எவ்வளவு தூரமும் போய், தனக்கு விருப்பமில்லா ததை நடக்க விடமாட்டார். அவர் எமது ஆனந்தத்தை எதிர்பார்ப்பவர்.

1960 ஆம் ஆண்டளவில் நடந்த இன்னொரு நிகழ்வு சுவாமி பங்களூரில் இருந்தார். அங்கே அவருடன் செல்வது பணி செய்வதெல்லாம் டாக்டர். பத்மநாபன் என்பவர். சுவாமி அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி விஜயம் செய்துள்ளார். அவர்களுக்கு கீதா என்ற 15 - 16 வயதுள்ள பெண் குழந்தை இருந்தாள். அக்காலத்தில் தான் சாயி நிறுவனம் ஆரம்பித்தது. பாலவிகாஸ் தீவிரமாக இயங்கத் தொடங்கிய காலம். அங்குள்ள மூத்த பெண்களைச் சுவாமி பாலவிகாசை பல இடங்களில் நடத்தச் சொல்லியும், குருமாருக்குப் பயிற்சி அளிக்குமாறும் சொன்னார். இப் பெண்களுடன் கீதாவையும் சேரச் சொன்னார். கீதாவுக்கு அவரின் தாயார் இதைச் சொன்னதும், கீதா தனக்கு விருப்பமில்லை என்று சொன்னாள். நீண்ட பயணமும், மூத்த பெண்களுடன் நாள் முழுக்கத் திரியவும் விருப்பமில்லை என்று சொன்னாள். தாயார் இதைச் சுவாமிக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவித்தார். சுவாமி "இது எனது கட்டளை" என்று கீதாவிடம் சொல்லச் சொன்னார். கீதா சுவாமியிடம் "ஏன் என்னை போகச் சொல்கிறீர்கள். நான் சின்னப்பிள்ளை எப்படிப் படிப்பிக்க முடியும்!" என்று சொன்னாள். நீ சொன்னால் அங்குள்ளவர்கள் மிகவும் உந்தப் படுவார்கள். பள்ளிக்கூட விடுதலை நாட்களில் தான் போகச் சொல்கிறேன் என்று சுவாமி சொல்ல ஏற்றுக் கொண்டாள். சுவாமி கல்யாணி என்ற மூத்த பெண்ணை கீதாவை கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னார். அவரோ அவளைத் தன் பார்வையிலிருந்து தப்ப விடவில்லை.

முதல் நாள் காலை 7.00 மணிக்கு எல்லோரும் புறப்பட்டு இரண்டு பஸ்கள் மாறி ஒரு பள்ளிக் கூடத்தில் ஒரு பயிற்சி வகுப்பை நடாத்தினார்கள். கீதாவுக்கு பி.ப 2.00 மணியே ஒதுக்கப்பட்டது. அடுத்த நாள் ஏன் தான் பல மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும். 2.00 மணிக்குத்தானே தனக்கு ஒதுக்கப்படுகிறது. தான் கொஞ்சம் தாமதித்து வெளிக்கிட்டு போகலாம் என்று எண்ணினாள். காலை 7.00 மணிக்கு பஸ்தரிப்பு இடத்திற்கு போவதாகச் சொல்லி தனது சிநேகிதி வீட்டிற்குச் சென்றாள். சிநேகிதிக்குத் தான் 11.00 மணி பஸ் எடுத்தால் போதுமென்றும், ஐஸ்கிறீம் கடைக்குப் போய் கதைக்கலாம் என்று சொல்லி இருவரும் சென்றார்கள். 11.00 மணிக்கு பஸ் ஏறினாள். அங்கு இருந்தவர்கள் எல்லோரும் ஆண்கள். கீதா ஒருத்தி தான் பெண். பஸ் நீண்ட தூரம் தனிமையான பாதைகளில் சென்று பிழைப்பட்டு விட்டது. எல்லோரும் இறங்கினார்கள். வயதில் மூத்த சிலர் கீதாவை பார்த்து எங்கே போகிறாய்? என்று வினாவினார்கள். கேட்டு விட்டு கீதாவின் பெற்றோர்கள் அக்கறையில்லாத மூடர்கள் என்று திட்டினார்கள். என்ன துணிவு கொண்டு சிறு பெண்ணைத் தனியாக பயணம் செய்ய விட்டுள்ளார்கள் என்று விமர்சித்தார்கள். கீதாவுக்கு பெரும் துயரமாக இருந்தது. சுவாமி ஆசிர்வதித்த பெற்றோர்கள் இப்படி குற்றம் சுமத்தப்படுகிறார்களே. எனது சிறுபிள்ளைத்தனம் வினையாகி விட்டதே என்று கவலை கொண்டாள். பஸ் திருத்தப்பட்ட பின்பு பயணத்தைத் தொடர்ந்தது. குறிக்கப்பட்ட பாடசாலையில் இறங்கி, பயிற்சி நடக்கவிருக்கும் மண்டபத்திற்குப் போனால் அங்கு ஒருவருமில்லை. அக் கல்லூரியோ ஆண்கள் கல்லூரி கீதா திரும்பவும் வந்து பஸ் தரிக்கும் இடத்தில் நின்று சுவாமியைப் பிரார்த்தித்தாள். இதற்கிடையில் சில ஆண்கள் கேலி செய்யவும் தொடங்கி விட்டார்கள். அக்காலத்தில் கையடக்கத் தொலைபேசியும் இல்லை செய்வதறியாது திகைத்தாள். இருந்தாற் போல் ஒரு கார் வந்து நின்றது. அதற்குள்ளே சுவாமியின் சகோதரி வெங்கம்மா இருந்தார். அவருக்கு கீதாவை நன்கு தெரியும். கீதாவிடம் ஏன் நிற்கிறாய் என்று கேட்டு அவள் போக வேண்டிய இடம் கார் சாரதிக்கு தெரிந்திருந்ததால் அங்கே கொண்டு போய் சேர்த்தார்கள். வெங்கம்மா தான் இந்தத் தெருவால் வருவதாக இருக்கவில்லை. தலைவலி ஏற்பட்டதால் இந்த இடத்தில் மாத்திரை வாங்குவோம் என்று எண்ணியே வந்தேன். நல்லதாய் போய் விட்டது. வெங்கம்மா தான் போய் சுவாமியிடம் ஏன் இப்படிச் சிறு பெண் பிள்ளையை பயிற்சி முகாமுக்கு அனுப்பியது என்று கேட்பேன் என்றும் சொன்னாள். கீதாவைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களுக்கு மன நிம்மதி ஏற்பட்டது. தான் பஸ்ஸை தவற விட்டு விட்டதாக கீதா சொன்னாள். பயிற்சி முடிந்து வீடு திரும்பினார்கள். ஒருவருக்கும் தனது செயற்பாடு ஒன்றும் தெரிய வராது என்று கீதா நினைத்துக் கொண்டாள். இது நடந்து 9 மாதங்களுக்கு பின்பு பயிற்சி முகாம் நடாத்தியவர்களுக்கு சுவாமி பாத நமஸ்காரம் கொடுக்க ஆயத்தமானார். கீதாவும் இருந்தார். சுவாமி கீதாவின் அருகே வந்ததும். குனிந்து மெதுவாக "நீ அந்த மூத்த பெண்களைப் பற்றிச் சொன்னதையெல்லாம் சொல்லிவிட்டா?"என்று அன்புடன் சொன்னார். கீதாவுக்கு வாரிப்போட்டது. மன்னிக்கவும் சுவாமி என்று திரும்பத் திரும்பச் சொல்லித் தான் இனிமேல் அப்படிப் பிழைவிட மாட்டேன் என்றும் சொன்னார். சுவாமி கீதாவைச் சொற்ப சொற்களாலும், அன்புப் பார்வையாலும் திருத்தி விட்டார்.(இதில் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன வென்று சபையோரிடம் கேட்டார். அவர்கள் சொல்ல, அதைப் பற்றி விரிவாக்கினார்.)

- சுவாமி சொன்னதை அப்படியே செய்ய வேண்டும். அது எப்போதும் எமது நன்மைக்காகவேயிருக்கும். எங்களின் நலனில் மிகுந்த அக்கறையானவர் அவரேயாகும். அடுத்து பெற்றோர்கள் வருவதை அல்லது தருவதை அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- எப்போதும் உண்மையைப் பேச வேண்டும். ஒரு பொய்யை மறைப்பதற்குப் பல பொய்கள் சொல்ல வேண்டும். உண்மையைப் பேசினால் பயமே இருக்காது.

நான் MBA வகுப்பில் படிக்கும் பொழுது இந்தியாவுக்கான சாயி நிறுவனத் தலைவர் திரு.ஸ்ரீனிவாசன் எங்களுக்கு வகுப்பு எடுத்தார். அவர் ஒரு தொழிலதிபருமாவார். அவர் கேட்ட முதல் கேள்வி.. எத்தனை பேர் பிழை விட்டுள்ளீர்கள்? ஒருவரும் கை உயர்த்த வில்லை. நீங்கள் ஒருவரும் புதிதாக ஒன்றைச் செய்ய எத்தனிக்கவில்லை யென்பது தான் அர்த்தம். பிழை விடுவதில் ஒரு பிழையுமில்லை. ஆனால் திரும்பத் திரும்ப பிழை விடுவதுதான் சரியில்லை. கீதா என்ற பெண் பிழை விட்டாலும் திரும்பப் பிழைவிடவில்லை. பின்பு எப்பொழுதும் வெங்கம்மா கண்டால் கீதா உன்னால் தான் எனக்கு தலைவலியைச் சுவாமி தந்தார் என்று பகிடியாக சொல்வாராம்.

வேறு என்ன பாடம்?

சுவாமி எல்லாம் தெரிந்தவர். எங்கும் நிறைந்தவர். அவரிடமிருந்து ஒன்றையும் ஒழிக்க முடியாது. சுவாமிக்குப் பயப்படத் தேவையில்லை. அவர் அன்பு வடிவானவர். எங்களிலுள்ள நல்லதையே காண்பார்.

எனது அனுபவம்:

நண்பர்கள் சேருவார்கள் பின்பு போய் விடுவார்கள். என்னில் திறன் ஏதம் இருந்தால் சேருவார்கள். திறன் போனதும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போய் விடுவார்கள். சுவாமிதான் உண்மையான நண்பன். உண்மையான இனத்தவன். ஏனென்றால் எவ்வளவு தன்னலமுமில்லை

நான் சாயி வானொலியில் வேலை செய்வதனால் பல மின் கடிதங்கள் வரும். 24 வயதுடைய பெண்ணிடமிருந்து வந்த கடிதத்தில் தனக்கு நடந்த இரு நிகழ்வுகள் மூலம் சுவாமிதான் உண்மையான நண்பன் என்பதை ஏற்றுக் கொள்வதாக எழுதியிருந்தார்.


சிலவருடங்களுக்கு முன்பு ஒரு பையன் மீது காதல் கொண்டாள். எல்லாத் தெய்வங்களையும் கும்பிட்டாள். சுவாமிக்கும் கடிதம் போட்டாள். அந்தப் பையன் மீது பைத்தியம் இது 7 வருடங்கள் நடந்தது. பையனிடம் இருந்து ஒரு சைகையும் வரவில்லை. சுவாமியை பிரார்த்தித்தாள். சுவாமி கனவில் தோன்றினார். நேர்காணல் அறையில் இந்தப் பெண்ணும், அவனின் பெற்றோரும், காதலிக்கும் பையனும் இருந்தார்கள். இப் பெண்ணிடம் "நீ அவனுடன் வாழ முடியாது என ஆணித்தரமாகச் சொன்னார்."இவள் எவ்வளவோ அழுதும், கெஞ்சியும் சுவாமி சரிவராதெனச் சொன்னார். விழித்ததும் தாரை தாரையாக அழுதாள். சில மணி நேரம் கழித்து தலைப்பாரம் குறைந்துள்ளதாக உணர்ந்தாள். அழுகையும் குறைந்து விட்டது. பல வருடங்களாகப் பீடித்திருந்த பைத்தியம் நீங்கி விட்டது. ஒரு காலத்தில் அவனில்லாமல் வாழ முடியாதென்ற நிலை பின்பு அவனுடன் வாழ முடியாதென்ற நிலைக்கு மாறியது. ஒருவராலும் தீர்க்க முடியாத பைத்தியத்தை சுவாமி நீக்கி விட்டார். சுவாமிக்கு எமது உள் ஆசைகள் எல்லாம் தெரியும். முக்காலமும் அறிந்தவர் எமது நலனிலேயே அக்கறை கொண்டவரென நான் முழுமையாக நம்புகிறேன் என்று அவர் கடிதத்தில் போட்டிருந்தாள். கடவுள் எமக்கென்று ஒரு திட்டம் வைத்திருக்கின்றார் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எமது பாடசாலைப் பரீட்சைக்கு வெளிப் பரிசோதகர்கள் வந்தார்கள். மாணவர்கள் பதட்டமின்றி அமைதியாக ஒரு விதிகளையும் மீறாமல் பரீட்சை எழுதுவதை அவதானித்தார். இவருக்கு சுவாமியைப் பற்றித் தெரியாது. ஒரு மாணவரிடம் "நீங்கள் எல்லோரும் கடவுளுக்குப் பயம் உடையவர்களாக இருக்கிறீர்கள்"என்று கூறினார். அதற்கு மாணவன் "சேர் எங்களுக்கு கடவுள் மீது பயமில்லை. ஆனால் அளவு கடந்த பக்தியுண்டு"என்று சொன்னான். கடவுள் மீது அன்பு இருந்தால் பாவங்கள் செய்வதில் பயமேற்படும். அப்படியாயின் சமுதாயத்தில் ஒழுக்க நீதி விளங்கும்.

நான் பேச ஆயத்தமாக வந்தது வேறு என்னவோ. ஏதொ ஒரு உந்துதலில் நான் இன்று பேசியுள்ளேன்.

ஜெய் சாயிராம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பக்தி பற்றி ..

சாயிராம்

இனிமையான பஜனைப் போற்றுகிறேன். இந்த மாநாடு எங்களிலுள்ள பகவானால் கொடுக்கப்பட்ட திறன்களை வெளிப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பம். ஒருமுறை ஒரு பேச்சாளர் சுவாமியின் முன்னால் இந்தத் திறன்களையெல்லாம் சுவாமி தந்த பரிசுகளே என்று சொன்னார். சுவாமி அவரை உடனே திருத்தி திறன்களே கடவுள்தான் என்று சொன்னார்.

கோடைக்கனலில் சுவாமிக்குப் பிடித்த ஒரு ஹிந்திப் பாடலைப் பாடி ஆங்கிலத்தில் பாடினார்.


என்னைக் கேட்க வேண்டாம் என் அன்னை எப்படி?
அவர்தான் என்னுடைய அதி சிறந்த நண்பி
அவர்தான் எனது பிராண சக்தி
அவரைப் போல நண்பர் ஒருவர் இல்லை
நான் எனது விருப்பங்களையும் கனவுகளையும் கை விட்டு விடுவேன்.
நான் எல்லாவற்றையும் விட்டு விடுவேன்
அது தான் உனது கட்டளையும் விருப்பமுமென்றால்

நாங்கள் கடவுள் மேல் பயம் கொள்ளாது, அவரை நேசிக்க வேண்டும். நான் அவர் மேல் எப்படிக் காதல் கொண்டேன் என்பதைச் சொல்கிறேன்.

சுவாமியின் பாடசாலையில் படிக்க வேண்டுமென்று ஆசை. மூத்த சகோதரன் அங்கேயே படித்துக் கொண்டிருந்தார். எந்தப் பிரிவில் போட்டாலும் சரி என்றிருந்தேன். பதினோராம் வகுப்பில் சேர்ந்தேன். நான் சமித்திகளில் நன்றாகப் பாடுவேன். சுவாமியின் முன்னிலையிலும் பாட ஆசையாயிருந்தது. அங்கே இன்னொரு மாணவன் இனிய குரலில் நன்றாகப் பாடுவான். சுவாமி அவனுடன் அடிக்கடி கதைப்பார். நானும் அவனைப் போல் பாடி முன்னிலையில் வரவேண்டும் என்று ஆசை. நான் சங்கீத ஆசிரியரிடம் சுவாமியின் முன்னிலையில் பாடவிருப்பமென்று கேட்டேன். அதற்கு அவர் சுவாமியிடம் கேட்கச் சொன்னார். தரிசனத்தின் போது "சுவாமி பஜனை பாட விருப்பம்"என்றேன். சுவாமி அதற்கு "ஆடப் போகிறாயா? போய் ஆடு" என்று பகிடியாகச் சொல்லி விட்டு போய் விட்டார். இப்படியே பலநாட்கள் கழிந்தன. நாட்கள் போக சுவாமி ஏன் என்னுடன் கதைப்பதில்லை. நான் எவ்வளவோ நல்ல ஒழுக்கமுள்ளவனாக இருக்கிறேன். மற்றப் பையன் எவ்வளவு குழப்படி. ஆனால் சுவாமி அவனுடன் அடிக்கடி கதைக்கிறாரே. நேர்காணலும் கிடைத்துள்ளது. ஒரு விடயம் - எனக்குப் புள்ளி குறைந்தது என்று கவலைப்படாமல் மற்றவனுக்கு எப்படி கூடிய புள்ளி கிடைத்தது தான் கவலை. சுவாமி ஏன் மற்றவனிடம் கதைக்கிறார் என்பதுதான் எனது சிந்தனை. நான் எனது ஆசிரியரிடம் எனது மனக் கிலேசத்தைச் சொன்னேன். சுவாமியின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்றால் நான் சொல்லும் மூன்று காரியங்களையும் செய் என்று புத்திமதி சொன்னார். அந்த மூன்றும்.:

- விடுதிச் சட்டங்கள், ஒழுங்குகள் பகவானால் வரையப்பட்டன. அவற்றை முழுமையாக பின்பற்ற வேண்டும்.
- இது உனது சமயமாக இருக்க வேண்டும்.
- உனது விருப்பத்தைக் கடிதத்தில் எழுதி சமர்ப்பிக்க எத்தனிக்கவும்
- இதய பூர்வமாக சுவாமியைப் பிரார்த்தனை செய் என்பவையாகும்.

நான் பாட விரும்புகிறேன் என்று ஒரு நல்ல அட்டையை வரைந்து ஆயத்தமாக பாக்கற்றில் வைத்திருந்தேன். எத்தனையோ தடவைகள் கொடுக்க எத்தனித்தும், சுவாமி வாங்கவில்லை. சங்கீத ஆசிரியரைக் கேட்டா சுவாமியைக் கேள் என்பார். சில சமயங்களில் சுவாமி, பாட வேண்டுமென்றால் சங்கீத ஆசிரியரைக் கேள் என்பார். எனக்கும் நான் நல்ல பாடகன் என்ற தலைக்கனம் இருந்தது. சுவாமியை இதய பூர்வமாக பிரார்த்தித்தேன். பின்பு நான் பின்வரிசையிலேயே போயிருக்கத் தொடங்கினேன். சுவாமியின் இதயம் கல் என்று எண்ணத் தொடங்கினேன். எனது கனவுகள் எல்லாம் சிதறடிக்கப்பட்டன. ஒருநாள் நேர்காணல் அறையிலிருந்து சுவாமி வெளியே வந்தார். அவர் வரும் போது எனக்கு முன்பு வெற்றிடங்கள் இருந்தன. எனக்கு முன்னுக்கு தள்ளியிருக்க வேண்டுமென்ற ஆவலும் இல்லை. பின்னுக்கிருந்த சக மாணவர்கள் என்னை முன்னுக்குத் தள்ளி விட்டார்கள். அவர் என்னை நோக்கினார். கண்கள் ஒத்திக் கொண்டன. எனக்கு அருகாமையில் வந்தார். நான் முழங்காலில் வீழ்ந்து வணங்கினேன். எல்லாவற்றையும் மறந்தேன். சுவாமி தன் கையை அசைத்து ஒரு சங்கிலியை திருஷ்டித்து என் கழுத்தில் போட்டார். நான் தலையை அவர் பாதத்தில் வைத்துக் கட்டிப் பிடித்தேன். பக்தர்களின் கரகோஷம் கேட்டது. நான் அழுதேன். இந்த மகிழ்ச்சியில் பாடுவதற்கு அனுமதி கேட்க முதலில மறந்து விட்டேன். சுவாமி போக ஆயத்தமானபோதுதான் பாட அனுமதிக்குமாறு கேட்டேன். ஆ! ஆ! பாடு பாடு என்று சொல்லி விட்டுப் போனார்.




பாடல் பயிற்சி எடுக்கும் போதுதான் நான் எவ்வளவோ திருந்த வேண்டுமென்று அறிந்தேன். சுருதியைச் சரியாகக் கவனிப்பதில்லை. பின்பு நான் பஜனைக் குழவில் அங்கத்தவரானேன். இதன் பிற்பாடு சுவாமியின் தெய்வீக தன்மையை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை. சுவாமி எப்போதும் சொல்வார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எனக்கு உனது பக்தி தேவையில்லை
உனது உன்னத மாற்றமே எனக்குத் தேவை”

“சாயி கீதாவும் சுவாமியும்” என்ற குறு வீடியோ காட்டினார்.(https://www.youtube.com/watch?v=vhLpG-FJsfU) இருவருக்கும் இடையில் உள்ள தொடர்பை விவரிக்க முடியாது.

ஒருநாள் சுவாமி தரிசனத்தை முடித்தவிட்டு தனது வாசஸ்தலத்திற்கு சென்றார். 10.30 மணிக்கு சுவாமி திடீரென காரில் வெளியே வந்து, மாணவர் விடுதியை நோக்கிச் சென்றார். சாயி கீதா தெருவின் ஓரத்தில் வந்து நின்றது. சுவாமியின் கார் மெதுவாக வந்து சாயி கீதா அருகில் நின்றது. சாயி கீதா உடனே தனது தும்பிக்கையை காரின் போனெற் மேல் போட்டது. இதனால் கார் மேலும் போகமுடியாது நின்றது. சுவாமி கண்ணாடியை இறக்கிறார். உடனே தனது தும்பிக் கையால் சுவாமியின் தலை நெஞ்சு எல்லாவற்றையும் தடவியது. சுவாமி கீழே இறங்கினார். தும்பிக்கையால் சுற்றிப் பிடித்துக் கொண்டது. சுவாமியின் அங்கியும் நனைந்து விட்டது. “நான் ஒரு இடமும் போகவில்லை. திரும்பி ஆச்சிரமத்திற்குப் போகிறேன் என்னை விடு”. என்று அன்பாகச் சொன்னார். பின்புதான் தனது பிடியைத் தளர்த்தியது. அச்சமயம் சுற்றி நின்ற மாணவர்களைப் பார்த்து, “நான் திடீரென பங்களூருக்குப் போகப் புறப்பட்டடேன் ஒருவருக்கும் சொல்லவில்லை. இந்த பிராணிக்குத் தெரிந்து விட்டது. அவள் என்னுடன் ஒன்றி விட்டாள். எனது எண்ணம், உணர்வு எல்லாம் அவளுக்குத் தெரியும். குழந்தையாக இருந்த பொழுது எடுத்து வளர்த்துள்ளேன். அவளின் அன்பு விரிவடைந்து என்னுடன் கலந்து விட்டது”என்று சொன்னார்.

ஒரு நாள் சுவாமி எங்களைப் பார்த்து “ஹே! பையன்கள் என்னை நேசிக்கிறீர்களா?”என்று கேட்க எல்லோரும். ஆம் என்று சொன்னோம். சுவாமி உடனே “நீங்கள் என்னை விரும்புகிறீர்கள் நேசிக்கவில்லை. என்னை நேசிப்பதென்றால் என் மீது அபாரமான வியப்பும் கவர்ச்சியும் ஏற்பட வேண்டும்”என்று சொன்னார்.

ஒருமுறை பஜன் பாடும் பொழுது, எனக்கு இரண்டாவது பஜனை கொடுக்கப்பட்டது. நான் பாட இருந்த பஜனையை இன்னொரு மாணவன் பாடத் தொடங்கி விட்டான். என்னை விட நன்றாகவும் பாடத் தெரியாது இந்த எண்ணம் உடனே கோபமாக எழுந்தது. பின்பு வெறுப்பு பொறாமையாக மாறியது. நாம் பஜனை பாடுவதையா அல்லது சுவாமியையா நேசிக்க வேண்டும்? சுவாமி பரிபூரணமானவர் அவரை விமர்சிக்கலாமா? நாங்கள் செயல்களில் ஈடுபடும் பொழுது சுவாமியின் காட்சி தெரிந்தால் மிகவும் திருப்தியானது. எங்களைப் பார்க்கும் போது மற்றவர்கள் சுவாமியைக் கண்டால் மிகவும் திருப்தியானது. மற்றவர்கள் எங்களை மதிக்கவில்லையோ அல்லது மரியாதை கொடுக்கவில்லையோ என்று சேவை செய்யும் போது எண்ணக்கூடாது. அன்பின் நிமித்தம் செய்யப்பட வேண்டும். உங்களின் திறன்களை மற்றவர்களுடன் பகிர்ந்தால் நீங்கள் தெய்வமாகலாம். எங்காவது தெருவிலோ, சந்தையிலோ, தொழில் நிறுவனத் திலோ மற்றவர்கள் எங்கள் அன்பினால் ஈர்க்கப் பட்டால் நாம் தெய்வீக உருவமேயாகும்.

விவிலிய நூலில் ஒரு வாக்கியம்
“ஆண்டவனின் இராச்சியத்தையே தேடு. மிகுதியெல்லாம் தரப்படும்”என்பதாகும்.

என்னால் என்ன செய்ய முடியும். என்னில் ஒன்றுமில்லை. உன்னிடமே சரணடைந்தேன். உனது அன்பின் சிறிதளவையாவது ஏனையோர் மீது பரப்பினால் அதுவே மிகவும் சிறந்த தொண்டாகும்.

இதுதான் அன்பின் விரிவாக்கம். இது தான் பக்தி.

பின்வரும் பிரார்த்தனையைச் சொன்னார்.
“ஓ சாயி நான் உங்கள் கையிலே
என்னைச் சமர்ப்பிக்கிறேன்
என்னை கருவியாக பாவிக்கவும்
நான் எனது கனவுகள், திட்டங்கள்
அனைத்தையும் பிரபுவின் கைகளிலே
சமர்ப்பிக்கின்றேன்.
என்னால் முடிந்தளவு திறமையாகப்
பணியைச் செய்வேன்.
நான் தங்களை வணங்குவதற்காக வந்துள்ளேன்.
தங்களைப் புகழ வந்துள்ளேன்
எனது இறைவா! எனது இறைவா!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# இலட்சிய வாழ்வு ...

**என்ற தலைப்பில் பிஜு புருஷ்டி**

சாயிராம்!

சுவாமியிடம் பிரார்த்திப்போம். மாநாட்டின் இந்தக் கடைசி நிகழ்வு எம்மை இலட்சிய வாழ்வு வாழ வழி நடத்தட்டும். இதனால் நாம் சுவாமிக்குப் பெருமை அளிப்போம்.

- நாம் சுவாமியை நேசிக்கிறோம் என்பது முக்கிய மல்ல
- சுவாமி எங்களை நேசிக்கிறாரோ என்பதும் முக்கிய மல்ல. ஏனென்றால் சுவாமி எங்களை எப்போதும் நேசிப்பவரே.
- எமது வாழ்வினால் அவர் பெருமைப்படுவாரோ என்பது தான் முக்கியம்.

சில நிகழ்வுகளைப் பார்ப்போம்:

திரு.சி.எஸ். மணி என்பவரின் அனுபவம்:

அவர் பெரிய கம்பனியில் வேலை பார்க்கிறார். சுவாமியின் பல்கலைக்கழகப் பட்டதாரி அவர் வேலைக்காக முதல் நேர்காணலுக்குப் போயிருந்த பொழுது, கம்பனித் தலைவர் "நீங்கள் மிகவும் நல்ல சூழலிலே கற்று வந்துள்ளீர்கள். அந்தச் சூழலிலே நல்லவனாக இருப்பது கஷ்டமில்லை, ஆனால் இங்கே பலவிதமாக சவால்களை எதிர் கொள்ள வேண்டும். போட்டி, பொறாமை, பொதுமக்களின் செயல்கள் எல்லாமே சவால்களாக இருக்கும். இதைச் சமாளிக்க முடியுமா?"என்று கேட்டார். அதற்கு மணி அவர்கள் " உதாரணமாக ஒரு டயர் உருவாக்கப்பட்டால் அதை நாம் நல்ல தெருவில் பரீட்சித்துப் பார்த்தால் போதாது, கரடு முரடான பாதைகளிலும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். என்னை நீங்களும் பரீட்சித்துப் பார்க்கலாம்"என்று பதிலளித்தார். அவருக்கு வேலை கொடுக்கப்பட்டது. முதல் வேலையே நிதித் திட்டமிடல் பகுதியில் ஒரு பாரிய திட்டத்திற்குப் பொறுப்பாக அமர்த்தினார்கள். இக் கம்பனி பெரும் தொகை பணத்தை வெளிநாட்டில் முதலீடு செய்வது என்பது இத்திட்டம். இது அரசாங்கத்தாலும் அனுமதிக்கப்பட வேண்டும். தேவையான கணக்குகள் எல்லாம் சரி பார்த்து சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அனுமதியும் கிடைத்தது. அவர் இதைப் பற்றிச் சிந்தித்த பொழுது ஒரு இடத்தில் ஏதோ பிழை விட்டிருப்பாதக உணர்ந்தார். இதை யாராவது கண்டு பிடித்தால் கம்பனிக்கு மிகவும் அவமானமும் நட்டமும் ஏற்படும் அடுத்த நாள் தனது மேலதிகாரியிடம் சென்று பிழை விட்டதைப் பற்றி சொல்லி, அதைக் கூடிய சீக்கிரத்தில் சரி செய்வதாகவும் சொன்னார். மேலதிகாரி திட்டத்தை மீள் பரிசீலனை செய்து அறிக்கையைத் தயாரிக்குமாறு சொன்னார். மீளாய்வு செய்த பின் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டு அரசாங்கத்தின் அங்கீகாரமும் கிடைத்தது. கம்பனித் தலைவர் இரண்டரை வருடத்திற்குப் பின்பு இவரைக் கூப்பிட்டு முழுக் கம்பனிக்கும் பொறுப்பாக இருக்கும் படி சொன்னார். இவர் சம்மதிக்க முன்பு ஏன் குறைந்த அனுபவமுள்ள தன்னைத் தேர்ந்தீர்கள் என்று வினாவினார். தலைவர் "விட்ட பிழையை ஏற்றுக் கொள்ளும் துணிவு இருந்தது. அதைச் சீராக்கும் திறனும் இருந்தது. உண்மையும் நேர்மையும் என்னைக் கவர்ந்தன"என்று பதிலளித்தார்.

இந்தக் கம்பனியில் வருடப்பிறப்பு போன்ற விழாக்களின் பொழுது தானம் அல்லது கொடைகள் கொடுப்பது வழமை. இவருக்கும் பல பார்சல்கள் வந்து குவிந்தன. இதையெல்லாம் மறைமுகமான இலஞ்சம் என்று சொல்லி ஏற்க மறுத்து விட்டார். இச் செயல் வழமைக்கு மாறாக இருந்ததால் சக ஊழியர்கள் வியப்படைந்தார்கள். கம்பனி மேலதிகாரிகளும் வியப்படைந்தார்கள். கம்பனித் தலைவர் "நான் இக் கம்பனியில் 23 வருடங்கள் வேலை செய்துள்ளேன். நேர்மை என்ற கோட்பாடு இறந்து விட்டதென நினைத்தேன். நீர் அது இன்னமும் இருக்கிறது என்று செயலில் காட்டியுள்ளீர். எனக்கு சாயி பாபாவைப் பற்றித் தெரியாது. உம்மைப் போல் ஆட்களை உருவாக்கியதால் அவர் ஓர் மிகவும் மதிக்கப்பட வேண்டியவராவார்"என்று கூறினார். இது சத்திய சாயி உயர் கல்வி நிறுவனத்திற்கு எவ்வளவோ பெருமை யைக் கொடுத்துள்ளது.

இன்னொரு முன்னாள் சாயி மாணவன் கிருஷ்ணமூர்த்தி என்பவன் தனது பட்டப்படிப்பிற்கு பின்பு வங்கியில் வேலை செய்தார். சேர்ந்து ஒரு வருடத்தில் வங்கி மின் கணனி இணைப்புத் திட்டத்தை முன்னெடுத்தது. இருவருள் இவரையும் பொறுப்பாக விட்டார்கள். அத் திட்டத்தை முடிக்கக் குறைந்தது ஐந்து பேர் மேலும் தேவையென்று, சேர்க்கப்பட்டார்கள். ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. வேலை ஆரம்பமாகியது. இத் திட்டத்தை பாழ் படுத்த போட்டியான கம்பனிகள் இத் திட்டத்தில் ஈடுபட்டவர்களை உயர் சம்பளத்தைக் காட்டித் தங்களுடன் சேரச் சொல்லிக் கேட்டார்கள். இவர் மறுத்துவிட்டார். ஐந்து பேரின் வேலையை இவரும், இன்னொருவரும் சேர்ந்து குறித்த நேரத்திற்குள் செய்து முடித்தார்கள். சுவாமி பணத்திற்காக அடிக்கடி கம்பனி மாறக்கூடாதென்று கூறியுள்ளார். இவருடைய மேலதிகாரி இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் இவரைத் தன்னுடன் மதிய போசனத்திற்கு வருமாறு அழைத்தார். அவர் அப்போது "அந்த நிகழ்வு நடந்து 4 வருடங்களாகி விட்டன. ஆனால் உம்முடைய செய்கை என் மனதை விட்டு நீங்கவில்லை. இந்த இளம் வயதில், திறமை கொண்டு இத் திட்டத்திற்கு அர்ப்பணித்தீர். இதனால் வங்கியும் மேன்மையடைந்தது. நிறுவனத்தின் நலனை, உமது நலனிலும் பார்க்க மேலே வைத்து செயற்பட்டது இக் காலத்தில் பார்க்க முடியாது. உமது சாயி பாபா கோட்பாட்டை விடாது நீர் வாழ்ந்ததையிட்டு மகிவும் ஆனந்தப்படுவார்" என வாழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2002 ஆம் ஆண்டு சுவாமி ரேடியோ சாயி நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்தார். அன்று நாலு சொற்களை எங்களுக்கு முக்கியப்படுத்தினார். அவை யாவன:

- அறிவு - knowledge
- செயற்திறன் - Skill
- சமநிலை - Balance
- உட் பார்வை - Insight

சுவாமி இந் நிறுவனத்தில் உலாவி வரும் குறும் வீடியோ படம் காட்டப்பட்டது.

மேலே கூறிய நான்கும் எவ்வாறு செயற்படுத்தப் படுகின்றதென்பதை அறியலாம். உட்பார்வையைப் பலப்படுத்த வேண்டும். சக்தியை செயற்திறனாக மாற்ற வேண்டும். அறிவைக் கொல்லாது செயற்திறனாக வெளிக் கொணர வேண்டும். உமது வேலையைத் திறம்படச் செய்ய வேண்டும். சமநிலைப்படுத்தல் என்றால், அறிவும் செயற்திறனும் மனித மேம்பாடுகளுடன் இணைய வேண்டும். அல்லாவிடில் அழிவை ஏற்படுத்தும்.

எல்லா உபகரணங்கள் மூலமாகவும் எனது செய்தியைப் பரப்ப வேண்டும். 2001 ஆம் ஆண்டு ஓர் அமெரிக்கர் உபகரணங்களை அன்பளித்தார். எனக்கு "அங்கே போய் வேலை செய்"என்றார். இந்த அறை "எனது செய்தியை உலகெங்கும் பரப்பும்" என்று சுவாமி சொன்னார். அவர் சொன்ன படியே பிரசாந்தி நிலையத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் உடனுக்குடன் பரப்பப்படுகிறது.

புத்தக அறிவைப் பெற்று ஒருவர் டாக்டராகப் பட்டம் பெறலாம். அவரை டாக்டராக ஏற்றுக் கொள்ள லாமா? அவர் அறிவை செயல்திறனாக மாற்றும் பொது அறிவை உபயோகிக்கத் தெரிய வேண்டும். இத்துடன் ஒழுக்கக் கோட்பாடு மனித விழுமியங்களும் இணைக்கப்பட வேண்டும். இத்துடன் செய்யும் செயல், இறைவன், படைப்பு வாழ்க்கையின் நோக்கம் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். உள்ளுணர்வை விருத்தி செய்ய வேண்டும். அப்போது தான் இந்த டாக்டர் முழுமையான மக்கள் விரும்பும் டாக்டராக ஏற்கப்படுவார்.

மனிதனால் உண்டாக்கப்பட்ட அனர்த்தங்கள் அனைத்தும் அறிவு, திறன் உள்ளவர்களின் பற்றாக் குறையால் ஏற்படுகிறது அல்ல . அவர்களிடம் சமநிலை யில்லை. மனித நேயம் இல்லை. இதுதான் காரணம்.

உலக சுகாதார அறிக்கையின்படி ஆரோக்கிய மற்றும் உணவால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்க செலவழிக்கும் ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கு, வியாபார ஸ்தாபனங்கள் அந்த உணவுகளை விளம்பரப் படுத்துவதற்கு 500 அமெரிக்க டொலர் செலவழிக்கின்றன. இங்கே சமநிலை பேணப்படவில்லை. நாங்கள் நல்லவர்களாக வரவேண்டியது தான் முக்கியம். பெரியவர்களாக வருவது முக்கியமல்ல. பெரிய புத்தியுள்ள திறனாளிகள் உலகுக்கு அழிவையே ஏற்படுத்தியுள்ளார்கள். நான் முன்னர் கொண்ட முன்னுதாரண நடத்தை கொண்ட மணி, கிருஷ்ண மூர்த்தி அவர்களை ஞாபகப்படுத்துகிறேன். அவர்கள் கோட்பாட்டிலிருந்து தவறவில்லை. இதனால் தங்களுக்கும் சுவாமிக்கும் பெயரும், புகழும் பெற்றுக் கொடுத்தார்கள். இந்தச் சமநிலையை எப்படிப் பெறலாம்?

சுவாமி தந்த 5D களால் பெறலாம். இந்த 5D களில் நான் ஒழுக்கக் கட்டுப்பாடு என்ற D யையே முதல் முக்கியமாகக் கருதுகின்றேன். அது இருந்தால் இரண்டாவது D ஆக மன உறுதி தானாகவே வரும். இது இரண்டும் இருந்தாலே எழும் சவால்களை எதிர் கொள்ளலாம்.

**எப்படி மனதை அடக்கலாம்?**

எத்தனையோ விதமான சவால்கள் எதிர்வரும். அவற்றை எதிர்கொள்ளும் விதமும் தெரிய வேண்டும். நான் இவற்றை முக்குணங்களின் அடிப்படையில் உங்கள் முன் வைக்கின்றேன். அவையாவன. தமஸ், ரஜஸ், சாத்வீக சவால்களும் எதிர் கொள்ளும் முறைகளுமாகும்.

அனுமானை எடுத்துக் கொண்டால் இது இலேசாக விளங்கும். அனுமான் கடலைக் கடக்கும் பொழுதே இச் சவால்கள் எழுந்தன. அவற்றை எவ்வாறு அனுமான் எதிர்கொண்டாரென்று பார்ப்போம்.

இலங்கையைச் சென்றடைவதற்கு கடலைத் தாண்டிக் கொண்டிருக்கும் போது நைனாமலை மேலெழுந்து "அனுமனே நீ களைத்துப் போய் விட்டாய் என் மீது தங்கி ஆறுதல் எடுத்து காய், கனிகள் தின்று விட்டு போகலாமே? என்றது. அனுமான் "உங்களின் உதவிக்கு மிகவும் நன்றி. நான் இராம பிரானின் வேலையாகப் போய்க் கொண்டிருக்கிறேன். வேலையை முடித்த பின்புதான் ஆறுவேன்" என்று சொல்லி தடையை மீறிப் போனான். இந் நிகழ்வில் சாத்வீகத் தடை எழுந்தது. சாத்வீக முறையில் எதிர் கொள்ளப்பட்டது. தடையும் அன்பின் நிமித்தமே எழுந்தது. கோபம் ஆவேசமின்றி மென்மையாக உதவியை ஏற்று தாமதிக்காமல் சென்ற விதம் சாத்வீகம்.

உங்களுக்கும் பெற்றோர்கள் சில வேளைகளில் ஏதாவது செய்யப் போகும் பொழுது தடை போடுவார்கள். மென்மையாக விளக்கம் கொடுத்து தடையை எதிர் கொள்ள வேண்டும்.

கடலைத் தாண்டும் பொழுது சூராச என்ற அரக்கி அனுமானை விழுங்கத் தெண்டித்தாள். அவளின் வாய்க்குள்ளே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போனால் வாய் மூடியதும், போனவருக்கு முடிவுதான். அரக்கி அனுமானை எதிர் கொண்டதும், அனுமான் தனது உருவத்தை படிப்படியாக பெரிதாக்கினாள். அரக்கியும் தனது வாயை பெரிதாக ஆவென்று திறந்து கொண்டே போனாள். அனுமான் திடீரென்று தனது உருவத்தை மிகவும் சிறிதாக்கி அவளின் வாய்க்குள்ளே போய், மூடு முன்னர் வெளியே வந்து விட்டான். இங்கே ஏற்பட்ட தடை ரஜசிக். அனுமானும் தனது யுக்தியைப் பாவித்து தப்பிக் கொண்டான். இது ரஜசிக் முறை. இங்கே புத்தியால் தடை எதிர் கொள்ளப்பட்டது. எமது வாழ்விலும், உதாரணமாக கம்பனியில் வேலை செய்தால், ஒன்று கூடலின் போது மதுபானம் அருந்துவது வழக்கம். வியாபார முன்னேற்றத்திற்கும் அவசியம். ஒரு கம்பனித் தலைவன் குடியிலிருந்து தப்புவதற்கு, ஏனையவர்களுடன் கதைத்துக் கொண்டே அவர்களுக்குத் தெரியாமல் மதுபானத்தை பூச்செடிக்குள் ஊற்றித் தப்பிக் கொண்டார். இங்கேயும் ஏற்பட்டது ரஜசிக் தடை. அதைப் புத்திக்கூர்மையால் எதிர் கொள்ளப்பட்டது. ரஜசிக் முறை இதுதான்.

அக்பரும் பீபுலும் கதையும் இதைக் காட்டுகிறது. அக்பர் சக்கரவத்தி பீபூல் அவரின் மந்திரி. சக்கரவர்த்தியின் கேள்விகளுக்கு விடை காணுதலும் அவனது கடமையாயிருந்தது.

அக்பர்: ஏ பீபூல் என் மேல் முழுக்க மயிர் உள்ளது. உள்ளங்கையில் மட்டும் ஏன் மயிர் இல்லை.

பீபூல்: அரசே நீங்கள் பொருள்களை எந்நேரமும் வாரி வழங்குவதால் கையில் மயிர் முளைக்க நேரம் போதாது. அரசன் சிரித்து விட்டு

அக்பர்: அப்படியாயின் ஏன் என்னுடைய மந்திரிமார் கையில் மயிர் இல்லை?

பீபூல் : அவர்கள் நீங்கள் கொடுப்பதைத் தொடர்ந்து வாங்கிக் கொண்டிருப்பதால் அவர்களின் கையிலும் மயிர் முளைக்க நேரமில்லை. (அரசன் சிரித்துக் கொண்டே)

அக்பர்: அப்படியாயின் மற்றவர்களுடைய கையில் ஏன் மயிர் முளைக்கவில்லை?

பீபூல்: நீங்கள் தொடர்ச்சியாகக் கொடுப்பதையும், மந்திரிமார் வாங்குவதையும் பார்த்து, பொறாமையினால் தங்கள் கைகளை ஒன்றுடன் ஒன்று அடிக்கடி தேய்த்துக் கொள்வார்கள். இதனால் அவர்கள் கைகளிலும் மயிர் முளைக்கவில்லை.

பீபூலின் பதில் அக்பருக்கு ஆனந்தத்தை அளித்தது. புத்தி விவேகத்தினால் தனக்கு ஏற்பட்ட சவாலை பிபூல் எதிர் கொண்டான். இங்கே கெடுதல் விளைவிப்பதற்காகவே கேள்வியால் தடை போடப்பட்டது. தப்பிக்க புத்திக் கூர்மையும் சமயோசித புத்தியும் பாவிக்கப்பட்டது.

கடலைக்கடக்கும் போது ஏதாவது நிழல் பட்டாலே காயா கிரீவா என்ற அரக்கியால் உள்ளீர்க்கப்படுவார்கள். அனுமான் இழுக்கப்படுவதை உணர்ந்து அவளருகே சென்று பலமாக அவளைக் குத்தினார். அவள் மயங்கி விழுந்தாள். அனுமான் தனது பயணத்தை தொடர்ந்தார். இது தமஸ் சவால் தமஸ் விதத்தில் எதிர் கொள்ளப்பட்டது.

**சாதாரண வாழ்க்கை அனுபவங்கள்:**

விடியற்காலையில் அலாரம் அடிக்கிறது. சோம்பலினால் அதை நிறுத்தி விட்டு கூடிய நேரம் தூங்கினால், அந்நாள் முழுவதுமே பாழாய்ப் போய்விடும். சோம்பல் தமஸ்த்தடை தமஸ் சவாலை எதிர் கொள்வதற்கு விவாதம் ஸ்லோகம் ஒன்றும் தேவையில்லை. அதை உடனடியாக விலக்க வேண்டும். முளையில் கிள்ள வேண்டும்.

இரவு 10.00 மணிக்குப் படுக்க வேண்டும் என்று எண்ணி விட்டு கொஞ்ச நேரம் இணையத் தளத்தைப் பார்ப்போம் என்று சொல்லி ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குப் பாய்ந்து 12.00 மணி வரை பார்த்துத் தான் மிச்சம். சின்ன ஆசை பெரிதாகி நேரத்தையும் வீணாக்கி விட்டது. இப்படியான சவாலுக்குச் சம்மட்டி அடி கொடுக்க வேண்டும். எதிர் கொள்ள கட்டுப்பாடு அவசியம். கட்டுப்பாடு மனஉறுதியை அளிக்கும்.

நான் பஜனை பாடும் பொழுது நீண்ட வரிகளுக்கு மூச்சைப்பிடிக்க முடிவதில்லை. இதை நிவர்த்தி செய்ய காலையில் ஓட்டப் பயிற்சி செய்ய வேண்டுமென்று புத்திமதி கூறினார்கள். சுவாமியும் இதைத்தான் சில பாடகருக்குச் சொல்லியுள்ளார். முதலில் அலுப்பாயிருந்தாலும் பின்பு அதில் ஆர்வம் ஏற்பட்டது. ஓடம் தூரத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டினேன். இதற்காக அதிகாலையில் எழ வேண்டும். அதிகாலை எழுவதற்கு நேரத்திற்கு படுக்க வேண்டும். படிப்படியாக 10 கி.மீ ஓடப் பழகினேன். பசியும் கூடியது. பஜனையும் ஒழுங்காகப் பாட முடிந்தது. கட்டுப்பாட்டுடன் வாழ்வு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனது சிநேகிதன் பங்களூர் வைத்தியசாலையில் வேலை செய்பவன், கேரளாவிற்கு விடுதலைக்காலம் போய், ஒரு முனையிலிருந்து மறு முனை வரைக்கும் சைக்கிளில் பயணித்தான். போகும் வழியில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களின் விலாசத்தைப் பார்த்து அவர்கள் வீட்டிற்கு விஜயம் செய்தான். அவர்களுக்கு எவ்வளவு ஆனந்தம். பகவான்தான் இவரை அனுப்பியதாக அவர்கள் எண்ணினார்கள். இவனுக்கு சைக்கிள் ஓட விருப்பம். சுவாமி மேல் பக்தி முன்னாள் நோயாளிகளிடம் அன்பு. எல்லாவற்றையும் ஒன்றாக்கி இந்தச் செயற்பாட்டில் இறங்கினான். புதுச்சேரியில் சர்வதேசப் புகழ் பெற்ற மரதன் ஓட்டம் வருடாவருடம் நடைபெறும். அது 42 கி.மீ தூரம். ஒவ்வொருவரும் தங்களால் இயன்றளவு தூரத்தை ஓடி முடிக்கலாம். நாமிருவரும் அதில் பங்கு பற்றி அரைத் தூரம் ஓடினோம். எங்களுக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. ஒரு சிறிய முயற்சியில் வெற்றியடைந்ததும் படிப்படியாக பெரிய முயற்சிகளில் வெற்றியைப் பெறலாம். இதையெல்லாம் வெற்றிகரமாக முடிப்பதற்கு சுவாமியைப் பிரார்த்திக்க வேண்டும். சுவாமியின் அருள்

Organized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவசியம். ஓட்டப் பயிற்சிகளின் போது நாய்கள் கலைத்துக் கொண்டு வரலாம். சுவாமியிடம் பிரார்த்திக்க அவர் பாதுகாப்பளிப்பார்.

நான் பிரசாந்தி நிலையத்தில் வசிக்கும் டாக்டர்.பூபாலராஜாவை நேர்காணல் கண்டேன். அவர் கண் வைத்தியருமாவார். அவர் 1965 இல் சுவாமியிடம் வந்தார். அவரிடம் மூன்று கெட்ட பழக்கங்கள் - புகைத்தல், மதுபானம் அருந்துதல், மாமிசம் உண்ணல் என்பன இருந்தன. 1969 இல் நேர்காணலின் போது இவற்றைவிட வேண்டுமென்று ஆவல் எழுந்தது. கொஞ்ச நாளைக்கு விடுவதும், பின்பு தொடங்குவது மாகஇருந்தது. எத்தனையோ தடவை முயற்சி செய்தும் நாளைக்கு விடுவதும், பின்பு தொடங்குவதுமாக இருந்தது. எத்தனையோ தடவை முயற்சி செய்தும் முற்றாக விட முடியவில்லை. 1983 ஆம ஆண்டு ரோமபுரியில் சாயி மாநாட்டிற்குச் சென்றார். (அப்போது அவர் இலண்டனில் வசித்தார்.) அங்கே கண்காட்சியில் ஆசைக்கு வரம்பு என்ற பகுதியில் வைத்திருந்த முழுவதையும் அக்கறையுடன் வாசித்தார். அப்போதே பகவானிடம் இதய பூர்வமாகப் பிரார்த்தித்தார். இலண்டன் போய்ச் சேர்வதற்கு முன்பே பலனளித்தது.

ஆகவே பகவவானைப் பிரார்த்தித்தால் எல்லா னு க்ளையும் கடைப்பிடிக்க ஏதவாக இருக்கும்.

பின்வரும் பாடலுடன் உரையை முடித்தார்.

"எந்தக் கணமும் என்னடன் இருக்கவும்.
எந்தச் செயலிலும் உங்கள் அன்பு
பிரதிபலிக்க வேண்டும். பாபா ! சாயி பாபா!
நான் விழும் போதும், உங்கள் கரங்களை நீட்டுங்கள்
நான் தூரப் போனால் திரும்பவும் உங்களுடன் இழுத்துக் கொள்ளுங்கள்.
அண்மையிலிருந்து அருகாமைக்கு மாற்றி விடும்
பாபா ! சாயி பாபா!

**பின்பு கேள்விகளுக்கு பதிலளித்தார்.**

**கேள்வி:**
சிலர் நாங்கள் சுவாமியின் தூதர்கள் என்றும், தங்கள் மூலமாக சுவாமி செய்திகள் அனுப்புகிறாரென்றும் சொல்லி வந்தால் அவர்களை சமித்தியில் வரவேற்கலாமா?

**பதில்:**
சுவாமி றேடியோ சாயியில் திரும்பத் திரும்ப அறிவிக்குமாறு கேட்டுள்ளார். அதாவது "தனக்குத் தூதுவர்களோ சீடர்களோ இல்லை. தான் ஒவ்வொரு பக்தனுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்வேன்". என்பது தான் அந்த அறிவித்தல். இவர்களை வரவேற்க வேண்டாம். சுவாமி எங்களில் மனச்சாட்சியாக இருக்கிறார். மனச்சாட்சி சொல்வது சரியாக இருக்கும். சுவாமியின் உரைகளை, சுவாமியைப் பற்றி வாசிக்க வேண்டும். அங்கே எந்தக் கேள்விக்கும், பிரச்சனைக்கும் தீர்வு உண்டு. சுவாமியின் செய்தியும் இதனூடாக உங்களுக்கு வரும்.

1970 ஆம் ஆண்டு சுவாமியைப் பற்றி ஒரு அமெரிக்கர் படம் எடுத்துள்ளார். இவர் சுவாமி மீது மிகுந்த பக்தியுடையவர். சுவாமி மகா சமாதியடைந்த சமயம் ஆகாயத்திலே சுவாமி தென்படும் காட்சியைக் கண்டார். அவருக்கு அப்போது குரல் கேட்டது:

I have not gone anywhere
I have gone Every where

சுவாமியின் ஒலி. இதன் தமிழாக்கம்:
நான் ஒரு இடமும் போகவில்லை
நான் எங்கும் நிறைந்துள்ளேன். என்பது தான்.

சுவாமி எங்களுக்கு விட்டுப் போயுள்ள சொத்து அவரின் போதனைகளேயாகும். அவதாரங்களுக்குச் சீடர்கள் இல்லை. எங்களுக்குத் தேவையானதெல்லாம் உள்ளே புதைந்து கிடக்கி ன்றது.

**கேள்வி:**
பஜன் நாமஸ்மரணை சேவை இவற்றின் முக்கியத்துவத்தின் ஒழுங்கு என்ன?

**பதில்:**
பஜன் ஆன்மீகமல்ல
நாமம் ஆன்மீகமல்ல
சேவை ஆன்மீகமல்ல
இவையெல்லாம் நல்ல சாதனைகள் என்று சுவாமி கூறியுள்ளார். கடவுளை நினைப்பதற்கும், நேர்மறையாகச் சிந்திப்பதற்கும் நல்ல சாதனைகள்.

தீய எண்ணங்கள் நடத்தைகளை அகற்று வதே மரணத்தை ஒழிக்கும் வழி என்று சுவாமி கூறியுள்ளார். நாங்கள் ஆறு உள் எதிரிகளை வெளியேற்றத் தொடங்கினால் எமது ஆன்மீகப் பயணம் தொடங்கி விட்டது என்பது அர்த்தம். சேவையினால் அகங்காரத்தை ஒழிக்கலாம். ஏனைய சாதனைகள் மிகுதியான எதிரிகளையும் வெளியேற்று வதற்கேயாகும்.

**கேள்வி:**
எமது வாழ்வின் குறிக்கோள் எம்மை அறிவதேயாகும். ஆகவே கடமை செய்வது எப்படி இந்தக் குறிக்கோளை அடைய உதவி செய்யும்?

**பதில்:**
பகவத்கீதையின் சாராம்சமே "எனது கடமை"என்பதேயாகும். தாய் தனது கடமைகள் அனைத்தையும் சரிவர செய்கிறாள். பஜனைக்குப் போக நேரமிராது. அவர் ஆன்மீகப் பயணத்தில் இல்லையா? செய்யும் கடமையை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செவ்வனே செய்வது ஆன்மீகம்தான். சுவாமி கடமைகளைப் பற்றி கொள்ள கடைசி வரியைப் பார்ப்போம்.
"கடமையில்லா அன்பு தெய்வீகமானது"
நாம் அன்பின் நிமித்தம் கடமை என்ற உணர்வை மறந்து செய்ய வேண்டியதெல்லாம் செய்தால், தெய்வீக நிலையை அடையலாம்.

**கேள்வி:**
எப்பொழுது பிரேமசாயி அவதாரம் நிகழும்?

**பதில்:**
எனக்கு இதற்கு விடை தெரியாது. யாராவது விடை கூறினால் அவரின் அறியாமையை குறிக்கின்றது. எங்களால் சுவாமியை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. அவரைப் பற்றி ஊகிக்கலாமே தவிர உண்மையை அறிய முடியாது. உதாரணமாக 86 என்ற எண்ணுக்கே எங்களுக்கு விளக்கமில்லை. 86 இல் மகாசமாதியடைந்ததற்கு எத்தனை விளக்கங்கள்? 86 வருடங்களாக சுவாமி எவ்வளவையோ செய்திருக்கிறார். எவ்வளவோ போதித்திருக்கிறார். கையில் இருக்கும் பொக்கிஷத்தை மறந்து இனி வரப்போகும் பொக்கிஷத்தைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? இக் கேள்வி மூலம் அவதாரின் நோக்கம், செயற்பாடுகள் எல்லாமே மறைந்து போய் விட்டன. சத்திய சாயி பாபா பிரேம சொரூபம். எனக்கு அவரேதான் பிரேமசாயி

**கேள்வி:**
சாயி சமித்தியை விட்டு நான் வெளியே வந்ததும் மனம் குழப்பம் அடைகிறது. வெளியில் பல காரணிகள் திசை திருப்புகின்றன. என்ன செய்யலாம்?

**பதில்:**
தீயவர்களுடன் சேராதிருக்க வேண்டும். நல்லவர்களுடன் சேர வேண்டும். சவால்கள் எழும் பொழுது என்ன மாதிரியான சவாலோ ( தமஸ், ரஜஸ், சாத்வீக) என்றறிந்து அந்த குண முறையை கையாண்டு எதிர் கொள்ள வேண்டும். மேலும் சுவாமியைப் பிரார்த்திக்க வேண்டும். காயத்ரீ மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

**கேள்வி:**
தங்களுக்கு சுவாமியோடு நேரடியாக நிகழ்ந்த அல்லது ஏற்பட்ட அனுபவத்தை சொல்லவும்?

**பதில்:**
நான் பங்களூர் அதி விசேட வைத்தியசாலையில் வேலை செய்யும் பொழுது நோய்வாய்ப் பட்டேன். கணனிமயப் படுத்தும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் வைத்திய சாலைக்குரிய கணனி செயற்பாட்டில் பயிற்சி பெற்றிருந்தேன். நோய்வாய்ப் பட்ட காலத்தில் என் மீது அளவில்லா அன்பு காட்டினார். இப்படிப் பார்த்தால் இதுதான் எனது வாழ்வின் சிறப்பான பாகம். பின்பு 4 வருடம் வேலை தராமல் இருந்தார். அப்போது ஆரோக்கியக் குறைவும் இருந்தது. இப்படிப் பார்த்தால் இதுதான் கஷ்டமான காலமாக இருந்தது. ஒரு நாள் பார்த்துக் கேட்டார். "உத்யோகம் வேணுமா? நான் ஆம் என்றேன். "முதலில் யோகம் பின்புதான் உத்யோகம்"என்றார். யோகம் என்றால் கடவுளுடன் இணைதல் என்று பொருள். ஆனால் வேலையில்லாத காலத்தில் பல திறன்களை விருத்தி செய்ய முடிந்தது. அவை இப்போது என் தொழிலுக்கு மிகவும் வளமாக இருக்கின்றன.

வாழ்வில் என்ன நிகழ்ந்தாலும் எமது நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ள வேண்டும். சுவாமி எல்லாம் அறிந்தவர். அவர் என்மீது அளவில்லா அன்பு காட்டினார். ஒவ்வொருநாளும் என்னுடன் ஏதாவது கதைப்பார்.

இம்மாநாடு எனக்கு மிகுந்த ஆனந்தத்தை தந்துள்ளது. மறக்க முடியாத நிகழ்வாகும்.

சுவாமியினுடைய பிரசன்னத்தை மாநாடு முழுநேரமும் உணர்ந்தேன். என்னுடன் H2H radiosai மூலம் தொடர்பு கொள்ளலாம்.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் 16.03.2014 அன்று பிஜு புருஷ்டி ஆற்றிய உரையின் தமிழாக்கம்

சாயிராம்!

(அறிமுகம்:

அன்பன் பிஜு புருஷ்டி ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்தவர். பிரசாந்தி நிலையத்திலுள்ள சத்திய சாயி பாடசாலையில் 11 வது வருட வகுப்பில் சேர்ந்தார். அங்கிருந்து பிருந்தாவன் வளாகத்தில் வணிகமாணி பட்டத்தை முடித்து பின்பு எம்.பீ.ஏ பட்டத்தையும் பெற்றார். படிப்பு முடிந்ததும், சுவாமி அவரை விசேட படிப்புக்காக பங்களூரில் சேர்த்து வைத்தார். அது முடிந்ததும் பங்களூரிலுள்ள அதிவிசேட வைத்திய சாலையில் கடமையாற்றினார். அக்காலத்தில் சுகயீனம் காரணமாக 2 வருடங்கள் லீவில் நின்றார். வருத்தம் சுகமானதும், சுவாமி மேலும் 2 வருடங்கள் ஆறுதல் எடுக்கும்படி கூறினார். இக் காலத்தில் பல திறன்களைப் பெற்றார். (பாடல் பேசுதல், தொழில் நுட்பம்) ரேடியோ சாயி நிறுவனம் நிறுவப்பட்டதும் இவரை அங்கு வேலைக்கு அமர்த்தினார். அவர் பக்தர்களுடன் பல நேர்காணல், கல்வி வட்டங்கள் நடத்தியுள்ளார்.)

உரையாற்ற முன்பு காயத்ரீ மந்திரத்தை உச்சாடனம் செய்து, பகவானைப் பிரார்த்தித்தார்

"எனது தெய்வத் தாயே. தங்களின் தூய்மையான அன்பினால் எனது இதயத்தை நிரப்புங்கள். இத் தூய அன்பு இதயத்திலிருந்து எழும்பி கண்கள் மூலமாக, பவித்திரமான பார்வையாக எழட்டும். இனிய சொற்களாக வெளிவரட்டும். எனது கை கால்கள் மூலமாக வெளியேறி, தேவையானவர்களுக்குப் பாயட்டும்.

எனது ஒவ்வொரு கலன்களில் நிரம்பி, எல்லோருக்கும் பயனுள்ளதாக வெளிப்படட்டும்."

இந்நிலைய மண்டபம் மகிவும் பெரிதாகவும், அழகாகவும் உள்ளது. மேடையிலிருக்கும் படம் என்னைக் கவர்ந்துள்ளது. அப்படம் புன்சிரிப்புடன் சுவாமி இருப்பதை அவர் எங்களுடன் இருப்பதாகவே நான் உணர்கிறேன். இப்படம் நான் புதுச்சேரி நிலையத்தில் பார்த்ததைப் போலவே இருக்கிறது. இதன் பின்னணியில் கதையுண்டு. 1960 ஆம் ஆண்டு முற்பகுதியில் அந்த நிலையம் பேராசிரியர் கஸ்தூரியினால் திறந்து வைக்கப்பட்டது. சுவாமி இதே மாதிரியான படத்தை ஆசீர்வதித்து கஸ்தூரியிடம் கொடுத்து அந்த நிலையத்தில் பிரதிஸ்டை செய்யுமாறு சொல்லி அனுப்பியிருந்தார்.

பேராசிரியர் கஸ்தூரியுடன் நிகழ்ந்த ஓர் நிகழ்வு நினைவுக்கு வருகிறது. நான் இங்கு வந்ததும் சுடச் சுட பால் தந்தார்கள். கஸ்தூரியுடன் சுவாமியின்



சம்பாஷனை:

சுவாமி:

கஸ்தூரி! சூடான பாலை எப்படிக் குளிர வைத்தால், அதாவது ஒரு பேணியிலிருந்து இன்னொரு பேணிக்கு மாறி மாறி ஊற்றினாலோ அல்லது பாற் கிண்ணத்தை குளிர்நீரில் கொஞ்ச நேரம் வைப்பதோ, உருசியைக் கொடுக்கும்.

கஸ்தூரி:

இக் கேள்வியால் கஸ்தூரி வாயடைத்து போனார். மிகவும் ஆச்சரியப்பட்டார். மறுமொழி தெரியாதென அறிவித்தார்.

சுவாமி:

ஒரு துப்புத் தருகிறேன். வீட்டிற்குப் போனதும் இதைப் பற்றி அம்மாவிடம் கேள். எப்படி அவர் சூடான பாலைக் குளிர வைக்கிறார் என்று அதோடு அவர் செய்யும் முறையில்லை என்றும் சொன்னார்.

கஸ்தூரி தயாரிடம் கேட்ட பொழுது, தாயார் நெய்வேத்தியத்திற்குரிய பாலை நீரில் வைத்துத்தான் குளிர வைப்பதாகச் சொன்னார்.

இந்நிகழ்வு என்னத்தைக் குறிக்கிறதென்றால். சுவாமியின் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையையும், எல்லாம் அறிந்த தன்மையையுமே யாகும். அவர் எப்படி எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்கிறார். இதுதான் ஒரு சற்குருவின் இயல்பாகும்.

சுவாமி ஒரு போதுமே குறுக்குப் பாதையையோ, திடீர் பயணிக்கும் பாதையையோ விரும்புவதில்லை. சுவாமி எப்போதுமே மெதுவான தளர்வடையாத பாதையையே விரும்புகிறார். மகான்களாலும், அவதாரங்களாலும் பரிசோதிக்கப்பட்ட பாதையையே சுவாமி சிபார்சு செய்துள்ளார். எப்படி நாம் ஆன்மீகப் பாதையில் முன்னேற வேண்டுமென்று சிந்தித்தும் பல நிகழ்வுகள் ஞாபகம் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிஹரன் என்ற மாணவன் 11 ஆம் ஆண்டு வகுப்பில் வந்து சுவாமியின் பாடசாலையில் சேர்ந்தான். அவன் அந்த வயதிலேயே வயலின் வித்துவானாக இருந்தான். பல மேடை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளான். வயலின் வாசிப்பது அவனது உடற்பகுதியாகி விட்டது. வாசியாமல் ஒருநாள்கூட விடமாட்டான். இந் நாட்களில் மாணவர்கள் விடுதிக்கு வருமாறு சுவாமியை அழைத்தார்கள். சுவாமியும் அதை ஏற்றுக் கொண்டார். முதலாவது தவணை முடியும் நேரம். சுவாமியின் வருகையை முன்னிட்டு மாணவர்கள் பல நிகழ்வுகளைத் தயாரித்தார்கள். புதிதாகச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொள்வது முக்கியம். சிரேஸ்ட மாணவர்கள், இம் மாணவனை சுவாமிக்கு முன்னால் வயலின் வாசிக்கும்படி கேட்க, அவனும் தன்னைத் தயார் படுத்தினான். சுவாமியும் விடுதிக்குச் சென்று, மாணவர்கள் தயாரித்த ஊஞ்சலில் ஆடிக் கொண்டு நிகழ்வுகளை அவதானித்தார். இம் மாணவனின் வயலின் வாசிப்பை, மிகவும் உன்னிப்பாகக் கேட்டு இரசித்தார். சிறிது நேரத்திற்குப் பின்பு அம் மாணவனைக் கூப்பிட்டு, பாத நமஸ்காரம் கொடுத்து, திறமையை மெச்சி, தொடர்ந்து வாசிக்கும்படி சொன்னார். அரை மணித்தியாலத் திற்குப் பின்பு மாணவனைக் கூப்பிட்டு, அவனை உற்று நோக்கி...

"உனக்கு தியாகராஜ மகான் எப்படி இராமபிரானைத் துதித்துப் பாடுவாரென்று தெரியுமா?"என்று கேட்டார். தியாகராஜர் இராமபிரானின் பக்தன். அவர் கிட்டத்தட்ட 37000 பாடல்கள் பாடியுள்ளார். அதில் 300 - 400 தான் இப்போது இருக்கின்றன. அவர் இராமபிரானைத் துதித்துப் பாடும் போது தன்னையே மறந்திடுவார். எத்தனை பாடல் பாடினாரென்றும் தெரியாது. அவர் தனது இதயத்தை அர்ப்பணித்தே பாடுவார். அவரைக் கர்நாடக சங்கீதத்தின் தந்தையென்று கூறுவார்கள். அவரின் பாடல்கள் மிகவும் உருக்கமானவையும், பிரபல்யமானவையுமாகும். சுவாமி தியாகராஜரைப் பற்றி யாராவது கூறினால், பரவச நிலையை அடைந்திடுவார்.

இறைவனை வேண்டும் போது மூன்று விதமான முறைகளில் வேண்டலாம். உதாரணமாக:

- இராமா என்னைக் காப்பாற்று என்று வசனமாகக் கேட்கலாம்.
- பிரார்த்தனை பாவத்திலும் கேட்கலாம்.
- இசையுடன் இணைத்தும் கேட்கலாம்.

இசை பகவானின் கிருபையைப் பெறுகிறது. இசையுடன் கேட்டால் அது தெய்வத் தன்மையை அடைகிறது. தூய்மையும் இசைவும் இணைந்தால் ஆண்டவனின் கிருபை கிடைக்கும்.

திரும்பவும் மாணவனைப் பார்த்து, எப்படித் தியாகராஜர் பாடினார் என்று தெரியுமா? அவர் இராமபிரானுடன் தொடர்பையே ஏற்படுத்திக் கொள்வார். அவர் பாட்டின் தன்மையைப் பற்றி சிந்திக்கவில்லை. மெய் மறந்து பக்தியை சொற்களாகவும், இசையாகவும் மாற்றிப் பாடினார். உனது திறனையே சிந்தித்துக் கொண்டு வாசித்தால் அது இறைவனை மகிழ்விக்காது. அது இறைவன் மேல் கொண்ட அன்பு, பக்தியல்ல. அது அகங்காரத்தின் வெளிப்பாடேயாகும் என்று சுவாமி விளங்கப்படுத்தினார். மாணவன் தனது அறைக்கு வந்ததும், சுவாமி சொன்னதைப் பற்றி ஆழ்ந்து உள்நோக்கி ஆராய்ந்தார். அகங்காரம் கலந்த இசைத்திறனினால் பயனில்லை. அது என்னையும் பகவானையும் பிரித்து விடுகிறதே. இசைத்திறன் பிரிக்குமானால் என் பயன்? விவலிய நூலில் குறிக்கப்பட்டுள்ளது. "தேவனின் இராச்சியத்தைநாடு தேவையான அனைத்தும் தரப்படும்." இப்படி யெல்லாம் யோசித்து விட்டு அன்றிரவே வயலினில் இருந்த கம்பிகளை அறுத்து விட்டு மூலையில் வைத்தான். எனது அகங்காரத்தை ஏற்றுவதினால், இதனால் ஒரு பயனுமில்லை.

அம்மாணவனுடைய வயதில் புகழுக்கும் விளம்பரத்திற்கும் யார்தான் அடிமைப்பட மாட்டார்கள். அநேகமாக இப்படியான அகங்காரத்தை நீக்குவதற்குப் பத்து ஜன்மங்கள் எடுக்க வேண்டும். இங்கே சற்குருவின் கிருபையினால் சில நிமிட போதனையுடன் அகங்காரம் களைந்து விட்டது. ஆண்டவனின் தரிசனம், ஸ்பர்சனம், சம்பாஷணை எல்லாமே இவனுக்குப் பயனளித்தன. 5 வருடங்கள் வரை வயலினை வாசிக்கவுமில்லை. அதனைத் தொடவுமில்லை.

சுவாமியின் 70 ஆவது பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவன்று பிரபல பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமியும் வந்திருந்தார். அவர் பாடவரவில்லை. சுவாமியின் தரிசனத்திற்காகவே வந்திருந்தார். சுவாமி அவரை அன்று பாடச் சொன்னார். அவர் தான் தனது பக்கவாத்தியங்களுடன் வரவில்லையென்று சொல்ல சுவாமி அவரை மேடைக்குப் போகும்படி சொல்லி பக்கவாத்தி யங்களைத் தான் தருவதாகச் சொன்னார். சுவாமி ஹரிஹரன் என்ற மாணவனை அழைத்து, தனது வயலினைக் கொடுத்து, எம்.எஸ்க்கு பக்கவாத்தியம் வாசிக்கச் சொன்னார். நாங்கள் இறைவனை மிகவும் அக்கறையுடன் நேசித்தால், இறைவனும் எமது நலனில் மிகுந்த அக்கறை கொள்வார். இறைவன் மீது பக்திக்காகவே அன்பு செலுத்துவது, வேறு ஒரு காரணத்துக்காகவோ, இருக்கக்கூடாது. இதுதான் நிபந்தனையற்ற, எதிர்பார்ப்பற்ற பக்தி. இன்னொரு மாணவனைப் பற்றிய நிகழ்வு மனத்திற்கு வருகிறது. அவனின் பெயர் பாரத். அவனும் முன்னைய மாணவனைப் போல. 11 ஆம் வகுப்பில் சுவாமியின் பாடசாலையில் வந்து சேர்ந்தான். அவன் ஹிமாலாஸ் மாநிலத்திலுள்ள சிம்மா குறிச்சியைச் சேர்ந்தவன். இவனின் பெற்றோர்களுக்கும். இவனுக்கும் சுவாமியின் கிருபை தாராளமாகக் கிடைத்தது. ஒரு முறை குடும்பத்தை சுவாமி நேர்காண லுக்கு அழைத்தார். இந்தப் பையனை உள்ளறைக்கு கூட்டிச் சென்றார். சுவாமியின் பாடசாலையைச் சேரமுன்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல குழப்படிகள் செய்தபடியால், இவனுக்கு ஒருவித பயமேற்பட்டது.

**சுவாமி:** ஏ பையனே! நான் யார்?

**மாணவன்:** நீங்கள் கடவுள்.

**சுவாமி:** உண்மையாக நம்புகிறாயா?

**மாணவன்:** ஆம் சுவாமி. ஆம் சுவாமி

**சுவாமி:** உனக்கு உண்மையாக நம்பிக்கையில்லை. நீ நடிக்கிறாய்.

பின்பு சுவாமி கையை அசைத்து ஒரு படத்தைச் சிருஷ்டித்தார். 10 ஆம் ஆண்டில் படிக்கும் போது சோதனையின் பின்பு, மைதானப் பிற்பகுதிக்குப் போய் இவரும் நண்பரும் சிகரட் புகைத்திருந்தார்கள். இதையே சுவாமி படத்தில் சிருஷ்டித்துக் காட்டினார். இதன் பின்பு சுவாமி கடவுள் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டாள். சுவாமி இவன் மீது பெருமளவு கவனம் செலுத்தினார். பார்ப்பது, அருகே போய் கதைப்பது, கடிதம் வாங்குவது ஒவ்வொருநாளும் நிகழ்ந்தன. தரிசனத்தின் போது சக மாணவர்கள் இவனைச் சுற்றியே இருப்பார்கள். சடுதியாக ஒருநாள் சுவாமி உதாசீனம் செய்யத் தொடங்கினார். இந்தக் கவனிப்பற்ற நிலை தொடர்ந்தது. மாணவனுக்கு பெரிதும் அதிர்ச்சியாக இருந்தது. நாட்கள் போயின. நண்பர்கள் குறைந்தனர். ஆசிரியர் பெரியோர்களின் புத்திகளின்படி நடந்தும் நிலமை மாறவில்லை. மாணவன் ஏன் இந்த நிலை ஏற்பட்டதென ஆழ்ந்த விசாரணை செய்தான். சுவாமியின் கவனம் என்மீதிருந்தால் முழு உலகமுமே என்மீது விருப்பம் கொள்ளும். சுவாமி கை விட்டதும் உலகமும் கைவிட்டு விடும். ஆகவே நாம் கடவுளையே சார்ந்து நிற்க வேண்டும். அவர் எப்போதுமே எங்களுடன் இருப்பார்.

இப்போது துளசிதாஸ் பக்தனின் வாழ்வு ஞாபகத்திற்கு வருகிறது. அவன் மேன்மையான மனிதன். அவர் குணமான பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். வணிகமும் வருமானத்தைக் கொடுத்தது. ஆனால் மனைவி மீது அளவு மீறிப் பற்றாக இருந்தார். ஒரு கணமும் பிரிய மனமில்லாமல் இருந்தார். இதனால் வணிகம் குன்றியது. மனைவி ரத்னாலலிக்கு இது ஓர் வியப்பாக இருந்தது. கணவனை நல்வழிப்படுத்தும் நோக்குடன், ஒருநாள் தான் தாய் வீட்டிற்குச் சிலநாட்கள் போயிருக்கப் போவதாக கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்று விட்டார். துளசிதாஸ் வீடு வந்ததும், கடிதத்தை வாசித்து விட்டு மிகவும் துயரம் அடைந்தார். கடும் மழை பெய்து கொண்டிருந்தது. ஒன்றையும் பொருட்படுத்தாமல் அந்தக் கணமே மனைவியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். இருட்டு மழையுடன் ஆறும் பெருக்கெடுத்து விட்டது. ஒன்றையும் கவனிக்காமல் ஒரு பிணத்தை மரக்கட்டை என்று பிடித்துக் கொண்டு ஆற்றைக் கடந்தார். வீட்டிலும் இருட்டு. கதவும் பூட்டியிருந்தது. அவர் தொங்கிக் கொண்டிருந்த பாம்பை கயிறென்று நினைத்து மேல் மாடியில் ஏறினார். இவர் இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வந்ததையிட்டு மனைவி வேதனையடைந்தார். கணவரைப் பார்த்து "என் மீது காட்டும் அன்பில் பத்தில் ஒன்றளவு அன்பை கடவுள் மீது செலுத்தினால் கடவுள் தரிசனமே கிடைத்திடும்" என்று சொன்னாள். துளசிதாஸ் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். பின்பு அவர் எல்லாவற்றையும் துறந்து கடவுளை அடையப் புறப்பட்டார். அவர் மகானாக ஞானியாக மாறினார். இராமபிரான்மீது பக்தி பூண்டு இராமர் கதையையே எழுதினார்.

இனி பாரத் மாணவனின் நிகழ்வுக்கு வருவோம். அவன் கடவுளைக் கவரச் செய்யும் எல்லா யுத்திகளையும் கைவிட்டு அகத்திலே அவரைக் கண்டு ஆனந்திக்கத் தொடங்கினான். தரிசன மண்டபத்திற்கு அமைதியாக, ஆறுதலாகப் போய் பின் வரிசையில் உட்கார்ந்து கொள்வான். 3 மாதங்கள் கடந்தன. தனக்குச் சுவாமி காட்டிய அன்பை திரும்பத் திரும்ப நினைத்து ஆனந்தக் கண்ணீர் கொட்டினான். சுவாமி என்னை எவ்வளவாக நேசித்தார். நான் அப்படி அவரை நேசிக்கிறனோ என்றே ஆய்வு செய்தான். நான் சுவாமியை ஒரு எதிர்ப்புமில்லாமல் நேசிக்க வேண்டும். நான் சுவாமியை முழுமையாக நேசிக்கிறேன். இப்படியாகச் சிந்தித்து அக அமைதியை அடைந்தான். பித்தலாட்டம் முடிவடைந்தது.

ஒருநாள் தரிசனத்தின் போது அகப் பார்வையிலேயே நிலைத்து நின்றான். சுவாமி நேர்காணல் ஒன்றை முடித்து விட்டு வெளியே வந்தார். சுவாமி இம் மாணவனையே உற்று நோக்கி வந்தார். சுவாமி அவனை அழைத்து ஒன்றும் நடக்காதது போல, எப்படி இருக்கிறாய்? பெற்றோர் எப்போது வருவார்கள்? என்று முகத்தைத் தட்டிக் கேட்டார். இதுதான் ஒரு சத்குருவின் நடத்தை. எப்படி ஒருவரை மேல் நிலைக்கு ஏற்றுகிறார். இதிலிருந்து பக்தி என்றால் என்ன என்று விளங்கலாம். பக்தி என்றால் பக்திக்காகவே கடவுள் மீது பக்தி கொள்ளுதல் ஆகும். கடவுள் ஒன்றுக்காகவே வாழ்தல் ஆகும்.

பக்தியைப் பற்றி விளங்க பகவதத்தில் ஓர் நிகழ்வைப் பார்ப்போம். கிருஷ்ண பகவான் நீண்ட காலத்திற்குப் பின்பு. கடைசிக்காலத்தில் இராதையை யமுனா நதிக்கரையில் சந்திக்க வந்தார். வந்து "ஓ ராதா நான் வந்து விட்டேன்"என்றார். ராதா "ஆ சரி"என்று சொல்லி விட்டுத் தனது நிலையிலேயே இருந்தாள். கிருஸ்ணர் "ராதா ராதா உனக்குத் தரிசனம் கொடுக்க வந்துள்ளேன். என்ன வேண்டுமென்று கேள்"நான் தர இருக்கிறேன். இப்போதே கேள்" என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.




ராதா: இதென்ன இது! நான் வந்திட்டேன். நான் வந்திட்டேன் என்று சொல்வது. எப்போது இங்கில்லாமல் போனாய்? வந்திட்டேன் என்று சொல்வதற்கு! (ராதா நதிக் கரையில் போய் நீரை எடுத்து) கிருஷ்ணா இதில் இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாங்கட்டி, நீ இதில் இல்லையா? இலையைக் காட்டி நீ இதில் இல்லையா? எங்கும் வியாபித்துள்ளாயே.

கிருஷ்ணர்: உனக்கு ஒன்றுமே வேண்டாமா? என்னுடைய அன்பைத்தன்னும் வேண்டமாட்டாயா?

ராதா: கிருஷ்ணா இது என்ன, வியப்பாயிருக்கிறதே. நான் உன் மீது அன்பு கொண்டுள்ளேன் என்று நிச்சயமாக எனக்குத் தெரியும். பின்பு உன்னிடம் இருந்து அன்பை ஏன் கேட்க வேண்டும்?

இதுதான் பக்தி. பக்தி பக்திக்காகவேயிருக்க வேண்டும். நாம் கடவுளை நேசிக்கிறோம். என்றால், பக்தர்கள் என்றாலும் பின்வரும் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

- நான் உண்மையாகவே பக்தி வைத்துள்ளேனா?
- அது நிபந்தனையற்றதா? எதிர்பார்ப்புக்கள் அற்றதா? நிரந்தரமானதா? தொடர்ச்சியானதா?

நான் இங்கு வந்ததும், உள்ளிருந்து பக்தியைப் பற்றிப் பேசவேண்டுமென்று உந்தப்பட்டேன்.

ஒரு முறை நேர்காணல் அறையில் மாணவன் ஒருவருடன் சுவாமி தனது குடிநீர்த்திட்டத்தைப் பற்றி உரையாடினார். அப்போது சுவாமி நிதிப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு பிருந்தாவனை அடகு வைக்க வேண்டிவருமென்று சொன்னார். மாணவன் ஏன் சுவாமி?, ஏன் சுவாமி? என்று கேட்டான்.

சுவாமி:

“பக்தர்களுக்காக எதையும் செய்வேன். என்னைக்கூட விற்கவும் தயாராவேன். எனது விலை என்னவென்று உனக்குத் தெரியுமா? கையில் இரண்டு விரல்களால் பிடித்து, இவ்வளவு அன்பு காட்டினாலே, நான் என்னை முழுமையாக அன்பளித்து விடுவென்”என்று கூறினார். இது பக்தியின் இன்னொரு வெளிப்பாடு.

இன்னுமொரு பக்தனைப் பற்றிக்கூற வேண்டும். அவரின் பெயர் விக்ரர்கானு. அவர் ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள சீராலியோன் என்ற நாட்டைச் சேர்ந்தவர். அவர் இலண்டனில் தனது நாட்டின் மதிப்பிற்குரிய தூதுவராகக் கடமையாற்




றினார். அவரின் நாட்டு அரசாங்கம் மாறியதும் அவரின் வேலையும் இல்லாமல் போனது. அவரும் மனைவியும் இலண்டனிலேயே ஆசிரியத் தொழில் புரிந்து வந்தார்கள். அவர் சுவாமியிடம் 1981 ஆம் ஆண்டில் வந்தார். அவரைச் சுவாமி கிருஷ்ணா என்றே அழைப்பார். 1987 ஆம் ஆண்டில் நேர்காணலின் போது, அவரை சாம்பிய என்ற நாட்டில் சத்திய சாயி பாடசாலையை ஆரம்பிக்குமாறு சொன்னார். இவருக்கோ சம்பியா நாட்டைப்பற்றி ஒன்றும் தெரியாது. எப்படி ஒரு பாடசாலையைத் தொடங்குவதென்றும் தெரியாது. ஆனாலும் சுவாமியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, “சுவாமி நிதிக்கு என்ன செய்வது?”என்று கேட்டார். சுவாமி இலண்டனிலுள்ள வீடு ஏனைய பொருட்கள் எல்லாவற்றையும் விற்று எடுக்கலாம் என்று சொன்னார். மனைவியார் அப்போதும் நிதி காணாது என்று சொல்ல, “வங்கியில் கடன் எடுக்கலாம் தானே”என்றார் சுவாமி. அவர்கள் சுவாமியின் வேண்டுகோளை தலைமேல் வைத்து, இலண்டன் போய் எல்லாவற்றையும் விற்று சம்பியா நாட்டில் வசிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் பாடசாலையைக் கட்டினார்கள். அது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே ஏனைய பாடசாலைகளுக்குப் போகமுடியாதவர்கள், வெளி யேற்றப்பட்டவர்களை இதில் சேர்த்தனர். இந்த மற்றவர்களால் வேண்டப்படாத பிள்ளைகள் சிரமத்துடன் கல்வியிலும், ஏனைய ஆற்றல்களிலும் திறமை கூடியவர்களாக வரச் செய்தார்கள். அவர்களின் திறன், நல்ல பழக்கங்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தது. பரீட்சைகளில் முன்னிலை இணைப்பாடவிதான நிகழ்வுகளிலும் முன்னிலை வகித்தார்கள். இப்படி எவ்வாறு மாணவர்களை மிகவும் குணாதிசயமான திறமை மிக்க பிள்ளைகளாக உருவாக்கினார்கள் எனப் பல கல்வியியலாளர்கள் போய் ஆராய்ந்தார்கள். இதை **“அற்புதப் பாடசாலை”** என்றே (Miracle school) எல்லோரும் அழைப்பார்கள்.

நான் அவரை ஒரு நேர்காணலின் போது, எவ்வாறு அப் பாடசாலையை அற்புதப் பாடசாலை யாக ஆக்கினீர்கள்? என்ன மாந்திரீகம்? என்று கேட்டேன். இதற்கு அவர் “மனைவியும் நானும் எங்களை முழுமையாக அர்ப்பணித்தோம். நாம் சுவாமியின் மீது கொண்டுள்ள அன்பை மாணவர்கள் மீதும் செலுத்தினோம். சுவாமியின் கிருபையும் மேலோங்கியது. ஒரு மாந்திரீகமும் இல்லை தந்திரமும் இல்லை” என்று சொன்னார்.

2005 ஆம் ஆண்டு நேர்காணலின் போது ஒரு ஆபிரிக்க பக்தன் சுவாமியிடம் “சுவாமி 1968 இற்குப் பின்பு ஆபிரிக்காவிற்கு வரவில்லை. தயவு செய்து வரவேண்டுமென்று இரங்கிக் கேட்டான். சுவாமி “ஏன் நான் அங்கு எப்போதுமே இருக்கிறேன். நான் எனது தரிசனத்தை விக்ரர் கிருஸ்ண கானு மூலம் வெளிப்படுத்துகிறேன்” என்று சொன்னார். பக்தியில் நாமே சுவாமியின் அன்பு பாய்கின்ற கருவியாக மாற வேண்டும். சில வருடங்களுக்குப் பின்பு, கிருஸ்ண கானுவிற்கு சத்திர சிகிச்சை நடந்தது. அவர் நோய்வாய்ப் பட்டார். பார்வையும் இழந்தார். சுவாமியிடம் தனது நிலையைக்கூறி எவ்வளவு காலம் இருக்கலாம் என்று கேட்டார். சுவாமி “விக்டர் எனக்கு ஏராளமான வேலையுண்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எனது மற்றைய அவதாரத்திலும் எனது வேலையைச் செய்வாய்." என்று கூறினார். சுவாமி 2011 ஏப்ரலில் மகா சமாதியடைந்தார். விக்டர் செப்டம்பரில் இவ்வுலகை விட்டு நீங்கினார். விக்டரின் வாழ்வு மனப்பாங்குதான் பக்தி, கடவுளுடன் ஒன்று சேர்வதுதான் பக்தி.

**(விக்டர் கானுவுடனான நேர்காணலை இணையத்தில் பார்ப்பதாயின்:**http://media.radiosai.org/journals/vol_09/01OCT11/kanu1.htm)

நான் இப்படியே நீண்டநேரம் பேசிக்கொண்டே போவேன். இனி உங்களிலுள்ள சந்தேகங்களைக் கேட்டால் இயன்றளவு தெளிவாக்குவேன். பிரசாந்தி நிலையம், ஆன்மீகம், சேவை, வாழ்வு இதைப்பற்றிக் கேள்விகள் கேட்கலாம் என்று கூறி உரையை நிறைவு செய்தார்.

கேள்விகளை எழுதி கொடுப்பதற்கு நேரம் வழங்கப்பட்டது.

கேள்வி பதில் நேரம்.............

(கேள்விகள் எல்லாம் தொகுத்து பகுதியாகப் பிரித்து கொடுக்கப்பட்டது. பல கேள்விகள் ஒரே ஐயங்களையே கேட்டன. புருஷ்டி அவர்கள் தனித்தனியே பதில் வழங்காது அனைத்துக்கும் சேர்த்தே பதிலளித் துள்ளார்.)

காயத்ரீ மந்திரம் மிகவும் பலம் வாய்ந்தது. வேதத்திலுள்ள மந்திரங்கள் அனைத்திற்கும் தாய் மந்திரமே காயத்ரீ மந்திரமாகும். சுவாமி வேதங்களை ஓதுவதற்கு இந்த தடைகள் எல்லாவற்றையும் நீக்கி, பிரபஞ்சத்திற்கே வேதம் உரியது என பிரகடனப் படுத்தியுள்ளார். எல்லோரும் வேதம் ஓதலாம். மந்திரங்களை உச்சாடனம் செய்யலாம்.

வேதம் கடவுளினாலே ரிஷிகள் மூலம் எமக்குத் தரப்பட்டன. ஆகையினால் தான் ஆழ்ந்த விரிந்த நுண்ணியமான கருத்தை கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆங்கிலத்தில் சமஸ்கிருதப் பதங்களை மொழி பெயர்த்தால், கருத்துக்களில் நூறில் ஒரு பங்கே எமக்குக் கிடைக்கும். புத்தகத்திலே தரப்பட்ட கருத்துக்கள் முழுமையானவையுமல்ல, இந்த மேன்மையான விளக்கம் எனக்குச் சில மாதங்களுக்கு முன்பே கிடைத்தது.

நான் ஒரு இதய சத்திர சிகிச்சை நிபுணருடன் கதைக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் ஹைதரபாத்திலுள்ள சத்திய சாயி பாடசாலையில் படித்துப் பின் ருஷ்யாவில் 7 வருடங்கள் மருத்துவப் படிப்பை படித்துள்ளார். பிரசாந்தி நிலையத்தில் தரிசனத்தின் போது, அவரைப் பார்த்துக் கேட்டார்.

**சுவாமி:** நீ என்ன படித்துள்ளாய்?

**பக்தன்:** நான் இருதயத்தைப் பற்றி படித்துள்ளேன்.

**சுவாமி:** இருதயத்தை பற்றி மாத்திரமே படித்தாயோ? ஏனைய அவயவங்களைப் பற்றியும் படித்திருக்க வேண்டுமல்லவா?

**பக்தன்:** இதயத்தை மாத்திரம் படிக்க 7 வருடங்கள் எடுத்தன. ஏனைய அவயவங்களைப் பற்றிப் படிக்க 70 வருடங்கள் தேவைப்படுமே சுவாமி.

**சுவாமி:** அதற்கென்ன 70 வருடத்திற்குப் பின்பு ஒரு வருடமாவது நல்ல முழுமையான வைத்தி யராக இருந்தால் நல்லது.

சுவாமி அவரை நேர்காணலுக்கு அழைத்தார். அங்கே தனது கையைக் கொடுத்து நாடியைப் பார்த்துச் சொல்லச் சொன்னார். மருத்துவர் பிடித்துப் பார்த்து நாடித்துடிப்பு 70 என்று சொன்னார். எனக்கு நாடியைப் பார்த்து ஏனைய அவயவங்களைப் பற்றிக் கூறத் தெரியாது என்றார். சுவாமி, "நாடித்துடிப்பின் மூலமாக எவ்வளவோ சொல்லலாம். இந்த முறையைக் கற்றுக் கொள்"என்று சொன்னார். இதைத் தொடர்ந்து கனவிலோ ஒரு காட்சியிலோ, மருத்துவரிடம் கையைக் கொடுத்து தனது நெஞ்சைப் பற்றிச் சொல்லும்படி கேட்டார். நாடியைப் பார்த்து விட்டு, நெஞ்சை சோதிப்பதற்காக, ஸ்தெலஸ்கோப்பை எடுத்தார். சுவாமி உடனே நிறுத்தி, "அது எப்படி நீ செய்வாய்?"நோயாளி பெண்ணாயிருந்தால் நீ எப்படி நெஞ்சைப் பரிசோதிப்பாய்? நாடியைப் பார்த்தே உடல் ஆரோக்கியத்தைப் பற்றி சொல்லத் தெரிய வேண்டும். என்றார். பின்பு சுவாமி மருத்துவரை ஆயுர்வேதம் படிக்க வழிகாட்டினார். ஆயுர் வேதத்தில் சகல நோய்களும் வாதம், பித்தம், கபம் என்ற மூன்றின் சமநிலைக் குழப்பத்தினாலே எழுகின்றது என்பது தான் கோட்பாடு.

மருத்துவர் இக்கோட்பாடு மிகவும் எளிதானதாக இருக்கிறதே என்று சிந்தித்தார். ஆனாலும் சுவாமி சொன்னபடியால் ஏதோ ஆழமாக இருக்க வேண்டுமென்று நினைத்து, இதைப்பற்றிய நூல்கள் பலதைப் படித்தார். உண்மையான கருத்தை அறிவதற்கு சமஸ்கிருதம் படிக்க வேண்டுமென்று முடிவெடுத்தார். அவர் மிகவும் புத்திக்கூர்மையானவர். வகுப்பிலே எப்போதும் முதல் நிலையிலேயே இருந்தார். சமஸ்கிருதத்தில் 9 வகையான இலக்கணப் பிரிவுகள் உண்டு. அத்துடன் ஞாபக சக்தியும் அதிகமாகத் தேவை. ஒவ்வொரு இலக்கணப் பிரிவையும் ஒவ்வொரு மாதத்தில் படித்து 5 மாதத்தில் 5 பிரிவுகளைப் படித்து முடித்தார். மிகுதியைப் படிக்கத் தகுந்த ஆசிரியர் கிடைக்கவில்லை. இதன் பின்பு அதர்வணவேதத்திலுள்ள சனகசமீதர என்பதை விளக்க முயன்றார். ஒவ்வொரு சமஸ்கிருதப் பதத்திற்கும், ஒவ்வொரு இலக்கண முறையை உபயோகித்தால் 9 கருத்துக்கள் அடங்கும். 9 இலக்கண முறைகளையும் பாவித்தால் மொத்தமாக 81 கருத்துக்கள் எழலாம். இதை அறிந்த பின்பே சுவாமியின் அருளுரைகளும் விளங்கின. சுவாமி சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு சொற்களின் கருத்துக்களை வெவ் வேறாகச் சொல்வார். இது எங்களுக்கு மிகுந்த கலக்கத்தை உண்டாக்கியது. உதாரணமாபக "கோ" என்ற பதத்திற்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பசு, கோமாதா, கோபாலா, ஜீவாத்மா, மண் என்ற பல கருத்துக்கள் உண்டு. கருத்து மிகவும் பரந்தது. அதர்வண வேத்தில் வரும் சொற்களுக்கு 1 தொடக்கம் 10 வரையிலான அளவு கோலில் மேல்நாட்டு வைத்தியம் 1 அல்லது 1.5 இல் தான் நிற்கும். ஆயுர்வேதம் எவ்வளவு பரந்தது என்பதை அறியலாம். வேதங்கள் ஆண்டவனிடம் இருந்து வந்ததால், ஆங்கில மொழிபெயர்ப்பு முழமையான கருத்தைத் தரமுடியாது. சமஸ்கிருதச் சொற்களிலுள்ள வலிமை அளப்பெரியது. இதே போல பஜன்களில் வரும் சமஸ்கிருதச் சொற்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். உச்சரிப்பும் கவனமாக இருக்க வேண்டும். நாம் பயபக்தியுடன் வேதத்தை ஓத வேண்டும். பஜனையைப் பாட வேண்டும். கடவுளை அணுகுவது போல இச் சொற்களையும் அணுக வேண்டும்.

உதாரணமாக: ஒரு ஆதிவாசியான மனிதனுக்கு கைத் தொலைபேசியைக் கொடுத்து, சில மைல்களுக் கப்பால் பட்டினத்திலுள்ள மகனுடன் கதைக்க விட்டால், ஆதி வாசி வியப்பில் ஆழ்ந்து விடுவார். அவர் இதை ஒரு அற்புதம் என்றே எடுப்பார். கைத்தொலை பேசியைப் பாவிக்கும் நவீன மனிதர்களுக்கு அது ஒரு ஆச்சரியத்தையோ வியப்பையோ ஏற்படுத்தாது. மந்திரங்கள் தெய்வத்தினால் தரப்பட்டவை. இயந்திரங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டவை யாகும். யந்திரத்தின் வலிமையிலும் பார்க்க மந்திரங்களுக்கு அமோக வலிமையுண்டு. புராண காலங்களில் அம்புகளின் வலிமை சொல்லப்பட்ட மந்திரங்களின் படி வேறுபட்டதாயிருந்தது. தெய்வீக பாவத்துடன் மந்திரங்களை உச்சாடனம் செய்ய வேண்டும். ஒருநாள் அவற்றின் வலிமையை நாம் அனுபவ வாயிலாக அறிவோம்.


எங்களுடன் படித்த மாணவன். பட்டபின் பயிற்சிக்காக ஜப்பான் போனான். அவர் அங்கே நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீன் போல துன்பப்பட்டார். பாஷை தெரியாது சைவ உணவோ கிடைப்பது மிகவும் கஷ்டம். ஒவ்வொரு நாளும் சுவாமியைப் பிரார்த்தித்து இந் நிலமை மாறவேண்டு மென்று கேட்டான், அந்தக்கிழமை முடிவுநாள், அன்று சிறிது தூரத்தில் சாயி நிலையம் இருப்பதாக அறிந்தான். அவர்கள் வேதத்தைப் பற்றி மாநாடு நடாத்த ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கிருந்த அன்பர்கள் இவரை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். சுவாமியின் பழைய மாணவன் என்று அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவரை உரையாற்றும்படி கேட்டார்கள். அவர் என்ன பேசினார் என்றே தெரியாது. அந்த மாநாட்டில் இன்னும் 2 பழைய மாணவர்களைச் சந்தித்தார். இது 2007, 2008 ஆம் ஆண்டாக இருக்கும். மூவரும் மூன்று திசைகளி லிருந்து சுவாமியின் செய்தியைப் பரப்ப முடியும் என்று பெருமகிழ்ச்சியடைந்தா ர்கள். 2010 ஆம் ஆண்டு இந்நிகழ்வை நாடகமாக சுவாமியின் முன்னிலையில் நடித்தார்கள். 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அணுஉலை உடைந்து கதிர் வீச்சு கசியத் தொடங்கியது. மக்கள் இந்த இடத்திற்குப் போகப் பயந்தார்கள். ஒரு நிறுவனமும் அங்கு போய் உதவி செய்யத் தயாரில்லை. சத்திய சாயி அன்பர்கள் மந்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டு அந்த இடத்திற்குப் போய் மீட்பு வேலையில் ஈடுபட்டார்கள். அவர்கள் நிவாரண வேலைக்குப் புறப்பட்ட போது வானவில் தோன்றியது. இது சுவாமியின் ஆசீர்வாதம் என்று மகிழ்ச்சி அடைந் தார்கள். மந்திரங்கள், வேதங்களைச் சொன்னபடியே நிவாரண வேலையைச் செய்து முடித்தார்கள். அந்த இடத்திலுள்ள மக்கள் பகவானின் படத்தைக் காட்டி அவர்தான் தங்களைப் பாதுகாத்தார் என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரியில் சோதித்த பொழுது, இவர்களில் அணுசக்தித் தாக்கம் ஏற்படவில்லையென அறிக்கை கொடுத்தார்கள்.

10 வருடங்களுக்கு முன்பு வேதத்தை ஓர் இயந்திரம் போல ஓதினேன். இப்பொழுது அதன் வலிமையை அறிந்து கொண்டேன். இன்னொரு நிகழ்வு கனடாவில் ஒரு சாயி சகோதரி தனிமையாகப் போய்க் கொண்டிருக்கையில், சில ஆண்கள் தன் பின்னால் வந்து கொண்டிருப்பதை அவதானித்து, உடனே காயத்ரீ மந்திரத்தை உச்சாடனம் செய்தார். உச்சரிக்கும் பொழுது தன்னை ஏதோ சக்தி பாதுகாப்பதை உணர்ந்து நம்பிக்கையுடன் சென்றார். பின்வந்த நபர்களும் வேறு திசையில் சென்று விட்டார்கள்.

திரும்பவும் ஜப்பான் சென்ற பட்டப்பின் படிப்பு மாணவனுக்கு வருவோம். சில வருடங்களுக்கு முன்பு பிரசாந்தி நிலையத்தில் விநாயக சதுர்த்தி விழா நடப்பது வழக்கம். ஒவ்வொரு பகுதியினரும் விநாயகர் செய்து, சுவாமியின் ஆசீர்வாதத்திற்காக கொண்டு வந்து வைப்பார்கள். மாணவர்கள் குழு செய்த விநாயர் அருகே சென்று மேற்கூறிய மாணவன் காதிலே வேதம்! வேதம்! என்று சுவாமி சொன்னார். மாணவனுக்கு அப்படி ஏன் சுவாமி சொன்னார் என்று விளங்கவில்லை. ஆனாலும் அவன் வேதத்தைக் கற்று சுவாமியின் முன்னிலையில் ஓத வாய்ப்புக் கிடைக்கவில்லை எனக் கவலைப்பட்டான். பின்பு ஜப்பானில் வேதம் ஓதக் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பு கிடைத்த போதுதான், முன்னரே சுவாமி தனக்கு வேதம், வேதம் என்று காதில் சொன்னதின் மர்மம் துவங்கியது.

வேதங்கள் கடவுளால் தரப்பட்டவை என உணர்ந்தும் அதன் வலிமையை உணர்ந்தும் பய பக்தியுடன் ஓத வேண்டும். மேலும் மகா சமாதியின் போது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகள் பற்றிக் கூறவும் என்று கேள்வி கேட்கப்பட்டது. தொடர்ந்து தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

பிரசாந்தி நிலையத்திலே வசிக்கும் எனக்கு 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எனக்கு சஞ்சலமாகவே இருந்தது. மார்ச் கடைசிப் பகுதியில் சுவாமி அதிவிசேட ஆஸ்பத்திரியிலுள்ள அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். நாம் வைத்தி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யசாலை வெளியிடும் அறிக்கைகளைக் கேட்டு சுவாமியைப் பற்றி அறிந்தோம். சுவாமி கடவுள் ஏன் ஆஸ்பத்திரியில் பலவிதமான சிகிச்சைகள் பரிசோதனைகள் செய்ய வேண்டும். இதுவும் அவர் நடத்தும் ஒரு நாடகமாகத்தானிருக்க வேண்டும் என நினைத்தேன். அவர் சுகமாகத் திரும்பி வருவாரென நம்பிக்கை இருந்தது. சகலநாடுகளிலும் எல்லா சாயி நிலையங்களிலும் மக்கள் தீவிரமாகப் பிரார்த்தித் தார்கள். இயங்காத நிலையங்கள் இயங்கின. வேற்றுமை முரண்பாடுகள் மறைந்து அடியார்கள் ஒற்றுமையாகப் பிரார்த்தனை செய்தார்கள். சுவாமி, தனது உடல் மற்றவர்களுடையதே. அதன் நலன் எங்களின் பிரார்த்தனையில் தான் தங்கியுள்ளதென பல தடவைகள் கூறியுள்ளார்.

ஒருமுறை மாணவர்களாகிய நாங்கள் வேட்டித் துணிகளை வெட்டி சேலைகளை அளந்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தோம். சுவாமி அவற்றை அடியார்களுக்குக் கொடுப்பதற்காக எங்களுக்கு இந்த வேலை தரப்பட்டிருந்தது. சுவாமி அருகில் வந்திருந்து கதைப்பது வழக்கம். அப்போது அவரின் பாதத்தில் ஒரு பெரிய கொப்பளம். அப்போது சாயி குல்வந் ஹோல் கட்டி முடிக்கப்படவில்லை. நிலமும் கரடுமுரடாக இருந்தது. சுவாமியை தரிசனத்திற்காக நடந்து திரிய வேண்டாம் என்று கேட்டோம். ஆனால் சுவாமியோ அடியார்களுக்குத் தரிசனம் கொடுக்க வேண்டுமென்று திடமாக இருந்தார். அவர் தனது கொப்பளத்தை உடைத்து விட்டு தரிசனம் கொடுத்தார். திரும்பி வந்த பொழுது கால் சிவந்து தொற்றுப் பிடித்த போல் இருந்தது. நான் எனது உடலுக்கு ஒன்றும் செய்ய மாட்டேன். உங்களின் பிரார்த்தனையால் இதை மாற்றலாம் என்றார். நாங்கள் எல்லோரும்கூடி தீவிரமாகப் பிரார்த்தித்தோம். அடுத்த நாள் அந்தக் கொப்பளம் மாறிவருவதாக இருந்தது. "பார்த்தீர்களா? உங்களின் பிரார்த்தனையால் கால் சுகமாகி விட்டது". என்று கூறினார்.

இக்காலத்தில் எங்கு பார்த்தாலும், பிரார்த் தனை, ஜெபம், சேவை தீவிரமாக இருந்தது. அடியார்களிடையே ஒற்றுமை இருந்தது. சுவாமி இப்படியான ஒரு நிலையை ஏற்படுத்தவே நாடகம் நடிக்கிறார் என நான் நினைத்தேன். அவர் சுகமாகி வருவாரென நம்பினேன். நானும் சிநேகிதனும் வைத்தியசாலைக்குப் போய், ஒதுக்கமான இடத்தில் பிரார்த்தனை செய்தோம், பஜன் பாடல்களைப் பதிவு செய்து, சுவாமிக்கு முன் போடும்படி நிர்வாக உத்தி யோகத்தவர்களிடம் கொடுத்தோம். 24 ஆம் திகதி கிடைத்த தகவல் என்னை தூக்கி வாரிப்போட்டது. இது உண்மையாக இருக்காது. இதை மறுத்து அறிக்கை வெளிவரும் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால் சுவாமியின் உடல் தங்கப் பேழையில் சாயி குல்வந் மண்டபத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டது. நாங்கள் அப் பேழையைச் சுற்றி அமர்ந்திருந்தோம். 24 ஆம் 25 ஆம் திகதிகளில் அதிலேயே இருந்தோம். மக்கள் பெருமளவில் குவியத் தொடங்கினார்கள். 26 ஆம் திகதி நாட்டுத் தலைவர்கள், பிற நாட்டுத் தலைவர்கள் அஞ்சலி செலுத்த வரத் தொடங்கினார்கள். இப்பவும் இது ஒரு நாடகமா இல்லையா என்ற குழப்பம் இருந்தது. அப்பொழுது நான் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கி னேன். இச் சமயத்தில் எச் செய்கை சுவாமியை மகிழ்விக்கும்? நான் என்ன செய்ய வேண்டும்? என்ற சிந்தனை வலுவடைந்தது. நான் எழும்பி ஆச்சிர மத்திற்கு வெளியே வந்தேன். அங்கு வரிசை வரிசையாக மக்கள் திரண்டு கொண்டார்கள். பலவிதமான சேவைகள் செய்து கொண்டிருந்தார்கள். உணவு, நீர், கொட்டில் போடுவது, ஒழுங்கைப் பேணுவது ஆகிய சேவைகள் இடம்பெற்றன. ஒரு வயோதிபப் பெண் பலவீனமாக இருந்தார். அவருக்குத் தேவையான மருந்து கொண்டு வந்து கொடுத்தேன். என்னால் இயன்ற சேவையைச் செய்தேன். கேரள மாநில சாயி தலைவர்கள் வரிசையில் நிற்பதைக் கண்டு அவர்களை ஒருவாறு மண்டபத்திற்குள் கூட்டிச் சென்றேன்.

27 ஆம் திகதி காலை உடலை அடக்கம் செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. உடலுடன் பேழையை அடக்கம் செய்யும் போதுதான், சுவாமி உடலுடன் திரும்பி வரமாட்டாரென உணர்ந்து, அடக்க முடியாது அழுதேன். ஏன்! ஏன்! சுவாமி எங்கே போய் விட்டீர்கள்? என்று கேட்டுக் கேட்டு அழுதேன். உள்ளிருந்து மறுமொழி வந்தது. "நான் எங்கே போயுள்ளேன்? இங்கு தான் இருக்கிறேன்" ஆனால் உங்களைப் பார்க்க முடியவில்லையே என்றேன். "நீ சரியான இடத்தில் பார். உள்ளே பார். அங்கு நான் எப்போதும் இருக்கிறேன்"என்று உள்ளிருந்து மறுமொழி வந்தது. நாள் உனது விருப்பங்களைப் பூர்த்தி செய்துள்ளேன். விருப்பங்களையும், அகங்கார த்தையும் நீக்கி விடு. எனக்குச் சேவை செய்யலாம். எப்போது தகுதியாகலாம் என்று DESERVE என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள D யையும் E யையும் அகற்றினால் SERVE தான் எஞ்சி இருக்கும். நான் மறைந்து விட்டேன் என்று நினைத்தால்? நான் கடவுள் என்பதில் உனது நம்பிக்கையின்மையையே காட்டு கிறது. நான் 5 அடி 3 அங்குலமான உடம்பல்ல. உடம்பல்ல கடவுள். நான் கடவுளாகையால் உன்னுடன் எப்போதுமே இருப்பவன். கண்களை மெதுவாக மூடி உள்ளே பார்"என்று எனக்கு விடையும் வழிகாட்டலும் கிடைத்தன. முதலில் துக்கமா யிருந்தாலும், பின்னர் துக்கம் நீங்கி அதன் பின்பு பரப்பிரம்மத்தின் விழிப்புணர்வை அனுபவிக்கலாம். இந்நிலையில் எப்போதுமே ஆனந்தம் பரவசம் நிலைக்கும். நான் இன்று உங்கள் முன்னிலையில் நின்று உரையாற்றுவேன் என்று நினைக்கவேயில்லை. எல்லாம் அவன் செயல். ஒவ்வொரு கணமும் சுவாமியை உணர்கின்றேன். நித்திரைக்குப் போகுமுன் 10 நிமிடங்கள் நாளில் நடந்ததை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால், சுவாமியின் உதவி, வழிகாட்டல் எப்போதுமே கிடைக்கும்.

சுவாமியின் மகாசமாதியின் பின்பு சுவாமியை என் இதயத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியில் அனுபவிக்கிறேன். சுவாமி இருக்கிறார் என்பதை நம்புவதற்காக விபூதி,தேன் படங்களிலிருந்து வரவேண்டும். என்று எதிர்பார்ப்பது சிறு பிள்ளை இனிப்புப் பண்டங்களை எதிர்பார்ப்பது போலாகும். இப்படியான நிகழ்வுகளை ஆதாரமாக வைத்து, சிலர் தாங்கள் சுவாமியால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்ற மனப்பாங்குடன் செயற்படுவார்கள். ஏனையோரும் அவர்கள் பின்னால் செல்ல முயல்வார்கள். சுவாமி தனக்கு இடையாட்கள் ஒரு போதுமில்லை. தான் பக்தர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வேன் என்று பல தடவை கூறியுள்ளார்.

சிறிலங்காவிலுள்ள அடியவர்களுக்கு மகாசமாதியால் ஒரு தாக்கமும் ஏற்படத் தேவையில்லை. நீங்கள் வெகு தொலைவிலிருந்தே சுவாமியுடன் தொடர்பு கொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளீர்கள். நீங்கள் பௌதீக உடம்பிற்கு அப்பாலே போய் விட்டீர்கள். ஆகக் கூடியது படமே போதும். அவர் எங்கும் எல்லோருடனும் சமமாகவே உள்ளார். சுவாமியின் செயற்பாடுகள் தீவிரமடைந்து பரவலாக நிகழ்கின்றன.

இன்னொரு நிகழ்வு நினைவிற்கு வருகிறது. திரு திருமதி ஞானேஸ்வர் என்ற இரு வைத்தியர்கள் பிஜி நாட்டில் வசிப்பவர்கள். முன்னர் அவுஸ்திரேலியாவில் வசித்தார்கள். சுவாமியின் பக்தர்கள். பிஜி நாட்டில் இலவச பிரசவ வைத்தியசாலை ஒன்றை நிறுவ விருப்பம் கொண்டார்கள். அதற்குரிய திட்டத்தை வரைந்து 2010 ஆம் ஆண்டில் சுவாமியிடம் காட்டி ஆசீர்வாதம் பெற்றார்கள். வைத்தியசாலையும் நிறுவப்பட்டு இயங்கத் தொடங்கியது. தங்களது சேமிப்புக்கள் அனைத்தையும் வைத்தியசாலையில் செலவழித்தார்கள். இந்நிலையில் சுவாமி மகாசமாதி யடைந்ததைக் கேள்விப்பட்டு மிகவும் துயரமும் விரக்தியும் அடைந்தார்கள். சுவாமி தங்களைக் கைவிட்டுப் போய்விட்டாரே! நிதிக்கு என்ன செய்வது, ஏமாற்றிப் போட்டாரே என்று அவர்கள் நினைத்தார்கள். மனைவி நம்பிக்கையை இழக்கவில்லை. அவர் பிரசாந்தி நிலைய வைத்தியசாலைக்கு வந்து போவார். 2011 இலும் வந்தார். கணவன் வரவில்லை. அவர் கொழும்பிற்கு ஒரு மாநாட்டிற்காகப் போயிருந்தார். மனைவி அவரை பிரசாந்திக்கு வரும்படியும் இருவரும் ஒன்றாக நாட்டிற்குத் திரும்பலாமென்றும் வேண்டுதல் விடுத்தார். உனக்காக வருகிறேன். மந்திருக்குப் போகமாட்டேன் என்று கணவர் சொன்னார். பின்பு பிரசாந்தி நிலையத்தை வந்தடைந்தார். மனைவி வந்தனீங்கள் சுவாமியின் சமாதியைத் தரிசித்து வாருங்கள் என்று தொந்தரவு கொடுத்தார். அவரும் சென்று தரிசித்தார். அங்கே சமாதியில் தலையை வைத்து, சுவாமி நிதியில்லாமல் இயங்க முடியாதே என்று குறையைச் சொல்லி, வெளியே வந்து மேல்நாட்டவர் கன்ரீனுக்கு உணவருந்தச் சென்றார். உணவு உண்ணும் பொழுது முன்னா லிருந்த நியூசிலாந்து நாட்டவர் இவருடைய சேவையைக் கேட்டு, தனது அறைக்கு வரும்படி அழைத்தார். அவரின் அறையிலே ஒரு கவரில் 108 டொலரை வைத்து சேவைக்குப் பயன்படுத்துமாறு கொடுத்தார்.

பின்பு அவுஸ்திரேலியாவிற்கு தங்களது பிள்ளைகளைப் பார்க்கச் சென்றார்கள். அங்கே இவர்களுடன் முன்னரே வேலை செய்த பேராசிரியர் தன்னை வந்து சந்திக்கும்படி சொன்னார். பேராசிரியர் தனக்கு ஐக்கியநாடுகள் நிறுவனம் ஏதும் ஒரு பொருத்தமான சேவைக்குப் பயன்படுத்துமாறு நிதிக் கொடை தந்துள்ளார்கள். உங்களின் சேவைக்கு அதைத் தருகிறேன். பெற்றுக் கொள்ளவும் என்று சொன்னார். அந்தக் கொடையின் பெறுமதி 108000 டொலர்களாகும். எப்படி சுவாமி வேலை செய்கிறார் என்று தெரிந்து கொள்ளுங்கள். பிரகலாதன், ராதா போன்றோர் சுவாமியை எங்கும் கண்டார்கள். அவர் எங்குதான் இல்லை?

சுவாமி 96 வயது வரை இருப்பேன் என்று சொல்லி விட்டு 86 வயதில் சமாதியடைந்து விட்டாரே ஏன் அப்படிச் செய்தார் என்ற கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்தார்.

நாங்கள் சுவாமியினுடைய செயல்களை விளங்க முடியாது. பரபிரம்மத்தின் செயலை இந்தச் சிறிய ஜீவன் எப்படி அளப்பது. ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டது. சந்திர கலண்டரின்படி 96 வயதை அடைந்து விட்டாரென்பதாகும். எத்தனையோ தடவை தான் எப்போதும் போய் விடுவேன் என்று சொல்லியுள்ளார். நாங்கள் அவரின் செயல்களை ஏற்றுக் கொண்டு அவரில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும்.

கடவுளிடம் அடைக்கலம் பூண்டவர்களுக்குச் சந்தேகமோ கேள்விகளோ இல்லை. மறுமொழிகள் எல்லாம் தெரியும்.

புத்திக்கூர்மையுள்ளவர்களுக்கு எப்போதுமே சந்தேகமும் கேள்விகளும் இருக்கும்.

இறை சித்தத்தை எங்களால் விளங்க முடியாது. சுவாமியிடம் பிரார்த்தித்தால். எங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்கும். சுவாமி சொன்ன அனைத்தையும் கவனிக்காமல் சிலவற்றைக் கவனிப்பதால் தான் மனதில் குழப்பம் ஏற்படுகிறது. நேரம் போய் விட்டது என்று சொல்லி உரையை முடித்தார்.

நன்றியுரையுடன் மங்கலாராத்தியுடன் நிறைவடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையில் 17.03.2014 அன்று பிஜூ புருஷ்டி ஆற்றிய உரையின் தமிழாக்கம்



சாயிராம்!

3 ஓம்காரம், 3 காயத்ரீ மந்திரம் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் சொல்லி சுலோகங்கள் சில சொல்லப்பட்டன.

பிஜூ புருஸ்டி - மூன்று பஜன் பாடல்கள் பாடினார். பின்பு பாடசாலை பணிப்பாளர் ஸ்ரீ.ஆர்.வசந்தசேனன் அவர்கள் பிஜூ சகோதரர்களை அறிமுகம் செய்து வைத்தார். இருவருமே பகவானால் அனுப்பப்பட்ட தூதர்களே என்று சொன்னார்.

புருஸ்டி தனதுரையை ஆரம்பித்தார். 3 ஓம்காரம், காயத்ரீ மந்திரத்தை உச்சாடனம் செய்து மாணவர்கள் காயத்ரீ மந்திரம் உச்சரித்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்றார். 7 வயதில் உபநயனம் செய்வது வழக்கம். அப்போது பூநூல் அணிந்ததன் பின் காதில் காயத்ரீ மந்திரம் ஓதப்படும். இந்த விழா பெரிய ளவில் சுவாமியால் மண்டபத்தில் நடாத்தப்படும். சுவாமியே மந்திரத்தை உபாசனை செய்வார். இது பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் ஒரு இறுவெட்டை உங்களுக்கு அனுப்புகிறேன். அப்போது சுவாமியின் உச்சரிப்பை மாணவர்கள் கேட்டு ஆனந்தப்படட்டும். உபநயனத்தின் போது அவன் வளர்ந்த பிள்ளையாகக் கணிக்கப்படுகிறார். பிள்ளை கடவுளுடன் பந்தப்படுத்தப்படுகிறார். ஒவ்வொரு பிள்ளைக்கும் நாம் கொடுக்கக்கூடிய பரிசு இறைவன் ஒவ்வொருவரின் உள்ளும் இருக்கிறார் என்பதில் அசையாத நம்பிக்கையை ஏற்படுத்துதலேயாகும். சுவாமி பிள்ளைகளுடன் நன்றாக அளவளாவுவார். ஒரு முறை சிறு மாணவனைப் பார்த்து:

உனக்கு எத்தனை சகோதரர்கள்? எல்லோரும் சகோதரர்களே என்று பதிலளித்தான். எத்தனை சகோதரிகள்? எல்லோரும் சகோதரிகளே என்று பதிலளிக்க "ஒருவரைத் தவிர"என்று சுவாமி திருத்தினார். எத்தனை மனைவிமார் என்று கேட்க? மாணவன் எல்லோரும் மனைவியரே என்று பதிலளித்தான். சுவாமி மாணவர்களுடன் இப்படியாக வேடிக்கையாக சம்பாசிப்பார். முதலாண்டு மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இனிப்புப் பண்டம் கொடுப்பார்.

ஒருமுறை மாணவன் ஒருவன் காலுறையைத் தொலைத்து விட்டான். ஆசிரியர் இதற்காக பேசி விட்டார். கூடாத பையன் என்றும் சொல்லி விட்டார். அவன் அழுது கொண்டு சுவாமியைப் பிரார்த்தித்தான். அன்று தரிசனத்தின் போது சுவாமி பையன்களுக்கு காலுறையை விநியோகித்தார். இந்த மாணவனைக் கூப்பிட்டு மேலதிகமாக ஒரு காலுறையைக் கொடுத்து நல்ல பையன்" நல்ல பையன்" என்று எல்லோர் முன்னிலையிலும் கூறினார். இந்த மாணவன் இப்போது பெரியவனாகி விட்டான். அவன் அன்று தொடங்கி சுவாமி ஒருவர் தான் உண்மையான நண்பர் என்று உணர்ந்ததை என்னிடம் சொன்னான். சுவாமி எப்போதும் ஒருவரின் நல்லதையே பார்ப்பார். சுவாமியிடம் மன்னிப்புக் கேட்கத் தயங்கக் கூடாது. இன்னொரு நிகழ்வு:

பிரசாந்தி நிலையத்தில் "தீன ஜன பதக்கம்"என்ற ஒரு செயற்திட்டம் உண்டு. வறிய மாணவர்கள் 60 பேருக்கு சகல வசதிகளையும் கொடுத்துள்ளார். ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் சேமிப்புக் கணக்கில் போடப்பட்டுள்ளத. அம் மாணவர்கள் புதன்கிழமை மாலையில் சுவாமியின் தரிசனத்திற்காக வருவார்கள். இவர்களுக்கும் ஏதாவது சுவாமி கொடுத்து அனுப்புவார். ஒரு நாள் இவர்களுக்கெல்லாம் அப்பிள் பழம் விநியோகிக்கப் பட்டது. சுவாமி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அப்பிள் கிடைத்துள்ளதாவென்பதை அவதானித்தார். ஒரு மாணவன் 7 ஆம் வகுப்பு மாணவன். 3 வது வரிசையிலிருந்த இம் மாணவனைப் பார்த்து, அப்பிள் கிடைத்ததா என்று கேட்க. அவன் கையை உயர்த்தி அப்பிளைக் காட்டினான். சுவாமி அவனுக்கு இன்னுமொரு அப்பிள் கொடுக்குமாறு பணித்தார். அவன் மேலதிகமாக ஒரு அப்பிளைப் பெற எத்தனிக்கவில்லை. சுவாமிக்கு இவனது நேர்மை தெரிந்தது. ஆகவே சுவாமி அவனைக் கூப்பிட்டார். அவனைக் கட்டித் தழுவி "எப்போதும் உண்மையே பேசு"என்று அறிவுரை சொல்லி, கை அசைவினால் சங்கிலி ஒன்றை திருஷ்டித்து கழுத்தில் போட்டு பாத நமஸ்காரம் செய்யச் சொன்னார். எப்போதும் உண்மை பேச வேண்டும். உண்மை சொன்னதற்காக சுவாமி அவனுக்கு நிறைய ஆசி வழங்கினார். சுவாமி எப்போதும். கவனித்துக் கொண்டிருப்பார். (ஆங்கிலத்தில் ஒரு பாடலை பாடினார்) கேட்பது எதுவென்று கவனிப்பார், பேசுவது எதுவென்று கவனிப்பார், செய்வது எதுவென்று கவனிப்பார்.

ஒருமுறை வடகிழக்கு மாநிலத்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லிருந்து பக்தர்கள் கூட்டம் வந்திருந்தது. சுவாமி அவர்களுக்கு பாதநமஸ்காரம் கொடுத்து ஒவ்வொருவருக்கும் விபூதிச் சரையும் கொடுத்தார். இலக்கி என்ற பெண்ணுக்கு மேலதிகமாக ஒரு விபூதிச் சரையைக் கொடுத்து "இது உனது பூனைக்கு"என்று சொன்னார். அப் பெண் பிள்ளை அழுதாள். சுவாமியிடம் ஆசீர்வாதம் பெற்றும் ஏன் அழுகின்றாள் என்று ஏனையோருக்கு விளங்கவில்லை. 6 மாதத்திற்கு முன்பு அப் பெண் தெருக் கால்வாயில் விடப்பட்டிருந்த பூனையை வீட்டிற்குக் கொண்டு போய் அன்பாகப் பராமரித்தாள். அவளின் தமக்கைக்கு அப் பூனையில் விருப்பமில்லை. பூனை ஒருநாள் குசினிக்குப் போய் அங்கிருந்த பாலைக் குடித்து விட்டது. தமக்கைக்குக் கோபம் வந்து தங்கையை பேசினார். தங்கையும் கோபம் கொண்டு பூனைக்கு அடித்தாள். என்ன அதிசயம். வீட்டிலிருந்த சுவாமிப்படங்கள் அனைத்தும் கீழே விழுந்து உடைந்தன. இவர்கள் உடனே பூனையைத் தடவி அன்பு காட்டினார்கள். தடவும் பொழுது பூனையின் உடலிலிருந்து விபூதி கொட்டுண்டது. இதை நினைவு கூர்ந்துதான் அப் பெண் பிள்ளை அழுதாள். நடப்பதெல்லாம் சுவாமி அறிவார். யாரையும் துன்பப் படுத்தினால் அது சுவாமியைப் புண்படுத்துவதேயாகும். சுவாமியினுடைய அன்பு வேண்டுமாகில் அனைத்தையும் நேசி. இந்தச் சுவரில் இருக்கும் வாசகங்களைப் பார்க்கும் பொழுது இந்தச் சந்தர்ப்பங்களை நினைவு கூருங்கள்.

ஆசிரியர்களே நீங்கள் தண்ணீர் தாங்கியைப் போன்றவர்கள். தாங்கியில் இருக்கும் நீரே பைப்புகள் வழியாக ஓடும். இந்த உவமையைச் சுவாமி ஆசிரியர்களுக்கு எப்போதும் சொல்லுவார். மாணவர்கள் நீங்கள் சொல்வதைப் பார்க்கிலும், செய்வதையே உன்னிப்பாக அவதானிப்பார்கள். செய்வதையே சொல்ல வேண்டும். அல்லாவிடில் சொல்வது அவர்களில் பதியாது. பெற்றோர்களும் சொல்வதையே செய்து, செய்வதையே சொன்னால், பிள்ளைகளில் ஆழமாகப் பதியும்.

பிள்ளைகள் அதிகளவு நேரத்தைப் பெற்றோர்களுடன் வீட்டில் கழிக்கிறார்கள். தகப்பன் வேண்டாத ஒருவர் வீட்டிற்கு வரும் பொழுது அப்பா இல்லை என்று வந்தவரிடம் சொல்லச் சொன்னால், பிள்ளையும் காலப் போக்கில் பொய் சொல்லப் பழகி விடும். பிள்ளைகள் மிகவும் வேகமாகக் கற்றுக் கொள்வதுடன் புத்திக் கூர்மை மிக்கதாகவும் இருக்கிறார்கள். இதற்காகத்தான் சுவாமி ஆசிரியர்களை விடுதியில் மாணவர்களுடன் வசிக்க வேண்டுமென்று சொல்லியுள்ளார்.

எனது சகோதரன் இரண்டு பட்டங்களைப் பெற்றும் சுவாமியின் பாடசாலையைத் தெரிந்து அங்கே ஆசிரியராக கடமையாற்றுகிறார். அவரும் மாணவர்களுடன் விடுதியில் தான் வசிக்கிறார். இப்பொழுது அவர் பாடசாலையில் ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி உங்களுக்குச் சொல்வார்:

**சகோதரரின் உரை:**

ஆசிரியர்களே! மாணவர்களே! நிர்வாகிகளே! நான் 35 வருடமாக கற்பிக்கும் காலத்தில், சுவாமியின் எத்தனையோ அன்பு கலந்த நிகழ்வுகள் நடந்துள்ளன. அவரின் கல்வி முறை எவ்வாறு செயற்படுகிறது, அங்கேயுள்ள கோட்பாடு மாணவர்கள் தங்கள் செய்கைகள் அனைத்தையும் சுவாமிக்கு காணிக்கையாக வழங்குதலாகும். மாணவனின் வாழ் நாள் ஒன்றைக் கவனிப்போம். அதிகாலை 5.00 மணிக்கு எழும்பி, சுப்ரபாதம் முடிந்ததும் விளையாட வேண்டும். விளையாட்டு, குளிப்பு முடிந்த பின்பு காலை 8.00 மணிக்கு உணவை பிரம்மார்ப்பணம் சொல்லி உண்பார்கள். பாடசாலையின் காலைப் பிரார்த்தனை 9.00 மணி தொடக்கம் 9.30 வரை நடக்கும். ஒவ்வொரு நாளும் வேதம் கற்று ஓதுவார்கள். மாணவர்கள் ஒரு கிராமத்தில் சுவாமியுடன் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர். பிற்பகல் சுவாமியின் தரிசனத்திற்காகப் போவார்கள். பின்பு 6.00 மணியளவில் விடுதிக்கு வந்து 15 நிமிடம் வேத வகுப்பில் கலந்து கொள்வார்கள். இரவு உணவிற்குப் பின் பிரார்த்தனை, அதற்குப் பின் படிப்பு. 9.30 மணிக்கு நித்திரைக்குப் போவார்கள். மாணவர்களை எந்நேரமும் ஏதாவது செயற்பாடுகளில் கலந்து கொள்ள வேண்டும். சோம்பலுக்கு இடமில்லை. நாட்கள் போக சுவாமி மீது கொள்ளும் அன்பு பெருகிக் கொண்டே போகும். சுவாமி தான் தங்கள் மூலமாக அனைத்தையும் செய்வதாக உணர்வார்கள். இங்கும் மாணவர்கள் ஓடி ஓடி ஒலி சாதனங்களை சரிப் படுத்துவதைப் பார்த்து மகிழ்கிறேன். விடுதியில் சகல வேலைகளையும் மாணவர்களே செய்வார்கள். உதாரணம்: பல் பொருள் கடை, குளிர்களி கடை, தொலைபேசிக் கூடு ஆகியவை. அவர்கள் தமது காலிலே நிற்கப் பழகுகிறார்கள். அவர்கள் ஒற்றுமையாக வாழப் பழகுகிறார்கள். விடுதியில் தங்குவதனால் அவர்களுடைய ஆளுமை முழுமையாக விருத்தியடைய வாய்ப்புண்டு. ஒரு பெரிய அறையில் 6 மாணவர்கள் வசிப்பார்கள். சுவாமியும் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கின்றனர். அண்மையில் நடந்த ஒரு நிகழ்வு. கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருந்தன. ஒரு இரவு மாணவன் தன்மேல் ஏதோ ஊருவது போல உணர்ந்து. எழும்பி, மின் விளக்கைப் போட்டால் அங்கே பெரிய கறுத்த தேள் ஒன்று அசைவதைக் கண்டார்கள். தேள் வெளியே அகற்றப்பட்டது. அது ஒரு தீங்கும் செய்யவில்லை. சுவாமியே காப்பாற்றினார். இப்போது சுவாமியே இல்லையே என்று சிலர் நினைக்கலாம். இன்னொரு நிகழ்வு: இரண்டு மாதங்களுக்கு முன்பு குஜராத் மாநிலத்திலிருந்து மாணவன் சேர்ந்தான். இம் மாணவன் மிகவும் சோகமாகக் காணப்பட்டான். அவனது தாயார் சிக்குன்குனியா என்ற வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். தகப்பனார் எமது மெய்வல்லுனர் போட்டியைப் பார்க்க வந்திருந்தார். தகப்பனும் மகனுமாகத் தாயின் நலனுக்காக சுவாமியைப் பிரார்த்தித்தார்கள். அப்போது ஒரு விடுதியில் விபூதி வருவதைக் கேள்விப்பட்டு அங்கு போய்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விபூதிச் சரை ஒன்று வாங்கிக் கொண்டார்கள். தகப்பனார் சரையைத் திறந்து பார்த்த பொழுது, அதற்குள் பென்டன் இருப்பதைக் கண்டார். அதை வீட்டிற்குக் கொண்டு போய் மனைவியின் சங்கிலியில் கோர்த்தார். மனைவி மிகவும் விரைவாகச் சுகம் அடைந்தார். நாம் இதய பூர்வமாக சுவாமியை பிரார்த்தித்தால் , அவர் எம்மைப் பாதுகாத்தும் வழி காட்டுவார். நாம் எப்படி சுவாமி மேல் அன்பு கொள்ளலாம்? அனைவரையும் நேசிப்பதன் மூலமும், அனைவருக்கும் சேவை செய்வதன் மூலமும் சுவாமியை நாம் நேசிக்கலாம்.

இத்துடன் சகோதரன் பேசி முடிக்க பிஜு புருஸ்டி திரும்பவும் உரை நிகழ்த்தினார்...

இந்தச் சந்தர்ப்பத்தில், இன்னொரு நாட்டிலுள்ள சத்திய சாயி பாடசாலையைப் பற்றி சொல்ல வேண்டும் போல் உணர்கிறேன். இந்தியாவில் மட்டும் 19 சத்திய சாயி பாடசாலைகளும், ஏனைய நாடுகளான ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, தாய்லாந்து, தென் அமெரிக்காவிலும் பாடசாலைகள் இயங்குகின்றன. சாம்பியா நாட்டிலுள்ள பாடசாலையைப் பற்றிச் சொல்கிறேன். விக்ரர் கானு என்ற பக்தன் சுவாமியிடம் பலதடவை வருவார். சீராலியோன் என்ற ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர். அந் நாட்டுத் தூதுவராகக இலண்டனில் வேலை செய்தார். அவரின் நாட்டு அரசாங்கம் மாறியதும், அவரின் வேலையும் பறி போனது. பின்பு ஆசிரியத் தொழில் புரிந்தார். 1987 ஆம் ஆண்டு சுவாமி கானு தம்பதிகளைப் பார்த்து, சம்பியா நாட்டில் பாடசாலை ஒன்றைத் தொடங்கச் சொன்னார். பண வசதி குறைவு என்று சொன்னதும், இலண்டனிலுள்ள வீடு, சொத்துக்கள் அனைத்தையும் விற்கச் சொன்னார். அதுவும் போதாதென்றால் வங்கியில் கடன் எடுக்கவும் என்று சொன்னார். சுவாமி சொன்னபடியே உடமைகளை விற்று சம்பியா நாட்டிற்குச் சென்றார்கள். விவிலிய நூலின், ஒருவன் இயேசுவிடம் தனக்கு வீடு பேறு தருமாறு கேட்டான், இயேசு சொத்துக்கள் அனைத்தையும் விற்கச் சொன்ன வாக்கியம் மனதில் வந்ததாக கானு அவர்கள் சொன்னார். இதைக் கேட்டதும் அவனோ ஓடி ஒழித்து விட்டான். கானு அவர்கள் நிலம் வாங்கி பாடசாலையைக் கட்டி முடித்தார்கள். சுவாமி தனது பாணியிலே வேலையைக் கவனித்தார். மாணவர்களுக்கு எங்கு போவது? பாடசாலை முன் பின் தெரியாததொன்று, அரசாங்கத்தின் அங்கீகாரமும் பெறவில்லை. இவர்கள் ஏனைய பாடசாலைகள் ஏற்காத பிள்ளைகள், விலக்கப்பட்ட பிள்ளைகளைச் சேர்த்தார்கள். சுவாமியினால் தரப்பட்ட பிள்ளைகள் திறனற்றவர்களாக இருக்கத்தான் வேண்டுமென நம்பினார்கள். பிள்ளைகளை மிகவும் அன்புடனும், கண்டிப்புடனும் கற்பித்தார்கள். நேர்மறை எண்ணங்களுடன் எந்நேரமும் தொழிற்பட்டார்கள். மனப்பாங்கு சிந்தனைகள் மிகவும் முக்கியமானவையாகும். எண்ணம் பழமையானது. நேர்மறை எண்ணம் மிகவும் சிறந்தது. 2 - 3 வருடங்களில் இப் பிள்ளைகள் மிகவும் முன்னேற்றம் காட்டினார்கள். 2 - 3 வருடங்களில் மாணவர்களை ஏதோ அன்புப் பொதி செய்வது உடம்போடு அனுபவித்தார்கள். விஞ்ஞான ரீதியாகவும் நேர்மறை எண்ணத்துடனும் அன்பு கலந்து இறைவனின் ஆசியும் கிடைத்து விட்டால் வெற்றி நிச்சயம் என்பதை அவதானித்துள்ளார்கள். 2 -3 வருடங்களில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் கிடைத்தது, முன்னோடியாகத் நிகழ்ந்தது. விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி செய்தார்கள். தரம் குறைந்த மாணவர்கள் இரு குழவாகப் பிரித்து, ஒரு குழுவுக்கு எப்போதும் நேர்மறையான எண்ண அலைகள் கொண்ட சூழலில் கற்க வைத்தார்கள். நேர்மறை எண்ணக்குழு நன்றாகக் கல்வியில் செய்ததை அறிந்தார்கள். எண்ண அலைகளுக்கு அபார சக்தியுண்டு ஒருவரின் எண்ண அலைகள் மற்றையோரைத் தாக்கும். சாம்பியா பாடசாலைப் பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் ஏனைய பாடசாலைகளின் பெறு பேறுகளுடன் தேசிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இதன் மூலமாகப் பலர் இப்பாடசாலையை அறிய முடிந்தது மட்டுமின்றி "அற்புத பாடசாலை"என்றும் அழைக்கத் தொடங்கினார்கள். நான் கான் தம்பதிகளை ஒரு நேர்காணலின் போது, இப் பாடசாலையின் முன்னேற்றத்திற்குரிய இரகசியம் என்னவென்று கேட்டேன். அற்புதத்தின் இரகசியம் அன்புதான் என்றார்கள். எல்லாப் பிள்ளைகளிலும் சுவாமி மீது வைத்திருக்கும் அன்பு போல அன்பு கொண்டார்கள். சுவாமி கானுவுக்கு 1987 ஆம் ஆண்டே "நீ எனக்குத் தேவை. எத்தனையோ சந்திக்க நேரிடும். சுவாமியில் நம்பிக்கை கொண்டு பிள்ளைகள் மீது அன்பைச் சொரியவும்"அப்போது சவால்கள் போய் விடும். என்று சொன்னார். கானு அவர்களை அரசாங்கம் பல குழுக்களில் அங்கத்தவராக நியமித்தது. ஐ.நா குழுவிலும் அங்கம் வகித்தார்.

இப்படியான அற்புதம் இந்தப் பாடசாலைக்கும் கிட்டலாம். இந்தப் பெயரை அடையலாம். ஒரு போதும் எதிர்மறை எண்ண அலைகளை சிந்தித்தோ, ஊக்குவிக்கவோ வேண்டாம். நேர் மறையான எண்ணத்தை ஊக்குவிக்க வேண்டும். நாம் தூய்மையான அன்பைச் செலுத்த வேண்டும். அற்புத பாடசாலையாக மாறுவதே பெரிய அற்புதமாகும். மிகவும் நன்றி என்று சொல்லி உரையை நிறைவு செய்தார்.

பாடசாலை நிர்வாகக் குழுவின் செயலாளர் திரு.சேனாதிராஜா அவர்கள் நன்றி கூறினார். முதலில் தனக்கும் பல சந்தேகங்கள் எழுந்தன என்றும் 11 வருடங்களாக இயங்கிய பிறகு, சுவாமியின் தூதர்கள் சொல்லிய வாக்குகளின்படி ஒற்றுமையாகவும், உற்சாகத்துடனும், நேர்மறை மனப்பாங்குடனும் செயற்படுவோம் என்று உறுதியளித்தார். (மூத்த சகோதரர் ஆரத்தி காட்டினார்.)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இதன் பின்பு ஆசிரியர்களுடனும், நிர்வாகக் குழு அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடல் நிகழ்ந்தது. இதற்கு பாடசாலை பணிப்பாளர் திரு.ஆர்.வசந்தசேனன் தலைமை தாங்கினார். இங்கே கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும்

**கேள்வி:**
சுவாமி எங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்? பாடசாலையை அரசாங்கத்துடன் பதிவு செய்ய முடியாத நிலையையும், நிதி நெருக்கடி பற்றியும் கூறப்பட்டது.

**பதில்:**
(மூத்த சகோதரர் வழங்கியது) மாணவர்கள் பிரேம புத்திரர்கள். ஆகையினால் நாம் அவர்கள் மீது அன்பாயிருக்க வேண்டும். பிள்ளைகளை வழி நடாத்துவது இலகுவானதல்ல, அவர்களை முழுமையாக விளங்கிக் கொள்ள வேண்டும். அன்பின் அடிப்படையில் ஒழுங்கு ஒழுக்கத்தை நிலை நாட்ட வேண்டும். இதை மாணவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் மாறுவதற்குக் காலம் தேவை. சிலர் விரைவாகவும், சிலர் காலம் கடந்தும் விளங்கிக் கொள்வார்கள். நாம் எடுக்கும் ஊதியத்தின் அளவிற்கு வேலை செய்வது கடமை. அதற்கு மேலாகச் செய்வது தான் சேவை. நாம் சுவாமியின் பணியைச் செய்தால் சுவாமி எங்களின் பணிகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்வார். மாணவன் திறமையாகச் செய்யப்படுவதே சிறந்த புள்ளிகள் பெறுவதே பெரிய உபகாரம். சகல மாணவர்களுடனும் எப்போதும் கண்ணுடன் கண் பார்க்கும்படி செயற்பட வேண்டும். பாடம் கற்றலுடன் ஏனைய திறன்களையும் விருத்தி செய்ய சந்தர்ப்பங்களை அளிக்க வேண்டும். உதாரணமாக: பேச்சு திறன், இசைத்திறன், சேவைச் செயற்பாடுகள் ஆகியன.

**கேள்வி:**
போதியளவு வசதிகள் இருக்க வேண்டும். இல்லாவிடில் எவ்வாறு உந்துதல் கொடுக்கலாம்?

**பதில்:**
வசதிகள், ஆய்வுகூடம் எல்லாம் அன்பிற்கு இணையாகாது. மாற்று வழி மூலம் இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம். இயற்கையே பல்கலைக்கழகம். அதிலிருந்து எவ்வளவற்றையோ படிப்பிக்கலாம், படிக்கலாம். கிடைக்கும் உபகரணங்கள், வசதிகளைக் கொண்டு எவ்வாறு அதிக பயனைப் பெறலாம். என சிந்தித்து செயற்பட வேண்டும்.

**கேள்வி:**
மாணவர்கள் மீது நாம் அன்பு காட்டினாலும் அவர்கள் முழுமையாக உள்வாங்கு வதில்லை. ஏன் மனித விழுமியங்களை உள் வாங்க வைப்பதும் கஷ்டமாக இருக்கிறது?

**பதில்:**
பெற்றோர்களுடன் நெருங்கிய உறவு புரிந்துணர்வை வளர்க்க வேண்டும். வீட்டுச் சூழலும் பிள்ளை மேம்பாடுகளை வெளிப்படுத்த உதவ வேண்டும். நாம் ஒழுக்கத்தை அல்லது கட்டுப்பாட்டை நேர் மறையான மனப்பாங்குடன் அணுக வேண்டும். மாணவனைப்



புகழ்ந்தும் கட்டுப்பாட்டை நிலை நாட்டலாம். பெற்றோருடன் உறவைப் பெருக்க வேண்டும். எமது முயற்சி முக்கியம். மாணவனில் உள்ளுறையும் நல்ல குணாதிசயங்களை வெளிக்கொணர உதவ வேண்டும்.
"கண்டிப்பதைத் தனியாகவும், புகழ்வதை பகிரங்க மாகவும் செய்ய வேண்டும்"


**கேள்வி:**
பிள்ளைகளின் ஒழுங்கின்மையை, ஒழுக்க மின்மையை எவ்வாறு கட்டுப் படுத்தலாம்?

**பதில்:**
கஷ்டமான நிலைகளில் சுவாமியைப் பிரார்த்தித்தால் வழிகாட்டல் கிடைக்கும். பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொருமாதிரி. சிலரில் வேலை செய்யும் யுத்திகள் மற்றவரில் வேலை செய்ய மாட்டாது. ஆசிரியர், பிள்ளை மனோதத்துவ நிலையில் ஓரளவு விளக்கம் அல்லது அறிவுள்ளவராக இருக்க வேண்டும். பிள்ளையினுடைய மனதை அறிய அவளைப் பற்றிய புரிந்துணர்வு வேண்டும். பொறுமை வேண்டும். பாடசாலை நடக்கும் நேரத்திற்கு அப்பாலும் செயற்பட வேண்டும். பய பக்தி அவசியம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சத்திய சாயி பாபாவின் அற்புதங்கள்



**சுவாமி தனது உடலை விட்டு நீங்கி பின் பத்து நிமிடத்தில் திரும்பினார்.**

சுவாமியின் மாணவர்களாகிய நாங்கள், பிரசாந்தியிலும் பிருந்தாவனத்திலும் அநேகமான அற்புதங்களை அனுபவித்துள்ளோம். ஆனால் மிகவும் மறக்க முடியாத அற்புதங்கள் சுவாமியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாகிய த்ரயி பிருந்தா வனத்தில் தான் நடைபெற்றன.

ஒரு முறை மாணவர்கள் த்ரயியில் பகவான் வருகிறார் என அறிந்து அவர் தனது ஆசனத்தில் எழுந்துவர முன்பு கூடி விட்டனர். அவர் வந்ததும் மிகவும் சாதரணமாக மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் அவர்களின் குடும்பத்தவர்கள் பற்றியும் விசாரிப்பார். அப்படியொரு சந்தர்ப்பத்திலேயே பின்வரும் சம்பவம் இடம் பெற்றது. இது எல்லோரையும் அளவிடமுடியாத அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் இப்படியொரு அதிர்ச்சி தரும் நிகழ்வு எமக்கு எல்லோருக்கும் சுவாமியின் ஆற்றலை அறிய முடிந்தது.

இதற்கு முன்பாக சுவாமி த்ரயி பிருந்தாவன் மண்டபத்தில் ஒரு சொற்பொழிவாற்றியிருந்தார். வாழ்க்கையின் நோக்கம், ஒவ்வொருவரும் தத்தமது தெய்வீகத்தை உணரவேண்டுமெனவும் அப்படி உணர்ந்த பின்புதான் ஒவ்வொருவரும் தமது பிறப்பு, இறப்பு என்ற சூழலை முடிவுக்கு கொண்டு வரலாம். இந்த உரையின் போது பாபா கூடியிருந்தவர்களை நோக்கி அவர்கள் ஒவ்வொருவரும் இறைவனின் சிறுபகுதி என்றும் அதிலிருந்துதான் அனைத்தும் உருவாகி அதனுள்ளேயே ஐக்கியப்படும் என்பதை மறவாது ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமென்றும் கூறியிருந்தார்.

பாபா அறைக்கு நுழைந்ததும் சுற்றிவர பார்வை யிட்டார். சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந் திருந்தார். பின்பு அங்கிருந்த மாணவர்களிடம் கேள்வி கேட்க தொடங்கினார். நீ யார்? .. நீ யார்? அந்தக் கேள்வியில் ஆச்சரியடைந்த மாணவர்கள் அநேகர் "சுவாமி ராஜா" "சுவாமி சியாம் குமார்" ( சுவாமி என்ற சொல்லை தமது பொருளுடன் இணைத்து) சிலர் சுவை போல் தான் இருக்கும். அதுபோல் நாம் எல்லோரும் உங்களிடம் இருந்து பிரிந்தவர்கள். மீண்டும் ஒன்றாக இணைவோம். நாங்கள் எல்லோரும் உங்களைப் போலவே என்று தங்கள் விடைக்கு நியாயம் கூறினார். அப்போது சாயிபாபா கூறினார். "அப்போ சரி நீங்கள் எல்லோரும் சாயி பாபா என்றால் உங்கள் உடலை நீக்கி காட்டுங்கள்." சாயி பாபா அப்படி ஒரு கேள்வியைக் கேட்டதும் யாரும் வாய் திறக்கவில்லை. அங்கு கூடியிருந்த மாணவர்கள் எவரும் அப்படி செய்ய எண்ணக்கூட முடியாமல் இருந்தனர். நீண்ட மௌனம். "செய்யுங்கள் விரைவாக ... செய்யுங்கள்" பாபா விரைவு படுத்திக் கொண்டேயிருந்தார். நீண்ட அமைதி மண்டபத்தில் தொடர்ந்தது. பாபா கூறினார். நீங்கள் உங்கள் தெய்வீக இயல்பை உணர்ந்தால், உங்களுக்கு எல்லா வித சக்தியும் இருக்கும். நீங்கள் இயற்கையின் விதிகளுக்கு அப்பாலும் செயல்களைச் செய்ய முடியும்" அப்படி சொல்லிக் கொண்டு திடீரென எழுந்து கூறினார். "பாருங்கள், நான் எனது உடலை விடப் போகிறேன்." ஒரு கணத்தில் அவருடைய உடல்

சுவாமி கூறிய வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்து "சுவாமி நான் சாயி பாபா" என்றும் கூறினார்.


சுவாமி கடலிலிருந்து ஒரு துளி நீரை எடுத்துச் சுவைத்தாலும் அது கடல் நீரின்

ஆசனத்தில் சரிந்தது. அறையில் இருந்த எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அமைதியின்மை, குழப்பம், தடுமாற்றம் வானம் இடிந்து விழுந்தது போலிருந்தது. கூடியிருந்த எல்லோரும் தமது இருப்பிடத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திலிருந்து எழுந்து நின்றனர். அத்துடன் பாபாவின் உணர்வற்ற உடலை நோக்கி வர முயற்சித்தனர். இப்படியிருக்கும் போது கல்லூரி ஆசிரியர் ஒருவர் முன் வந்து அனைவரையும் முன்னேறவிடாது தடுத்து பின்நோக்கி தள்ளினார். எல்லோரையும் அமைதியாக இருக்கும்படியும் பாபாவின் உடலுக்கு எந்தவித தீங்கும் செய்ய வேண்டாமெனக் கூறினார். கூட்டத்தைக் கட்டுப்படுத்த சில நேரம் எடுத்தது. கூட்டத்தைக் கட்டுப்படுத்திய பின் பாபாவின் தனிப்பட்ட வைத்தியர் அழைக்கப்பட்டார். அவர் கூறிய வார்த்தைகள் எல்லோரையும் உறைய வைத்தது.




பாபாவின் இதயம் செயற்படவில்லை. கைகளில் இரத்தோட்டம் துடிப்பு இல்லை. சுவாசம் நின்று விட்டது. இதைக் கேள்வியுற்றதும் எல்லோரும் சுவாமியை மீண்டும் தனது உடலுக்குள் வரும்படி பிரார்த்தித்தனர். அவருடைய வழிகாட்டலும், பிரசன்னமும் இன்றி தங்களால் வாழ முடியாது என கதறினர். சிலர் பஜனை பாடலாமென கூறி பஜனையை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் அது மெதுவாக இருந்தது. சிறிது நேரத்தில் எல்லோரும் இணைந்த சத்தம் வானைப் பிளந்தது. இரண்டாவது பஜனைப் பாடல் ஆரம்ப மாகியது. எல்லோரின் கண்களும் பாபாவின் உடல் மீதே இருந்தது. ஏதாவது அசைவு ஏற்படுகின்றதா என்பதையும் அவதானித்த படி. மூன்றாவது பாடலும் முடிந்தது. 4 வது பாடல் பாடிக் கொண்டிருக்கும் பொழுது பாபாவின் கைவிரல்கள் அசைவதை முன்வரிசையல் இருந்த சிலர் அவதானித்து விட்டனர். செய்தி பரவியதும் பஜனை வானைத் தொட்டது. பிரார்த்தனைகள் தீவிரமடைந்தன. கையசைவும் காணக்கூடியதாக பெரிதாக இருந்தது.

6வது பாடல் பாடும் போது எல்லோருடைய மகிழ்ச்சிக்கிடையே பாபா கண்களைத் திறந்தார். இக்காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த மக்கள் பாபாவை காண முண்டியடித்தனர். தங்கள் இடங்களிலேயே அமர்ந்து கொள்ளுங்கள் என்று பாபா கூறியவுடன் அமைதியாக தங்கள் இடங்களிலேயே அமர்ந்து கொண்டனர். அடுத்த பஜனைப்பாடல் முடிவுக்கு வந்ததும் பாபா பஜனைப் பாடலை நிறுத்தும்படி கூறினார். அமைதி நிலவியது. மண்டபம் முழுவதும் எவரும் வாய் திறக்கவில்லை. எல்லோருடைய கண்களும் பாபாவின் மீதே இருந்தது.

சில நொடிகளில் பாபா பேசத் தொடங்கினார். “தெய்வீக ஆனந்தத்தில் இருப்பவர்கள் இயற்கையின் சாதாரண விதிகளுக்கு கட்டுப்பட மாட்டார்கள். நீங்கள் இங்கே பார்த்தது. உயர்நிலையில் உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதற்கான ஒரு சிறிய உதாரணமே. இந்த உயர் நிலையிலேயே நான் எப்போதும் இருக்கிறேன். இருந்தேன். இருப்பேன். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் கடவுள் வெளியில் பார்க்கக்கூடியவரல்ல. உங்களுக்குள்ளேயே இருக்கிறார். ஆனந்தத்தை அனுபவித்தாலும் அனுபவமும் வெளிச்சுகங்களில் இல்லை. கடவுளுடன் ஐக்கியமாகும் திருப்தியில் தான் உள்ளது.

இந்த அனுபவம் நீண்டகாலமாக பிரசாந்தி நிலையத்திலும், பிருந்தாவனத்திலும் பேசப்பட்டு வந்தது. இது இயற்கையின் மீது பாபாவின் கட்டுப்பாட்டையும் காட்டுவதுடன், முக்கியமாக போவதும் வருவதும் அவருடைய சங்கல்ப்பமே. எல்லாவற்றிற்கும் மேலாக சந்தேகத்திற்கு இடமின்றி அவர் வாழ்கிறார். “மிருத்துஞ்ஜய” மரணத்தை வென்றவர் எப்போதும் வாழ்வார்.

தமிழாக்கம்: எஸ்.ஆர்.சரவணபவன்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# கல்வியின் நிறைவு ஒழுக்கம்

கற்க கசடற கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக.

என்பது பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவரின் குறளாகும். அதாவது நாம் கற்பவற்றை தெளிவாக கற்க வேண்டும். அவ்வாறு கற்ற நாம் அதன்படி நம் வாழ்வில் ஒழுக வேண்டும் என்பது தான் அக்குறட் பாவின் வெளிப்பாடு ஆகும். இன்றைய இவ்வுலகிலே கல்வியானது அனைத்து மக்களுக்கும் முக்கியமான தாக உள்ளது. என்றும் அழியாத சிறப்பிற்குரிய இக் கல்விச் செல்வத்தைப் பெறவேண்டும் என்கின்ற அவா நம் அனைவரிடத்தில் காணப்பட்டாலும், மாசியில் மறைந்த மதியின் துலக்கமும் முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும் போல் நம்மை மூடிக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி எம் அறிவை இழந்து, நிலையற்ற அழிந்து போகும் சொத்துக்களையும், செல்வங்களையும் தேடி அலைபவர்களாகவே காணப்படுகிறோம். ஆனால் ஒரு நிமிடம் கூட எம்மைப் படைத்த இறைவனை வணங்குவதற்கும் அவரால் படைக்கப்பட்ட ஏனைய உயிர்கள் துன்பத்தாலும், நோயாலும், பசியாலும் வாடுவதைக் கண்டு மனமிரங்கி அவற்றிற்கு ஒரு காசு மருந்தோ அல்லது ஒரு பிடி சோறோ கொடுத்து உதவுவதற்கு நாம் எவரும் முன்வருவதில்லை. இன்றைய உலகில் பெருகிப் பிரவாகித்திருக்கும் அறிவானது விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் சார்ந்ததாகவே உள்ளது. இது அறிவியல் சார்ந்த அறிவாகும். அறிவியல் என்பது அறிவு என்கின்ற நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே. நாணயத்திற்கு எவ்வாறு இரண்டு பக்கங்கள் உள்ளதோ அதே போல் அறிவுக்கும் இன்னொரு பக்கம் உண்டு. அது அறவியல் சார்ந்தது. இந்த அறவியல் அறிவே நாம் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்கின்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. பகவான் பாபா கல்வி பற்றிக் கூறும் போது விழுமியம் சார்ந்த கல்வியின் மூலம் தான் சிறந்த கல்வியைப் பெற முடியும் என்றும் கல்வியின் இறுதி விளைவு ஒழுக்கம் என்றும் கூறியுள்ளார். இதனைவிட உலகியல் சார்ந்த அறிவியல் கல்வியை "பாக்ய வித்யா"என்றும் ஆன்மீகம் சார்ந்த அறிவியல் கல்வியை "பிரம்ம வித்யா" என்றும் வகுத்துள்ளனர். இன்றைய காலத்தில் உலகியல் கல்வியை பல்வேறுபட்ட வழிகளில் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் ஆன்மீகக் கல்வியைப் பாடசாலைகளில் இருந்து மட்டுமே பெற முடியும். ஆன்மீகக் கல்வியை நாம் பயிலும் போது எம்மிடம் அன்பானது புகுத்தப்படுகிறது. அந்த அன்போடு ஒருவரோடு பழகும் போது கொடுப்பவரும் அன்பினால் நிறைவடைகிறார். பெறுபவரும் அன்பினால் மகிழ்வடைகிறார். இங்கே எந்தவித போட்டியோ, பொறாமைகளோ இருப்பதில்லை. உலகியல் கல்வியோடு விழுமியங்கள் சார்ந்த ஆன்மீகக் கல்வியையும் சேர்த்து கற்கும் போது தான் கல்வியின் நோக்கம் முழுமையடைகிறது. ஒரு பறவை பறப் பதற்கு எவ்வாறு இரு சிறகுகள் முக்கிய மானதோ அதே போல் இன்றைய விஞ்ஞான உலகில் நாம் சிறந்த உத்தமர் களாக விளங்க எமக்கு அறிவியலும் அறவியலும் சார்ந்த அறிவானது இன்றியமையாததாகும். மனித நேயத்துடன் வாழ்ந்து, சக மனிதர்களிலும் கடவுளை கண்டு காணும் உயிர்கள் யாவற்றிலும் அன்பு செலுத்தி வாழ்வதே ஆன்மீகம் ஆகும். மாறாக இவ்வுலகையும், இவ்வுலக உயிர்களையும் விட்டு விட்டுச் செல்வதில்லை. அங்கிருக்கும் உயிர்களிடத் தில் அன்பு செலுத்தி வாழ்வதே ஆகும். இன்று தனித்து வளர்ந்திருக்கும் உலகியல் கல்வியினால்தான் எமது பண்பாடும், கலாசாரமும் சீரழிந்து போகின்றது. இதற்காகத்தான் பாபா இவ்வுலகமெங்கும் ஏறக்குறைய 50 நாடுகளில் சத்திய சாயி பாடசாலை களை ஆரம்பித்துள்ளார். இப்பாடசாலைகளிலேயே சாதாரண கல்வி முறையோடு மனித மேம்பாட்டுக் கல்வியும் சேர்த்துக் கற்பிக்கப்படுகிறது. இதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த உன்னதமான மாணவ சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் என்று தீர்மானித்தார்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பதற் கிணங்க வாழ்ந்து காட்டியவர்கள் மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர் ஆகியோர். மறைந்தும் இன்று வரை எம்மனதில் நிற்கிறார்கள் என்றால் அவர்கள் உலகியல் கல்வியை கற்று அதன்படி அறவியல் அறிவோடு ஒழுகியவர்கள் என்பதனாலேயேயாகும்.

**"மன்னனும் மாசறக்கற்றோனும் - சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் - மன்னனுக்குத்
தன்தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்கு
சென்ற இடமெல்லாஞ் சிறப்பு"**

என்று எமது கல்விச் செல்வத்தை பெற வேண்டியதன் அவசியத்தையும், அதைப் பெறுவதால் எமக்குக் கிடைக்கும் சிறப்பையும் இப்பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளும் நாம் அச்சிறப்பை தேடித் தருகின்ற கல்வி அறிவைப் பெற்றவர்களாகி நல்லொழுக்கத்தில் நின்று வழுவாது உலக வாழ்க்கையை இனிது நடாத்தி நாமும் பயன் பெற்று பிற உயிர்களையும் பயன் பெறச் செய்து

**"ஒழுக்கம் விழுப்பம் தரலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**

எனும் திருக்குறளுக்கமைய அனைவருக்கும் முன்னோடியான மாணவ சமுதாயத்தை எதிர்காலத் தில் உருவாக்குவோமாக.




வ.நிருபன்
சத்திய சாயி பாடசாலை, மானிப்பாய்

(21.05.2014 இல் சத்திய சாயி பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் பாடசாலை மாணவனால் ஆற்றப்பட்ட உரை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

## தேசிய செய்திகள்

### சத்திய சாயி பாடசாலை

1. சத்திய சாயி பாடசாலையின் பண்பு விருத்தி விளையாட்டு நிகழ்வுகள் 22.02.2014 திகதியன்று பாடசாலை வளாகத்தில் மதியம் 2.00 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்விற்கு வலி தென்மேற்கு பிரதேச செயலர் உயர்திரு. சு.முரளிதரன் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார். மாணவர்களின் பாண்ட இசையுடன் ஆரம்பமாகி பரிசளிப்பு வைபவத்துடன் நிறைவடைந்தது.

2. சத்திய சாயி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் 21.5.2014 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்விற்கு முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி உயர்திரு. சீ.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தின ராகவும், சிறப்பு விருந்தினர்களாக சத்திய சாயி மத்திய சபைத் தலைவர் டாக்டர்.வி.ஜெகநாதன் அவர்களும், சட்டத்தரணி கே. சயந்தன் அவர்க ளும் கலந்து கொண்டனர்.

## பிராந்தியச் செய்திகள்

### வடமத்திய பிராந்தியம்

1. தேசிய சாயி இளைஞர் மாநாடு இவ்வருடம் வடமத்திய பிராந்தியத்தில் மார்ச் மாதம் 14, 15,16 திகதிகளில் வவுனியாவில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு இந்தியாவிலிருந்து சுவாமியின் மாணவரும் ரேடியோ சாயி நிறுவனத்தில் பணியாற்றுபவருமான பிஜு பிறிஸ்டி அவர்கள் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டதுடன் நிகழ்வுகளில் கடமை, கட்டுப்பாடு, பக்தி என்னும் தலைப்பிலான மாநாட்டு தொனிப் பொருள்களில் உரைகளையாற்றியிருந்தார்.

### வட பிராந்தியம்

1. வசந்தபுரம் கீரிமலை பகுதியில் பகவான் பாபாவின் ஆராதனா மஹோற்சவத்தையொட்டி வடபிராந்திய இளைஞர் பிரிவினரால் மேற்கொண்ட சமைத்த உணவுப் பார்சல் வழங்கும் சேவை 25.05.2014 திகதி இடம்பெற்றது, 500 உணவு பார்சல்கள் வழங்கப்பட்டன.

2. கடந்த டிசம்பர் மாதம் முதல் இவ்வாண்டு ஜுன் மாதம் வரை மேற்கொண்ட மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் 300 மரக்கன்றுகள் பொருத்தமான பொது இடங்கள், இல்லங்கள் போன்ற இடங்களில் நாட்டப்பட்டுள்ளது.

3. சத்திய சாயி ஆராதனா மஹோற்சவத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொது நிகழ்வு 20.4.2014 நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இசை ஆராதனா, மற்றும் சிறப்புரை, பாலவிகாஸ் மாணவர்களின் சர்வமத ஒற்றுமை இசைவும் அசைவும் நிகழ்வு என்பன இடம்பெற்றது. 950 பேரளவில் கலந்து கொண்டனர்.

4. ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா நிகழ்வையொட்டி தற்போது மீளக் குடியர்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் கீரிமலை கூவில் கிராமத்தில் 13.4.2014 இல் மேற் கொள்ளப்பட்ட சேவை தொடர்பில் பிரதேசத்தில் சாயியின் செய்தி, பிரார்த்தனை, மருத்துவ முகாம், சர்வமதப்பிரியர் சாயி பாபா வீடியோ படக்காட்சி, உலர் உணவு அடங்கிய அன்புப் பொதி விநியோகம், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணம் வழங்கல் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. அரியாலை பூம்புகார் கிராமத்தில் சாயி நிறுவனங்களின் ஏற்பாட்டில் 35 குடும்பங்களின் தேவைக்காக குடிநீர் விநியோகிக்கும் சேவை 29.03.2014 திகதியன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 24 குழாய் பைப் இடப்பட்டு வீட்டிற்கு வீடு தண்ணீர் வழங்கும் திட்டமாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. 26.2.2014 அன்று அன்புவார இறுதி நிகழ்வு இடம்பெற்றது. 500 மாணவர்களுக்கு பரிசில்களும், 600 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இந் நிகழ்விற்கு வடமாகாண ஆளநரின் செயலாளர் திரு.இளங்கோவன் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

7. சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி தொடர்பில் நெடுந்தீவு மகளிர் கல்லூரி மற்றும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயங்களைச் சேர்ந்த 90 மாணவர்களுக்கும். காரைநகரில் டாக்டர்.தியாகராஜா வித்தியாலயத்தில் 80 மாண வர்களுக்கும், தொண்டமனாறு வீரகத்தி மகா வித்தியாலய 121 மாணவர்களுக்கு அவ் அவ் இடங்களில் பயிற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

8. ஆசிரியர்களுக்கான சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி பகுதியினரால் மேற் கொள்ளப்பட்ட பயிற்சிகளில் தீவக வலயத்திற்கான பயிற்சி நெடுந்தீவில் இடம் பெற்றது. இதில் அதிபர் உட்பட 25 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் , வலிகாம வலயத்திற்கான பயிற்சி சங்கானையில் இடம்பெற்றது. இதில் 119 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆராதனா பொதுநிகழ்வு - வடபிராந்தியம்




மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையின் பண்பு விருத்தி வியைாட்டு விழா 2014




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய சாயி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா - 2014

## வவுனியா சாயி நிலையம் - வடமத்திய பிராந்தியம்




வவுனியா சாயி நிலையம் முகப்பு தோற்றம்



வவுனியா சாயி நிலைய பிரார்த்தனை மண்டபம்




இந்திய அரசால் பகவான் பாபாவின் அவதார தினத்தையொட்டி வெளியீடு செய்யப்பட்ட தபால் உறை மற்றும் தபால் தலை




MATHI COLOURS
Nallur 021 2229285





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org